விலை ரூபா 20
பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 | கதிர் 203 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆனி 02, வியாழக்கிழமை 16.06.2016

கம நலம்
கொவிசெத Govisetha
அதிக கோடீஸ்வரர்களை உருவாக்கும் கொவிசெத
இன்றைய சுப்பர் பரிசு
ரூபா. 47,889,964.00
நம்பிக்கையுடன் வாங்குங்கள்
NATIONAL LOTTERIES BOARD

# வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை அரசு

## அமெரிக்காவில் சுமந்திரன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூன் 16
அரசு உறுதியளித்த மறுசீரமைப்பு தொடர்பான செயற்பாடுகள் மந்த கதியிலேயே முன்னெடுக்கப்படுகின்றன என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அமெரிக்காவில் குற்றஞ்சாட்டியுள்ளார்.
அமெரிக்கக் காங்கிரஸின் ஏற்பாட்டில், வொசிங்டனில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற நிகழ்விலேயே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்ததாவது:
ஆட்சி மாற்றத்தின் பின்னர் சொற்ப அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், உண்மையான மாற்றங்களை எதிர்பார்த்து காத்திருந்த மக்களுக்கு, அரசு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.
குறிப்பாகக் காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை போன்ற அரசால் நிறைவேற்றப்படக்கூடிய விடயங்கள்கூட இழுத்தடிக்கப்படுகின்றன. அத்தோடு, போர்க்குற்ற விசாரணை மற்றும் காணாமற்போனோர் பக்.23



## எவ்.சி.ஐ.டிக்கு பதிலாக புது விசாரணை அலகு

*வருட இறுதிக்குள் நிறுவப்படும் என்கிறார் அமைச்சர் ராஜித*

கொழும்பு, ஜூன் 16
நிதி மோசடி விசாரணைப் பிரிவுக்கு (எவ்.சி.ஐ.டி) பதிலாக, அதைவிட அதிகாரமும், பணிகளும் விரிவாக்கப்பட்ட விசாரணை அலுவலகம் வருட இறுதிக்குள் நிறுவப்படும்.
இவ்வாறு சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.
நிதி மோசடி விசாரணைப் பிரிவு கலைக்கப்படவுள்ளதாக வெளியாகும் தகவல் குறித்து அரச தகவல் திணைக்களத்தில் நேற்று பக்.25

# சிறுபான்மையினருக்கு முன்னுரிமை அவசியம்

## அதுவே சுவிஸ் நாட்டின் எண்ணம் என வடக்கு முதலமைச்சரிடம் எடுத்துரைத்தார் தூதுவர்



யாழ்ப்பாணம், ஜூன் 16
சிறுபான்மை இனத்தவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும், அவர்களை வலுவானவர்களாக்க வேண்டும் என்ற எண்ணமே சுவிஸ் மக்களிடமும், அரசிடமும் இருக்கின்றது. இவ்வாறான மனநிலை, புதிய அரசமைப்பை உருவாக்கும் இலங்கையிலும் உருவாக வேண்டும்.
இவ்வாறு இலங்கைக்கான சுவிஸ் தூதுவர், வடக்கு மாகாண பக்.23

# இம்முறையும் கொழும்புக்கு ஜெனிவா அவகாசம் தரும்

## முற்கூட்டியே நம்பிக்கை வெளியிட்டார் ராஜித

கொழும்பு, ஜூன் 16
ஐ.நா. மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரை மிக இலகுவாக எதிர்கொள்வோம் எனச் சுகாதார அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித சேனாரத்ன நம்பிக்கை தெரிவித்தார்.
சர்வதேச நாடுகள் இலங்கை அரசு மீதும், ஜனாதிபதி மீதும் நம்பிக்கை கொண்டுள்ளன. அதனால், இந்த முறையும் போதுமான கால அவகாசத்தை ஐ.நா. மனித உரிமைகள் சபை வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற பக்.25

முச்சந்தி முரளி



தெற்கிலே எல்லாம் தீ பிடிக்குதாம். ஏதேனும் சதியாய் இருக்குமோ...

# சிமெந்துக் கூட்டுத்தாபனக் காணியில் 400 குடும்பங்களை குடியமர்த்த முடிவு

## வலி.வடக்கு மீள்குடியமர்வில் சிறு முன்னேற்ற நகர்வு

கொழும்பு, ஜூன் 16
வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களில், காணி இல்லாதவர்களுக்கு காணி வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலைக்குச் சொந்தமான 65 ஹெக்டேயர் நிலப்பரப்பை அரசுடைமையாக்கி, நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள காணி இல்லாதவர்களுக்கு அவற்றை வழங்கும் பத்திரத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
இந்த மக்களை மீள்குடியமர்த்து பக்.25

# வித்தியா படுகொலையை கண்டவர்கள் சாட்சியமளிக்கலாம்

## பாதுகாப்பளிக்கவும் முடியுமென ஊர்காவற்றுறை நீதிவான் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
புங்குடுதீவு மாணவி வித்தியா வழக்கில், வன்புணர்வு மற்றும் அதனுடன் தொடர்புடைய சம்பவங்களைப் பற்றிப் பொதுமக்களில் எவருக்காவது தெரிந்திருந்து அது பற்றிச் சாட்சியமளிக்க விரும்பினால், முன்வருமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் நேற்று அறிவித்தது.
அவ்வாறு சாட்சி மளிப்பவர்களுக் பக்.25

# மாணவரின் ஆர்ப்பாட்டத்தில் கண்ணீர்ப் புகைத் தாக்குதல்

## நான்கு பேர் படுகாயம்; மூவர் கைது



கொழும்பு, ஜூன் 16
நீதிமன்ற உத்தரவை மீறி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பல்கலைக்கழக மாணவர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகைத் தாக்குதல் நடத்தினர். இதில் நான்கு மாணவர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூன்று மாணவிகள் பொலிஸா பக்.25

# கொழும்பு துறைமுகத்தில் கப்பல் ஒன்றில் திடீர்த் தீ




கொழும்பு, ஜூன் 16
கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பல் ஒன்றின் கொள் பக்.25

வித்தியா கொலை வழக்கு

# மரபணு அறிக்கை வெளியாவது தாமதம்

யாழ்ப்பாணம், ஜூன் 16
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டு வன்புணர்வின் பின்னர் படு கொலை செய்யப்பட்டமை குறித்த வழக்கில் மரபணுப் பரிசோதனை அறிக்கை நீதிமன்றுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது. எனினும் அதுபற்றிய முடிவைத் தற்போது மன்றில் தெரிவிக்க முடியாது என்று ஊர்காவற்றுறை நீதிவான் நேற்றுத் தெரி பக்.23

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட்டக்கச்சிப் பண்ணையில் தேவையற்று பணம் அறவீடு

## பணிபுரியும் பணியாளர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஜூன் 16

கிளிநொச்சி, வட்டக்கச்சியிலுள்ள சிவில் பாதுகாப்புப் படையின் பண்ணையில் பணிபுரியும் ஊழியர்களிடம் இருந்து சிவில் பாதுகாப்புப் படையினர் தேவையற்ற கட்டணங்கள் அறவிடுகின்றனர் என்று பாதிக்கப்பட்ட ஊழியர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட கட்டளைத் தளபதி சாகரசிங்கவின் பணிப்புக்கு அமையவட்டக்கச்சிபண்ணைப் பொறுப்பதிகாரி கனீபாவே இவ்வாறு தேவையற்ற விதத்தில் பணம் அறவிடுகின்றார் என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

“கிளிநொச்சி சிவில் பாதுகாப்பு படையில் பணிபுரியும் எமக்குமாதாந்தம் 32 ஆயிரம் ரூபா சம்பளம் கிடைக்கின்றது. அதனால் நாம் அரச உத்தியோகத்தர்கள் என கூறப்பட்டு எமக்கான சமுர்த்தி மற்றும் வாழ்வாதாரங்கள் எவையும் வழங்கப்படுவதில்லை. இங்குகிடைக்கும் பணத்திலேயே எமது குடும்பத்திற்குத் தேவையான வாழ்வாதாரத்தை பூர்த்திசெய்துகொள்கின்றோம். இந்த நிலையில் எமது மாதாந்த வருமானத்தில் இருந்து வருமானப் பணம் எனக் கூறி 2 ஆயிரத்து 500 ரூபாவும், டீசல் பணம் எனக் கூறி 200 ரூபாவும், அதிர்ஷ்டலாபச் சீட்டு ரிக்கற் 600 என்றபோதும் 1000 ரூபாவும், கோவில் கட்டுவதற்கு என 100 ரூபாவுமாக மொத்தமாக 5 ஆயிரம் ரூபாவை வட்டக்கச்சி பண்ணைப் பொறுப்பதிகாரி எம்மிடம் இருந்துபெற்றுக்கொள்கின்றார். கட்டளைத் தளபதிகளுக்குப் பிறந்த நாள் என்று கூறி பிறிதாக 500 ரூபா பணத்தையும் அறவிடுகிறார்கள். இது குறித்துக் கேட்டால், தர முடியாவிட்டால் கடிதம் எழுதித் தருமாறும் இல்லையெனில் இடமாற்றம் அல்லது பணிநீக்கம் செய்யப்படுவோம் எனவும் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்” என்று ஊழியர்கள் தெரிவித்தனர். “குறித்த பண்ணையில் இவ்வாறான சம்பவம் இடம்பெறவில்லை. சம் பளப் பணம் பறிக்கப்படுவதில்லை. இது தவறான தகவல். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிக் கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவற்றுக்கான விசாரணைகளை உடனேயே மேற்கொள்வேன்” என்று கிளிநொச்சி மாவ ட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சாகரவீரசிங்க தெரிவித்தார்.

வட்டக்கச்சிப் பண்ணைப்பொறுப்பதிகாரி கனீபாவைத் தொடர்பு கொண்ட போதும் தொலைபேசி இணைப்புக் கிடைக்கவில்லை. (ற-21,ரி3,ரி4)



# உலகில் பேசப்படும் தலைவர்களில் வடக்கின் முதலமைச்சரும் ஒருவர்

## இப்படிச் சொல்கிறார் கல்வி இராஜாங்க அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இன்று உலகில் பேசப்படுகின்ற தலைவர்கள் பலர் இருக்கின்றார்கள். இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி பரக் ஒபாமா ஆகியோரைக் குறிப்பிடலாம். அதே வரிசையில்தான் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இருக்கின்றார்.

இவ்வாறு கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.

கல்வி அமைச்சின் மூலம் முன்னெடுக்கப்படும் அருகில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை எனும் வேலைத் திட்டத்தின் தமிழ் மொழி மூல பாடசாலைகளுக்கான தேசிய நிகழ்வு கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு முன்பதாக பரந்தன் தமிழ் மகா வித்தியாலயத்தின் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இடம்பெற்றது.

அந்த நிகழ்விலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

30 வருட கால போரின் பின்பு வட மாகாணத்தில் தேசிய கல்வி நிகழ்வுகள் இடம்பெறவில்லை. அதனாலேயே இங்கு இதனை ஏற்பாடு செய்துள்ளோம். இனி வரும் காலங்களில் கல்வி அமைச்சில் நடைபெறுகின்ற தேசிய நிகழ்வுகள் எல்லாமே இரண்டு மொழிகளிலும் தனித்தனியாக நடைபெறும்.

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் முதற்கட்டமாக 644 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. அதற்காக 4 ஆயிரத்து 130 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பாடசாலைகளும், மன்னார் மாவட்டத்தில் 97 பாடசாலைகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 77 பாடசாலைகளும், வவுனியா மாவட்டத்தில் 129 பாடசாலைகளும், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 279 பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

அகில இலங்கை ரீதியில் தமிழ் சிங்கள மொழி மூலமான பாடசாலைகளில் முதற் கட்டமாக 7 ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்த திட்டத்தின் முதன்மை நோக்கம் கொழும்பு போன்ற நகரங்களில் உள்ள பாடசாலைகளில் இருக்கின்ற அதே வளங்களை ஏனையவற்றுக்கும் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்பதே. பாடசாலையில் குறைபாடுகள் நிலவுமாக இருந்தால் மாணவர்களால் கல்வியை சரியாகக்கற்க முடியாது. அதனைத் தீர்த்து வைக்க வேண்டிய பொறுப்பு அரசுடையது.

வட மாகாணத்தைப் பொறுத்த வரையில் மாகாண கல்வி அமைச்சிற்கு இருக்கின்ற பிரச்சினை இங்கு கடமைபுரிகின்ற தொண்டர் ஆசிரியர்களின் நியமனமாகும். அதற்கு தற்பொழுது தீர்வு காணப்பட்டுள்ளது. நியமனத்தை மிக விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அவர்களின் நியமனங்களின் பின்பு இன்னும் வட மாகாணம் கல்வித்துறையில் வேகமாக முன்னேற்றமடைய முடியுமென்றநம்பிக்கை எனக்கு இருக்கின்றது- என்றார். (ற-5)



மயிலிட்டி - பலாலியிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்து நேற்றுடன் 26 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் நடத்தப்பட்டன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் மற்றும் வலி.வடக்கு மீள் குடியேற்ற, புனர்வாழ்வுக் குழுவினர் ஆகியோரும் அவற்றில் கலந்து கொண்டனர். (ற-5)

# பெண்கள் கழிப்பறை முன் பொருத்தப்பட்ட கமராவால் சர்ச்சை

யாழ். கல்வி வலயத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் பெண்கள் கழிப்பறையின் முன்பாக சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மாகாண கல்வி திணைக்களத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

உயர்தரம் வரை வகுப்புக்கள் உள்ள பாடசாலையில் பல இடங்களிலும் கடந்த ஆண்டு இறுதியில் சி.சி.ரி.வி. கமரா பொருத்தப்பட்டது. அதன் போது ஒரு கமரா பெண்கள் கழிப்பறை முன்பாகவும் பொருத்தப்பட்டது. அது தொடர்பில் சர்ச்சையும் எழுந்தது.

இந்த நிலையில் பெண் ஆசிரியர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை மாகாண கல்வித்திணைக்களத்தின் கவனத்துக்கு இதனைக் கொண்டுசென்றார். வேறு பணி நிமித்தம் அங்கு சென்றிருந்த மாகாணத் திணைக்களத்தினர் குறித்த கமராவைக் கண்டு விசாரித்துள்ளனர். கமராவினைப் பொருத்திய அதிபர் தனிப்பட்ட காரணத்துக்காக விடுமுறையில் உள்ளதால், வந்த பின்னர் அது பற்றிய விளக்கம் கேட்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-101)

# பயிற்சி முடிந்த அதிபர்களுக்கு நாளை தர உறுதிக் கடிதங்கள்

அச்சுவேலி, ஜூன் 16


இலங்கை அதிபர் சேவை தரம் 3 பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்டு பயிற்சியை நிறைவு செய்தவர்களுக்கு நாளை 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொழும்பில் தர உறுதிக் கடிதங்கள் கையளிக்கப்படவுள்ளன. இவர்களுக்கு வழங்கப்பட்ட சேவை முற் பயிற்சியின் மதிப்பீட்டுப் பரீட்சை எதிர் வரும் 25ஆம் திகதி சனிக்கிழமை பயிற்சி நடைபெற்ற மத்திய நிலையங்களில் நடைபெறவுள்ளது. நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 4 ஆயிரம் அதிபர்களுக்கு 84 நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. வடக்கு மாகாணத்தில் 398 பேர் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். இவர்களுக்கு 8 நிலையங்களில் வைத்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இலங்கை அதிபர் சேவைக்கு 2007ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் நடைமுறைக்கு வரும் புதிய சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஆசிரியர் சேவையில் உள்ளவர்களில் இருந்து போட்டிப் பரீட்சை, நேர் முகப்பரீட்சை மூலம் 4 ஆயிரம் ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுக்கு மே மாதம் 9ஆம் திகதி தொடக்கம் ஜூன் 17ஆம் திகதி வரை 30 வேலை நாள்கள், சேவை முன் பயிற்சி வழங்கப்பட்டது.

இவர்களுக்கு கல்வி அமைச்சு வழங்கும் தர உறுதிக் கடிதம் மே 9 ஆம் திகதியிலிருந்து செல்லுபடியாகும் வகையில் வழங்கப்படவுள்ளது. இவர்கள் பதவிக்கு நியமிக்கப்படவிருக்கும் மாகாணங்கள் குறித்து ஒதுக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான பாடசாலை தர உறுதிக் கடிங்களை மாகாண கல்வியமைச்சு வழங்கவுள்ளது. இலங்கை ஆசிரியர் சேவையில் 4 ஆயிரம் பேர் இந்தப் பயிற்சிக்கூடாக அதிபர் சேவை தரம் மூன்று பதவிக்கு நியமிக்கப்படுகின்றனர் இவர்கள் அதிபர் சேவை ஆளணியின் 30 சத வீதமாவர். (ற-11)


தேசிய போசணை மாதம் ஜூன் - 2016

மரக்கறி வகைகளும் பழங்களும் இதயத்தின் நண்பர்கள் அதிக இனிப்பு, அதிக உப்பு, அதிக எண்ணெய்ப் பண்டங்கள் இதயத்தின் எதிரிகள்.



மன்னார் கல்வி வலயத்தின் ஆசிரியர் மாநாடு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமானது. அதை முன்னிட்டு நேற்றுக் காலை மன்-அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையில் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செலின் சுகந்தி செபஸ்ரியன் தலைமையில் கண்காட்சி உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. 'வித்துவம்' நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதை மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் வைபவ ரீதியாக வெளியிட்டார். அத்துடன் ஆசிரியர்களும் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ற-21,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வேலையாள் தேவை

அச்சக வேலைக்கு வேலை தெரிந்த பெண் பிள்ளைகள் விரும்பத்தக்கது.
புத்தகம் கட்டுநர் (வைன்டிங்)

விக்ரோறியா றோட், ஆஸ்பத்திரி பின் வீதி,
குமார் பேபி சிற்றி கெயர்
077 392 0797

## காணி விற்பனைக்கு உண்டு

பெரியவிளான் ¼ kmருக்கு அருகில் உள்ள தெல்லிப்பழை வீதியில் மெயின்றோட் அருகில் வற்றாத வெட்டுக் கிணற்றுடன் 40 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
ம.அருளப்பு- 077 945 9186

## கணக்காளர் தேவை

யாழ் நகரில் இயங்கி வருகின்ற பிரபல தனியார் நிறுவனத்திற்கு முன் அனுபவம் உள்ள கணக்காளர் தேவை.
தகுதியானவர்கள் கீழ்வரும் முகவரிக்கு சுய விவரக் கோவையினை அனுப்பவும்
Email- pillaiyar.in@gmail.com
or
பிள்ளையார் இன்
இல.31, மானிப்பாய் வீதி,யாழ்ப்பாணம்.

## காணி விற்பனைக்குண்டு

மல்லாகம், கே.கே.எஸ் வீதியில் (சோடாக் கம்பனி ஒழுங்கை அருகில்) 2½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு
077 753 2994

## இந்திய சாஸ்திரியார் வருகை

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு மீண்டும் வருகை தந்துள்ளார் ஓம் சக்தி அருள் வாக்குப் பெற்ற பரம்பரை ஜோதிடர்

**S.N. குமாரசாமி**

கைரேகை,ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத்தடை, கல்வித் தடையா, குழந்தைப் பாக்கியம் மற்றும் புதிய தொழில் தொடங்க வேண்டுமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? குடும்பப் பிரார்ச்சினையா? வெளிநாடு செல்லத் தடையா? மன உளைச்சலா? எந்தப் பிரச்சினைக்கும் நேரில் சந்திக்கவும்.

காலை 9 மணி முதல் மாலை 3.00 மணிவரை.

பீப்பிள்ஸ் இன்
112/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்
T.P: 072 681 6681, 072 681 6691

## வேலையாள்கள் தேவை

- உள்ளூர் டெலிவரி லொறி டிரைவர் தேவை (வயது 25 -50) வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்.
- கடைக்கு சிற்றூழியர்கள் தேவை. வடமராட்சியில் வசிப்பவர்கள் மட்டும்.

தொடர்பு: ஜமுனா ஸ்ரோர்ஸ்
39, பிரதான வீதி, நெல்லியடி.
தொலைபேசி இல. 077 742 2604

## வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபை மானிப்பாய்கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர்மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 11**
**ஆதன இலக்கம் :- 13B (புதிய இலக்கம்)**
**பொன்னுச்சாமி ஒழுங்கை**
**கிராமசேவையாளர் பிரிவு :- J/136 நவாலி தெற்கு**

வட்டாரம் 11 பொன்னுச்சாமி ஒழுங்கை ஆதனஇலக்கம் 13B (புதிய இலக்கம்) இல் அமைந்துள்ள (உறுதிப்படி வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்கு பகுதி மானிப்பாய் கோவிற்பற்று நவாலி இறை "வன்னலித் தோட்டம்" என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 01 குளி 08.69 கொண்ட, இவ்வாதனமானது கலையரசு வீதி,நவாலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த கந்தாசாமி சத்தியசீலன் பெண் இராசம்மா ஆகிய அவர்களால் அதே இடத்தைச் சேர்ந்த குகலோஜன் கைம்பெண் தனலக்சுமி அவர்களுக்கு பிரசித்த நொத்தாரிஸ் திரு.மா.தியாகராஜா அவர்களால் எழுதப்பட்ட 13030 ஆம் இலக்க 18.03.2011 ஆம் திகதிய அறுதி உறுதிப்படி தமக்கு சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை) ஆதனப்பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. கே. பரமேஸ்வரன் அவர்களால் வரையப்பட்ட 1344/2013 ஆம் இலக்க 2013.04.04 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது " வன்னலித் தோட்டம்" நிலப்பரப்பு 01 குளி 08.69 கொண்ட ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பான ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 14 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்,அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குகலோஜன் கைம்பெண் தனலக்சுமி என்பவருடைய பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

## விற்பனையாகிறது !

மாணவர்களுக்கான இரண்டாம் தவணை பரீட்சை மாதிரி வினாத்தாள்கள்
தரம் 1, தரம் 2, தரம் 3, தரம் 4, தரம் 5

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், நுண்ணறிவு, இந்துசமயம், இஸ்லாம்,கத்தோலிக்க திருமறை ஆகிய பாடங்கள், விடையுடன்

நாடளாவியரீதியில் 16ற்கு மேற்பட்ட முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில்

**யாழ் எக்ஸ்பிரஸ்**

தரம் 5 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

வெளியீடு :
யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன்
தொ.பே : 077 6258778

எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்

# Invitation for Bids (IFB)

*(GOSL FUNDED PROJECTS)*

**District Secretariat, Jaffna.**

1. The Chairman District Secretariat Procurement Committee(DPC), on behalf of District Secretariat invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.
2. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and as per the Public Finance Circular No: 04/2016 dated 16th March 2016, this IFB is limited for the Bidders who have been required valid CIDAC5 registration as mentioned below in the table and possess valid business or company registration within Northern Province.
4. Interested bidders may obtain further information from Road Development Department and inspect the bidding documents at the address given below **Provincial Directors Office, Road Development Department, 657/1A Beach, Gurunagar. from 8.30 am to 3.00 pm.**
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Provincial Director, Road Development Department, 657/1A Beach, Gurunagar**.from16.06.2016 until 30.06.2016 **from 09.00 hrs to 14.00 hrs**.Upon payment of a non refundable fee of thousand Rupees. (Rs.1,000.00). The method of payment will be **by cash**.
6. Bids shall be delivered to the address at **District Secretariat, Kandy Road, Jaffna** *on***or** before 1st July 2016 and 02.30pm. Late bids will be rejected. Bids will be opened at above place soon after closing in the presence of the bidders' representatives who choose to attend.
7. Bid shall be valid up to **12th August 2016.**
8. All bids shall be accompanied by a *"Bid-Security,*as in the table below.
9. One Bidder is entitled to award maximum three works at a time in the Road Development Department, Northern Province
10. The pre-bid meeting will be held on **23.06.2016** at **15.00 Hrs** at the **Provincial Director's Office, Road Development Department, 657/1ABeach Road, Gurunagar.**

| S. No | Contract No. | Name of the Contract | Estimated Cost (RsMn) | ICTAD Grade Required | Required Bid Security | | Contract period |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Bond Amount (Rs.) | Validity Period | |
| 01 | NP/RDD/JF/SP/2016/01R | Reconstruction of causeway at Eluvaithivu | 25.70 | C5 | 260,000.00 | 09.09.2016 | 120 days |

The address (es) referred to above is (are):

**N. Vethanayahan**
Government Agent / District Secretary,
Jaffna District.

## நைஜீரியா வேலைவாய்ப்பு

Civil Electro mechanical project in Fertilizer plant of Dankote Group in Nigeria

நைஜீரியாவிலுள்ள நிறுவனம் ஒன்றிற்கு கீழ்கண்ட வேலைகளுக்கு தகுதியானவர்கள் உடனடியாகத் தேவை. விருப்பம் உள்ளோர் பாஸ்போர்ட் சான்றிதழ் CV ஆகியவற்றுடன் உடனடியாக எமது காரியாலயத்தில் பதிவு செய்யவும்.

| Category | Qty | Salary (Rs.) | Salary (SR) |
|---|---|---|---|
| Engineer - Piping 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Structural 10 yrs+/BE Mech | 12 | 220000-275000 | 1500-1900 |
| Engr - QAQC 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Mech Planning 10 yrs+/BE Mech | 08 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Mech 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Elect 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engineer - Instr 10 yrs+/BE Mech | 10 | 220000-275000 | 1500-1900 |
| Engr - Painting & Blasting 10 yrs+/BE Mech | 08 | 220000-275000 | 1500-1900 |
| Sand Blasting Supervisor 8 yrs + Diploma | 10 | 110000-135000 | 750-930 |
| Engr - Refractory/Insulation 10 yrs+/BE Mech+ Certified | 08 | 220000-275000 | 1500-1900 |
| Pipe Fitter Tech Certified | 35 | 50000-65000 | 350-450 |
| Pipe Fabricator Tech Certified | 40 | 50000-65000 | 350-450 |
| Pipe TIG & Arc Welder Tech Certified | 55 | 65000-70000 | 450-485 |
| Structural Fitter Tech Certified | 40 | 50000-58000 | 350-400 |
| Structural Fabricator Tech Certified | 40 | 50000-58000 | 350-400 |
| Structural Welder Tech Certified | 55 | 50000-58000 | 350-400 |
| MIG Welder Tech Certified | 50 | 50000-58000 | 350-400 |
| Gas Cutter Tech Certified | 35 | 45000 | 310 |
| Grinder Tech Certified | 35 | 45000 | 310 |
| Milwright Fitter Tech Certified | 25 | 50000-65000 | 350-450 |
| Milwright Foreman 8 yrs + Diploma | 15 | 105000-125000 | 725-850 |
| Rigger 3 yrs | 50 | 43000 | 300 |
| Rigger Foreman 8 yrs + Diploma | 15 | 105000-125000 | 750-850 |
| Welder Foreman 8 yrs + Diploma | 15 | 110000-135000 | 850-930 |
| Supervisor 8 yrs + Diploma | 10 | 105000-125000 | 750-860 |
| Manager - All Categories 15 yrs + Degree | 15 | 145000-160000 | 1000-1100 |

நிபந்தனைகள்
CV Collection Only, No charges apply

உணவு, தங்குமிடம், மருத்துவம் இலவசம். வேலை நேரம் 8 மணித்தியாலங்கள் வாரத்திற்கு 48 மணித்தியாலங்கள். ஒப்பந்தக்காலம் 2 வருடம். இருவழி விமான டிக்கட் இலவசம் மற்றும் அனைத்து நிபந்தனைகளும் நைஜீரியா நாட்டின் சட்டத்திற்கு அமைவாக

AL/Advt/701/29/16

Piccaso Adz

**தனா மேன் பவர்**
இல.104, செட்டியார் தெரு, 2ம் மாடி, கொழும்பு 11.
T.P: 0112 33 33 46/7/8/9 Fax. 0112 33 51 00 Mobile No. 0722 460046 / 0722 430043
E-Mail: danamanpower@yahoo.com Web: www.danamanpower.com

## ரயிலில் மோதி மாடு சாவு

சாவகச்சேரி, ஜூன் 16

தண்டவாளத் தைக் கடக்க முயன்ற பசு மாடு ரயிலில் மோதுண்டு சாவடைந்தது.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் சாவகச்சேரி சங்கத்தானையில் நடந்துள்ளது.

கடந்த வாரம் ரயிலில் மோதுண்டு நான்கு மாடுகள் சாவடைந்த இடத்திற்குமிக அண்மையில் நேற்று இடம் பெற்றது.

நகரசபை ஊழியர்களால்மாட்டின்உடல் அப்புறப்படுத்தப்பட்டு புதைக்கப்பட்டது.

ரயில்வரும்வேளைகளில் மாடுகளை வீதியில் விடவேண்டாம் என்றும் ரயிலில் மோதுண்டு சாவடையும் கால்நடைகளின்உரிமையாளர் நட்டஈடு செலுத்த வேண்டி வரும் எனவும் ரயில்வே திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் அடிக்கடி மாடுகள் ரயிலில் மோதுண்டு சாவடைந்து உரிமை கோரப்படாத நிலையில் புதைக்கப்பட்டு வருகின்றன. (ற-9)

## முகாமைத்துவ டிப்ளோமா பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடத்தின் டிப்ளோமா பரீட்சைகள் எதிர்வரும் 25, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன என்று இணைப்பாளர் பேராசிரியர் க.தேவராஜா தெரிவித்துள்ளார்.

மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா, சந்தைப்படுத்தல்முகாமைத்துவ டிப்ளோமா ஆகியவற்றுக்கான பரீட்சைகளே நடைபெறவுள்ளன.

பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் உடனடியாக விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ற-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளம், மண் சரிவுக்கு ஆட்சிதான் காரணமாம்

### ஜப்பான் விகாராதிபதி கண்டுபிடிப்பு

கொழும்பு, ஜூன் 16

இலங்கையில் அநீதியான ஆட்சி நடைபெறுகிறது. மகிந்த போன்ற நன்னெறியான தலைவர்களே தேவை.

இவ்வாறு ஜப்பானின் குபோ விகாரையின் விகாராதிபதி நாகிம் பாகேனா தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை தோற்கடித்து உலகின் சிறந்த தலைவரான மகிந்த ராஜபக்சவுக்கு பாதுகாப்பளிப்பது ஜப்பானின் கடமை என்றும் விகாராதிபதி குறிப்பிட்டார்.

மகிந்த ராஜபக்ச ஜப்பானின் குபோ விகாரையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மத அனுட்பானங்களில்கலந்துகொண்டார்.

இதன்போதே விகாராதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் அநீதியான ஆட்சி நடக்கும் போது வெள்ளம், மண்சரிவு போன்ற இயற்கை இடர்கள் ஏற்படும் என்று பௌத்த மதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்று இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை இடர்களுக்கு இதுவே காரணம்.

எனவே இலங்கையில் மீண்டும் நன்னெறி ஆட்சி நடக்க வேண்டும். அதற்காக மகிந்த மீண்டும் ஜனாதிபதியாக வர வேண்டும். ஜப்பான் மக்களால் அதற்கு முழு ஆதரவு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ந-5)

# மைத்திரி தலைமையில் இலங்கை முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இலங்கை சர்வதேச சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது என்று அரசியல் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

இவ்வாறு ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பு தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-வெளிநாட்டு உறவுகளில் இலங்கை அடைந்துள்ள வெற்றிகள் பற்றி மீளாய்வு செய்யும் நோக்கில் 'பூலோக செயற்பாடுகளில் இலங்கை 2015 ஜனவரி முதல் கடந்து வந்த பாதை' எனும் தொனிப் பொருளில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடை பெற்ற புலமைத்துவக் கலந் துரையாடலின்போதே இவ்வாறு சுட்டிக் காட்டப்பட்டது.

அதில் முக்கிய உரையை நெதர்லாந்து அம்ஸ்ரடெம் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ராம் மாணிக்கலிங்கம் நிகழ்த்தினார்.

"ஜனநாயகத்திற்காக உண்மையிலேயே தன்னை அர்ப்பணித்த ஒரு தலைவர் இருப்பது பற்றி இலங்கையர்கள் என்ற ரீதியில் அனைவரும் பெருமைப்பட வேண்டும்.

இலங்கை பெற்றுக் கொண்ட அரசியல் மற்றும் போர் அனுபவங்களை உலகில் ஜனநாயகத்தைப் போற்றும் நாடுகளுடன் பகிர்ந்து கொள்ள முடியும். வன்முறையாகவும் தீவிரவாதமாகவும் விருத்தியடைந்து வந்த ஏகாதிபத்தியத்தின் முன்னிலையில் இலங்கை எதிர்நோக்கிய அனுபவங்கள் மிகவும் முக்கியமானதாகும்.

உலகில் ஒரு சில தலைவர்கள் தமது அதிகாரத்தைக் கூட்டிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டுவரும்வேளை தனது பதவிக் காலத்தை குறைத்துக் கொள்வதற்கும் அதிகாரத்தை குறைத்துக் கொள்வதற்கும் 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முன்வைப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால நடவடிக்கை மேற்கொண்டார்.

இலங்கையை வன்முறைகள் அற்ற மற்றும் இன ரீதியாகவோ அல்லது மத ரீதியாகவோ வேறுபடாத ஒரு நாடாக கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டம் போற்றத் தக்கது.

மனித உரிமைகள், ஜனநாயகம் மற்றும் நிலையான அபிவிருத்தி என்பன தொடர்பான எண்ணக் கருவினை மேம்படுத்துவதற்காக இலங்கையும் செயற்பட முடியும்" - என்றார் ராம் மாணிக்கம்.

"இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது தேசிய ரீதியிலான அபிலாசைகளினால் நிர்ணயிக்கப்பட்ட யதார்த்தமான ஒரு வெளிநாட்டுக் கொள்கையாக அமைய வேண்டும். விசேடமாக போருக்குப் பின்னரான காலத்தில் இவ்வாறான ஒரு கொள்கையே பின்பற்றப்பட வேண்டும்.

ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டம் மற்றும் கொள்கை வெளியீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆசியாவை கேந்திர நிலையமாகக் கொண்ட நடுநிலையான வெளிநாட்டுக் கொள்கை இலங்கைக்குப் பொருத்தமாகும். நாம் தொடர்ந்தும் பூகோள ரீதியான தெற்கின் உரையாடலை முன்னெடுத்துச் செல்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" - என்று தெரிவித்தார் கலாநிதி தயான் ஜயதிலக்க.

"அரசியலில் கூட்டமைப்புக்கள் முறிவடைதல் மற்றும் புதிய கூட்டமைப்புக்கள் உருவாகுதல் சாதாரண நிகழ்வு. ஆயினும் ஜனவரி 8 ஆம் திகதி நாட்டுக்குத் தேவையான மாற்றத்திற்காக கட்டியெழுப்பப்பட்ட கூட்டமைப்பை மறந்து விடாமல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்" என்றார்- பேராசிரியர் ஜயதேவ உயன்கொட

"மக்களுக்கு நிவாரணம் வழங்கும்போது வடக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாத்திரமன்றி தெற்கில் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி நடவடிக்கை மேற்கொள்வது முக்கியமானது" - என்றார் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ. (ந-5)




# இலங்கை - துருக்கி உறவை மேம்படுத்துவது பற்றி பேச்சு

கொழும்பு, ஜூன் 16

துருக்கி-இலங்கை ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவுடனான சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. அத்துடன் துருக்கியின் முதலீடுகளை இங்கு அதிகரிப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

இரண்டுநாள் உத்தியோக பூர்வ பயணத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள துருக்கி வெளிநாட்டு அமைச்சர் மெவுலட் கௌசோக்லு நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது :-

துருக்கி-இலங்கை ஒத்துழைப்பை அதிகரிப்பது தொடர்பில் இங்கு விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டது.

எதிர்காலத்தில் இலங்கையானது பொருளாதார ரீதியில் பல்வேறு வெற்றிகளை அடைய முடியும் என்று தெரிவித்த துருக்கி வெளிநாட்டு அமைச்சர் இதற்காக துருக்கி அரசால் வழங்க முடியுமான சகல உதவிகளும் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார்.

இரு நாடுகளுக்கும் இடையே நிலவும் நட்புறவைத் தொடர்ந்தும் அதிகரிப்பது தொடர்பிலும் இங்கு கலந்துரையாடப்பட்டது - என்றுள்ளது. (ந-5)







# நளினி தாக்கல் செய்த மனுவுக்கு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவு

## தமிழக அரசுக்கு உயர்நீதிமன்றம் விடுத்தது

இந்தியப் பிரதமர் ராஜிவ்காந்தி கொலைக் குற்றவாளியான நளினி, தனது விடுதலை தொடர்பில் தொடர்ந்த வழக்கு குறித்து எதிர்வரும் 27ஆம் திகதிக்குள் தமிழக அரசு பதில் மனுத் தாக்கல் செய்யவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ராஜிவ் காந்தி கொலை வழக்கில் தனக்கு கீழ் நீதிமன்றம் சாவுத் தண்டனை விதித்தது என்றும், இந்திய உச்சநீதிமன்றம் இந்த தண்டனையை உறுதி செய்தது என்றும் நளினி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

2000ஆம் ஆண்டு தனக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுத்தது என்றும் அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

20 ஆண்டுகளுக்கு மேல் சிறையில் இருக்கும் ஆயுள் தண்டனைக் கைதிகளை மனிதாபிமானத்தின் அடிப்படையில் அவர்களை முன்கூட்டியே விடுதலை செய்யலாம் என்று தமிழக அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்துள்ளது என்றும் அந்த மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தமிழக அரசின் தீர்மானத்திற்கு அமைய தான் விடுதலை பெறத் தகுதியானவள் எனவும், கொலை, கொள்ளை போன்ற குற்றங்களுக்காக ஆயுள் தண்டனை பெற்ற பலர் இந்த அரசாணையின்படி முன்கூட்டியே விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் நளினி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். தன்னையும் முன்கூட்டியே விடுதலை செய்யக்கோரி கடந்த 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி தமிழக உள்துறை செயலாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டது என்றும், எனினும் அந்தக் கடிதம் இதுவரை பரிசீலிக்கப்படவில்லை எனவும் அவர் அந்த மனுவில் கூறியுள்ளார். (ந-5)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக மது விற்றவருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜூன் 16
அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் விற்பனைக்கு வைத்திருந்த மட்டுவில் வாசிக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
வீடுகளில் கூடுதலாக கள்ளு வைத்திருந்த ஆறு பேருக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது. (ற-9)

## சடலத்தைப் பொறுப்பேற்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ். போதனா வைத்தியசாலையில் மார்க்கண்டு தம்பிராஜா (வயது - 80) என்பவருடைய சடலம் உரிமைகோரப்படாத நிலையில் உள்ளது என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்தார்.
கடந்த மாதம் 30 ஆம் திகதி மு.ப .10.30 மணிக்கு சேர்க்கப்பட்ட பின், சிகிச்சை பயனளிக்காது கடந்த 11 ஆம் திகதி அதிகாலை 1.16 மணிக்கு அவர் சாவடைந்துள்ளார்.
அவரின் சடலத்தை உறவினர் அல்லது உரித்துடையோர் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-ரி)

## யாழ். தபால் ஊழியர்கள் நேற்று சட்டப்படி வேலை

யாழ்ப்பாணம், ஜூன் 16
நாடளாவிய ரீதியில் தபால் திணைக்கள ஊழியர்கள் முன்னெடுத்து வரும் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்ப்பாண தபாலக உத்தியோகத்தர்கள் நேற்று மேலதிக வேலை செய்யாமல் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
இன்று மதியமும் போராட்டத்தில் ஈடுபடுவது தொடர்பில், நேற்றுக் கலந்துரையாடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
நாடு தழுவிய போராட்டம் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டத்துக்கான 200 இற்கும் மேற்பட்ட தபால் பொதிகள் தேங்கியுள்ளன. வடமாகாணத்துக்கான தபால் சேவை மட்டும் வழமை போன்று நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-வ-4,17)

## பட்டப்பகலில் வீடு புகுந்து திருட்டு

கரணவாய், ஜூன் 16
வீட்டு உரிமையாளர்கள் சாவு வீட்டுக்குச் சென்ற சமயம் வீட்டுக்குள் நுழைந்த திருடன் வீட்டில் இருந்த புதிய தொலைக்காட்சி, தொலைபேசி, ஒரு தொகைப் பணம் என்பவற்றுடன், அங்கிருந்த சைக்கிள் ஒன்றையும் அபகரித்துச் சென்றுள்ளான் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் பருத்தித்துறை சக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.
குறித்த வீட்டில் இருப்பவர்கள் உறவினர் ஒருவரின் சாவு வீட்டுக்குச் சென்றிருந்தசமயம் வீடு புகுந்த திருடன் வீட்டில் இருந்த பொருள்களைத் திருடி சைக்கிளில் கட்டித் தப்பிச் சென்றுள்ளான்.
இந்தச்சம்பவம் தொடர்பாக, பருத்தித்துறை பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை அடுத்து, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-108)


### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



கடந்த 17.05.2016 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
**அமரர் கிட்டினர் ஆலாலசுந்தரம்** (அருமைத்துரை)
அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 14.06.2016 செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (16.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

சித்திரவேலாயுதர் கோயிலடி,
மடத்தடி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி.
குடும்பத்தினர்.
077 508 3968
(J.2115) (13.18)

### நினைவஞ்சலி



அமரர்
திருமதி பொன்னம்மா சுப்பிரமணியம்
தோற்றம் 15.05.1927 மறைவு 28.06.2015



அமரர்
கதிரவேலு சுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற உபதபாலதிபர் - கோப்பாய் வடக்கு)
தோற்றம் 08.11.1918 மறைவு 16.11.1980

திதி: 16.06.2016

மன்னிய வேதவாக்குப் பன்னிய தாயே இன்று
பன்னிரு திங்களாச்சே எம்மை நீர் விட்டுச்சென்று
மன்னர் போல் எம்மை நீங்கள் மண்ணிலே வாழச்செய்த
புன்னகை வதனம் எங்கள் சிந்தையில் குடியிருக்கும்

முந்தை நல் வினையினாலே உங்களின் பிள்ளை யென்று
சொந்தமாய் சொல்லி எம்மை வாழ்விலே உயர வைத்த
தந்தையே எம்மை நீங்கி முப்பத்தா றாண்டு மாச்சு
பந்தமும் போக மாட்டா பாரிலே உங்கள் நினைவு

துள்ளி நாம் திரிந்தபோது கல்வியைப் பெறுவதற்காய்
பள்ளியில் சேர்த்து எம்மை அறிஞராய் ஆக்கி வைத்தீர்
வெள்ளமாய் ஓடும் பாச நதியினில் நீந்தும் போது
கள்ளனாம் காலனெனும் சுழியினில் அகப்பட்டீரே.

பண்போடு கல்வி செல்வப் பேறுகள் அனைத்தும் பெற்று
மாண்புடன் மண்ணில் எம்மை வாழ்ந்திடச் செய்தீர் நன்றாய்
அன்பெனும் விதை விதைத்து இன்பமாய் வாழச் செய்தீர்
விண்ணலில் நீர் சேர்ந்ததாலே விம்மிநாம் அழுகின்றோமே

"மணிமஹால்"
சோனெழு ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்.
என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
(ஜெ.2152) (13.18)

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி டெய்சி மேரிஅக்னெஸ் குமரையா
மலர்வு 31.07.1932
உதிர்வு 16.06.2015

அன்பின் திருவுருவாய் எமக்கு
வழிகாட்டியாய் இருந்த அன்பு மம்மியே!
பாசம் நிறைந்த உங்கள் நினைவுகள்
எங்கள் உயிர் உள்ள வரை தொடரும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

c/ 2108) (12,18)

### 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 07 . 11 . 1928
மறைவு 20 . 06 . 2013



இராஜேந்திரம் இராசம்மா (அன்ரி)
திதி: வளர்பிறை துவாதசி - 16.06.2016
எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்தி
மீளாத் துயில் கொண்டு மூன்றாண்டு கடந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை
விட்டு என்றும் அகலாது
எங்களைத் தவிக்கவிட்டு ஏன் விடை பெற்றீர்கள்
அம்மா! மறப்பதற்கு முயற்சித்தோம் முடியவில்லை
உங்கள் நினைவுகள் என்றும்
எங்கள் நினைவில்.

பிரிவால் தவிக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
011 254 2488 (4.21967) (13.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரிமலையிலுள்ள சொகுசு மாளிகையை வசப்படுத்தப் பார்க்கிறது மாகாணசபை

## கடந்த அமர்வில் தீர்மானம் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

கீரிமலையிலுள்ள ஜனாதிபதி மாளிகையை, வடக்கு மாகாண சபையிடம் ஒப்படைக்கக் கோர வேண்டும் என்று மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 54 ஆவது அமர்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. அதில் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தால், வடக்கு மாகாண சபையின் வதிவிட முகாமைத்துவப் பயிற்சி நெறிகளை நடத்துவதற்கும், மாகாணத்துக்கு வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள் தங்குவதற்கும், மாநாடுகளை நடத்துவதற்கும் பொருத்தமான கட்டட வசதி எதுவும் இல்லாத நிலையைக் கருத்திற் கொண்டு, கீரிமலையில் ஜனாதிபதி சுற்றுலா தங்கும் இடத்துக்கு என்று எழுப்பப்பட்ட கட்டடத்தை மேற்குறிப்பிட்ட தேவைகளின் பொருட்டு வடக்கு மாகாண சபையிடம் கையளிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் பிரதமரைக் கோரும் பிரேரணை முன்மொழியப்பட்டது.



யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் இந்த விடயம் ஆராயப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இணைத்தலைவர்களுள் ஒருவராக இருந்த வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், இதனை முறைப்படியாகத் தருமாறு கேட்டிருந்தார். அதனால்தான் இங்கே முன்வைக்கிறேன் என்று தெரிவித்து பிரேரணையை முன்மொழிந்தார் அவைத் தலைவர்.

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

இதை நான் வரவேற்கின்றேன். ஜனாதிபதி இந்த மாளிகையை முதன் முறையாகச் சென்று பார்வையிட்டபோது நானும், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் சென்றிருந்தோம். இந்த மாளிகையை எமக்கு வழங்குமாறு கோரினோம். அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால இணங்கினார். இதனை முழுமைப் படுத்திவிட்டுத் தருகின்றேன் என்று தெரிவித்தார். எனினும் யாழ். பல்கலைக் கழகமும் கோருகின்றது என்பதைத் கவனத்திற் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார்.

ஆளும் கட்சி உறுப்பினர் சயந்தன் தெரிவித்ததாவது:

பிரேரணை நிறைவேற்றி விட்டோம். இதனை ஜனாதிபக்கு தெரியப்படுத்துவது ஒரு புறம் இருக்கட்டும். அது அமைந்துள்ள காணியை எடுக்கின்ற நடவடிக்கைகளை நாங்கள் இப்போதே ஆரம்பிப்போம். இந்தக் காணியை மாகாண சபைக்கு பாரப்படுத்தும் நடவடிக்கைகள் பிரதம செயலாளர் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் – என்றார்.

இறுதியில் கருத்துத் தெரிவித்த அவைத் தலைவர், இந்தப் பிரேரணை ஜனாதிபதி செயலகத்துக்கும், மாவட்டச் செயலாளருக்கும் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவித்தார். (ந-5)

### நெசவு பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

யாழ்ப்பாணம் நெசவுப் பயிற்சிப் பாடசாலையில் பயிற்சி நெறி களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. பயிற்சியில் சேர்ந்து கொள்ள விரும்புபவர்கள் அலுவலக நேரத்தில் நேரிலோ அல்லது கடித மூலமோ தொடர்புகொள்ள முடியும் என்றும் விண்ணப்ப இறுதித் தினம் இந்த மாதம் 24 ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெசவுப் பயிற்சி நெறி ஒரு வருட காலப் பயிற்சி நெறி, ஆறு மாத காலப் பயிற்சி நெறி என இரண்டு பகுதிகளாக வழங்கப்படுகின்றது. ஒரு வருட காலப் பயிற்சியில் இணைந்து கொள்வதற்கு க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

ஆறு மாத கால பயிற்சி நெறியில் இணைந்து கொள்பவர்கள் தரம் 8 இல் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை அரசினர் நெசவுப் பயிற்சிப் பாடசாலை, யாழ். – பருத்தித்துறை பிரதான வீதி, கந்தர்மடம் சந்தி, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரிலோ கடித மூலமோ சேர்ப்பிக்க வேண்டும். ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-11)

# மீள்குடியமர்வு பகுதிகளில் நடக்கும் குற்றங்களை உடன் அறிவியுங்கள்

## பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 16

மீள்குடியமர்ந்த பிரதேசங்களில் இடம்பெறும் சட்டவிரோத மதுபான விற்பனை, கசிப்பு உற்பத்தி மற்றும் குற்றச் செயல்கள் தொடர்பில் தகவல் தர வேண்டும் என்று பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி என்.டி.எஸ்.சிநிவுன்னில்ல கோரிக்கை விடுத்தார்.

வெளிமாட்டங்களில் இருந்து வருபவர்கள், தங்கி நிற்பவர்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

வயாவிளான் மத்திய கல்லூரியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சிவில் சமூகங் களுக்கு இடையிலான கலந்துரையாடலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது :-

மீள்குடியமர்ந்த பகுதிகளில் அதிகளவு சிறுவர் துஷ்பிரயோகங்கள் இடம்பெற சந்தர்ப்பங்கள் உள்ளன. பிள்ளைகளின் பாதுகாப்பில் பெற்றோர் அக்கறையுடன் செயற்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் கடந்த வருடத்தை விட இந்த வருடம் சிறுவர் துர்நடவடிக்கைகள் கணிசமான அளவு குறைந்துள்ளன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது, மீள்குடியமர்ந்த பகுதிகளிலுள்ள சிறுவர், சிறுமிகளே அதிகம் முறைகேடுகளுக்கு உள்ளான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது தெரியவந்தது.

பெற்றோர்கள் வீட்டுத்திட்டம், ஏனைய விடயங்களை நிறைவேற்றிக்கொள்ள வெளியில் சென்ற சந்தர்ப்பங்களில் பிள்ளைகளின் பாதுகாப்புப் பற்றிச் சிந்திப்பதில்லை. அவர்களின் தற்போதைய வீட்டுச் சூழல் துன்புறுத்தல்கள் இடம்பெறுவதற்கு ஏதுவானதாக உள்ளன.

பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் அதிகம் சிந்திக்க வேண்டியவர்கள் பெற்றோர்களே. மாணவர்களிடம் அலைபேசி வழங்குவதைத் தவிருங்கள். பாடசாலை முதல்வரை சந்தித்துப் பேசுங்கள். நல்ல விடயங்களை பிள்ளைகளுக்குப் போதியுங்கள்.

பலாலி பொலிஸ் நிலையம் அதி உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் தொடர்ந்தும் உள்ளதால், பொதுமக்கள் உள்ளே வருவதில் பிரச்சினை உள்ளது. மீள்குடியமர்ந்த பலாலி மற்றும் வயாவிளான், குரும்பசிட்டி பகுதி மக்கள் தமது பொலிஸ் சேவைகளைப் பெற்றுக்கொள்ள 021 320 2668, 021 221 3900 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்திப் பிரச்சினைகளைக் கூறலாம். பொலிஸார் குறித்த பகுதிக்கு வந்து பிரச்சினைகளை தீர்த்து வைப்பார்கள். அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையங்களான அச்சுவேலி, தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையங்களிலும் முறைப்பாடு பதிவு செய்ய முடியும் – என்றார். (ந-4,107)

## இரட்டைவாய்க்கால் – சாலை வீதியை உடன் சீரமைக்குமாறு கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 16

போரால் முற்றாகச் சேதமடைந்து போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் காணப்படும் இரட்டைவாய்க்கால் – சாலை வீதியை உடனடியாகச் சீரமைத்துத் தர வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட குறித்த வீதி சுமார் 7 கிலோமீற்றர் நீளம் கொண்டது. இந்த வீதியை பெரிதும் பயன்படுத்துபவர்கள் போரால் அதிகம் பாதிக்கப்பட்ட வலைஞர்மடம், பொக்கணை, மத்தளன் கிராம மக்களே.

“வீதி சீரமைப்பு தொடர்பாக பலருடன் கதைத்துள்ளோம். ஆனால் இன்றுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. பாடசாலை மாணவர்கள் முதல் முதியவர் கள், நோய்வாய்ப்பட்டவர்கள் என அனைவரும் நாளுக்கு நாள் பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்கின்றனர்” – என்று தெரிவித்தனர் கிராம மக்கள். வீதியை உடன் சீரமைத்துத் தருமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதி சீரமைப்புக்காக இந்த வருடம் நிதி ஒதுக்கப்படவில்லை. அடுத்த வருடம் நிதி ஒதுக்கீட்டில் முதன்மைப்படுத்தி குறித்த வீதி சீரமைக்கப்படும் என்று முல்லைத்தீவு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்தார். (ந-21,ரி7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தில் அனைவரும் சேர வேண்டும்

## நிதியத்தின் தலைவர் தெரிவிப்பு

அச்சுவேலி, ஜூன் 16

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் நாடாளுமன்ற சட்ட வரைவின் பிரகாரம் உருவாக்கப்பட்ட அமைப்பு. அதில் உறுப்பினர்களாக இணைந்து கொள்வதன் மூலம் ஓய்வூதியர்களும் அவர்களின் பின் உரித்தாளர்களும் பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் முன்னாள் அரச அதிபர் ஜி.ஈ.ஜே சில்வெஸ்ரர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய சங்கத்தின் 7ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ்.மாவட்ட முகாமைத்துவத் திறன் அபிவிருத்திக் கூடத்தில் நடைபெற்றது. யாழ். மாவட்டத் தலைவர் வி.சக்திவேல் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு அவர் தெரிவித்தார். அங்கு அவர் தெரிவித்ததாவது:

ஓய்வூதியர் மத்தியில் தொழில் ரீதியான வேறுபாடுகள் இல்லை. சகலரும் ஓய்வூதியர்களே. ஓய்வூதியர்கள் ஒன்றுபட்டு உதவுவோம் என்ற உயர் நோக்கோடு ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

> “பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பாதுகாப்பான அமைப்பு. அதில் இணைந்து கொள்வதற்கு யாரும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை.”

யாழ். மாவட்டத்தில் ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கங்கள் சிறப்பான முறையில் செயற்படுகின்றன. இவை தாய்ச் சங்கத்தோடு இணைந்து தொழிற்படுகின்றன. இது பாராட்டத்தக்கது. பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம் நாடாளுமன்ற சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட பாதுகாப்பான அமைப்பு. அதில் இணைந்து கொள்வதற்கு யாரும் அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. அனைத்து ஓய்வூதியர்களையும் சங்கத்தில் உறுப்பினர்களாக இணைத்துக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உறுப்பினர் ஒருவர் மாதாந்தம் 50 ரூபாவைச் சந்தாப் பணமாக செலுத்தும் அதேவேளையில், கண் சிகிச்சைக்கான கொடுப்பனவு, சத்திர சிகிச்சைக்கான கொடுப்பனவு, வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறும்போது வழங்கப்படும் கொடுப்பனவு, பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில் கொடுப்பனவு, இறப்புப் பணிக்கொடை என பல்வேறு நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.- என்றார். (ற-1)

# வாகனம் பயணிக்கும் வீதிகளில் கழிவுகளை வைக்கவேண்டும்

## வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 16

கழிவுகள் அகற்றுவதற்கு வரும் வாகனங்கள் செல்லமுடியாத நிலையில் உள்ள சிறுவீதிகளில் குப்பைகளை வைக்காமல் வாகனம் செல்லும் இடங்களில் கொண்டு சென்று மக்கள் வைக்கவேண்டும்.

இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபைச் செயலர் தெரிவித்துள்ளார்.

சங்கானை தெற்கு கிராம அலுவலர் பிரிவில் உள்ள பல வீதிகளில் கழிவுப் பொதிகள் அகற்றப்படாத நிலையில் தேங்கிக் காணப்படுகின்றன என்று பொதுமக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வலி.மேற்கு பிரதேச சபையால் நாளாந்தம் சேவையாக, வீடுகளில் சேரும் கழிவுகளை பொதி செய்து வீட்டின் முன்னால் வீதியில் வைத்தால் அதனை அவர்களின் வாகனம் வந்து எடுத்துச் செல்லும் என அறிவிக்கப்பட்டிருந்து. ஒவ்வொரு நாளுக்கும் ஒவ்வொரு வீதியென கழிவகற்றல் இடம்பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த நடைமுறை சங்கானை கிராம அலுவலர் பிரிவில் உள்ள வீதிகளில் நடைபெறுவதில்லை.

இவ்வாறு கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல் உள்ளதால் நாய்கள், காகங்கள் அவற்றைக் கிளறி சுகாதார சீர்கேட்டை ஏற்படுத்துகின்றன. துர்நாற்றமும் வீசுகின்றது.

முக்கியமாக முதன்மை வழிகளில் மட்டும் கழிவுகளை அகற்றி வரும் வாகனங்கள் உள்வீதிகளில் வந்து கழிவுகளைச் சேகரிப்பதில்லை. என்று பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

“எமது பிரதேச சபையூடாகத் தினமும் கழிவுகள் அகற்றப்படுகின்றன. வாகனம் செல்லமுடியாத இடங்களில் உள்ள கழிவுப் பொதிகளை வாகனம் செல்லக்கூடிய இடங்களில் கொண்டு சென்று வைத்தால் அந்தக் கழிவுகளும் அகற்றப்படும்” என வலி.மேற்குப் பிரதேச சபைச் செயலர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-ரி, 29)

# புத்துவெட்டுவான் கிராமத்துக்கு ஆரம்ப சுகாதார நிலையம் தேவை

## இயக்க நடவடிக்கை எடுக்குமாறு கிராம மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜூன் 16

முல்லைத்தீவு புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் இயங்கிய ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் செயலிழந்துள்ளது. அதனால் மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வாறு அந்தக் கிராமத்தைச் சேர்ந்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் கிராமத்தில் உள்ள பொது நோக்கு மண்டபம் ஒன்றில் ஆரம்ப சுகாதார நிலையம் இயங்கியது. தற்போது அது இயங்குவதில்லை. போருக்கு முன்னர் போக்குவரத்து வசதிகள் அற்ற காலப்பகுதியில் புத்துவெட்டுவான் கிராமத்தில் 3 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்தனர். அப்போது மக்களுக்குச் சேவை வழங்கிய குறித்த ஆரம்ப சுகாதார நிலையம் போர் முடிவுற்று 7 வருடங்கள் ஆகும் நிலையில் இன்று வரை செயற்படவில்லை.

போர் முடிவுற்று 7 வருடங்கள் கடந்துள்ள நிலையில் மீள்குடியேற்றத்தின் பின்னர் 80க்கும் அதிகமான குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் இந்தக் கிராமத்தில் குடியமர்ந்துள்ளார்கள். இவர்கள் துணுக்காயில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் எந்த வித அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் வாழ்கின்றனர்.

தங்களது சுகாதாரத் தேவைகளுக்காக 5 கிலோ மீற்றர் தூரம் நடந்து அயல் கிராமமான ஐயன்கன் குளம் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டியுள்ளது.

கடுமையாக நோய்வாய்ப்பட்டவர்கள் ஐயன்கன்குளம் வைத்தியசாலையில் இருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள மல்லாவி ஆதார வைத்திய சாலைக்கு, நோயாளர் காவு வண்டியில் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

எனவே புத்துவெட்டுவான் கிராமத்தில் முன்னர் இயங்கிய ஆரம்ப சுகாதார நிலையத்தை மீளவும் இயங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

“புத்துவெட்டுவான் கிராமத்தில் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் ஒன்று இயங்கியதாகத் தெரியவில்லை. அப்படி அங்கு ஓர் ஆரம்ப சுகாதார வைத்திய நிலையம் இயங்கியிருந்தால் அது எமக்குரியதாக இருக்காது” என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதா சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார். (ற-21,415)

# இளைஞரை தாக்கியவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 16

கொடிகாமம் இராமாவில் பகுதியில் மாணவன் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 24ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிவான் உத்தரவிட்டார் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அதே இடத்தைச் சேர்ந்த இளைஞரே தாக்கியுள்ளார் என்றும், அவருடன் சேர்ந்து வந்திருந்தவர்கள் வாள்களை மறைத்து வைத்திருந்தனர் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் விசாரணை தொடர்கிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-107)

# தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு பத்து லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு

வலி.வடக்கு, ஜூன் 16

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ. சேனாதிராசா தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

கடந்த டிசெம்பர் மாதம் தெல்லிப்பழை ஆதார வைத்திய சாலை நோயாளர் நலன்புரி சங்கத்தினர் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சோ.சேனாதிராசா, வடக்கு மாகாண அவை முதல்வர் சி.வி.கே.சிவஞானம் ஆகியோர் அழைத்து வைத்தியசாலையின் தேவைப்பாடுகள் தொடர்பிலும், அபிவிருத்தி செய்யப்படவேண்டிய விடயங்கள் தொடர்பிலும் சிற்றுண்டிச் சாலை, துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை நோயாளர் நலன்புரி சங்கம் நடத்துவது தொடர்பிலும் கலந்துரையாடி இருந்தனர்.

அபிவிருத்தி தொடர்பில் கேட்டறிந்த மாவை சோ.சேனாதிராசா தனது இந்த வருட வரவு - செலவு பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து 10 லட்சம் ரூபா வைத்தியசாலை அபிவிருத்திக்கு நோயாளர் நலன்புரி சங்கத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருந்தார். (ற-25)

# நவாலி தெற்குப் பொதுநோக்கு மண்டபம் மக்கள் பாவனைக்கு

## சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16

நவாலி தெற்கு களையோடை கண்ணகை அம்மன் வீதியில் அமைக்கப்பட்ட பொதுநோக்கு மண்டபம் நீண்ட காலம் இயங்காது இருந்த நிலையில் தற்போது அதை மீள இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று சண்டிலிப்பாய் பிரதேச செயலர் தெரிவித்தார்.

நவாலி மக்களின் நன்மை கருதி முன்னாள் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எஸ்.சுப்பிரமணிய சர்மாவின் வேண்டுகோளுக்கு இணங்கத் தனியார் ஒருவரால் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கு காணி வழங்கப்பட்டது.

“நவாலி மக்களின் நலன் கருதிப் பொதுநோக்கு மண்டபம் அமைப்பதற்கென 2000ஆம் ஆண்டு முன்னாள் பிரதேச செயலர் ஊடாகப் பல லட்சம் ரூபா பெறுமதியான காணியை நன்கொடையாக வழங்கினேன். அந்தக் காணிக்குள் பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்பட்டபோதும், அதற்குள் எந்தவிதமான பொதுப் பணியோ அல்லது பொதுச் சேவையோ இற்றைவரை நடைபெறவில்லை. இதனால் மீளவும் அந்தக் காணியை எனக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும்” எனக் காணி வழங்கிய தங்கராசா யுவராசா வலியுறுத்தினார்.

“பொதுநோக்கு மண்டபம் அமைக்கப்பட்டு அதற்குள் பொதுமக்கள் சார்ந்த கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. விசமிகளின் வேலையால் கதவுகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்டதன் பின்பு இந்த மண்டபம் இயங்காமல் இருந்தது.

தற்போது கடந்த ஒரு கிழமைக்கு முன் மீளவும் அதனைத் திருத்தியுள்ளோம். இனிவரும் காலங்களில் அந்த மண்டபம் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளது” எனச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (ற-ரி, 50)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 76 கி.மீ. வீதிகளே திருத்தம்

## மீள்குடியமர்வின் பின்னரான காலத்தில் நடந்ததாக வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர் தெரிவிப்பு

**மீள் குடியமர்வின் பின்னர் 76 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 30 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் மாத்திரமே புனரமைக்கப்பட்டுள்ளன.**

கிளிநொச்சி, ஜூன் 16
கிளிநொச்சி மாவட்டத்தில், வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான 361 கிலோ மீற்றர் நீளமான வீதிகளில் 76 கிலோ மீற்றர் நீளமான வீதிகளே இதுவரை சீரமைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே வீதி அபிவிருத்தித் திணைக் களத்தினர் இதனைத் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பல வீதிகள் நீண்டகாலமாகச் சீரமைப்புச் செய்யப்படாதுள்ளன. அதனால் மக்கள் பயணம் செய்வதில் மிகவும் சிரமங்களை எதிர்கொள்கின்றார்கள். வீதி விபத்துக்கள் அதிகம் ஏற்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பிரதேசங்களிலும் இந்த நிலைதான் காணப்படுகின்றது. வீதிகள் உடனடியாகத் திருத்தம் செய்யப்படவேண்டும் என்று–பொதுமக்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதும் குறித்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்குச் சொந்தமான வீதிகளாக சுமார் 361 கிலோ மீற்றர் வீதிகள் காணப்படுகின்றன. அதில் மீள் குடியமர்வின் பின்னர் 76 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் இதுவரை சீரமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 30 கிலோ மீற்றர் நீளமான வீதிகள் மாத்திரமே சீரமைக்கப்பட்டுள்ளன. அதற்கான நிதியே எமக்கு ஒதுக் கப்பட்டுள்ளது– என்றனர். (ந–21)



வவுனியா, சாஸ்திரியார் கூளாங்குளம் பகுதியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தைச் சுற்றிப் பாதீனியம் வளர்ந்துள்ளது. அதனைக் கட்டுப்படுத்துவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். (ந–21)

## தமிழரசு சின்னத்துரை ஞாபகார்த்தமாக மாணவருக்குக் கற்றல் உபகரணங்கள்

வலி.வடக்கு, ஜூன் 16
தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரையின் முதலாம் ஆண்டு நினைவை முன்னிட்டு அவரின் குடும்பத்தினரால் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்தில் தமிழரசுக் கட்சியின் நிர்வாகச் செயலாளர் எவ்.எக்ஸ். குலநாயகம் தலைமையில் நடைபெற்றது.

வடமாகாணசபை உறுப்பினர்களான அ.பரஞ்சோதி, பா.கஜதீபன் ஆகியோர் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை வழங்கினர். கோப்பாய் திருநாவுக்கரசுவும் கலந்து கொண்டு உதவிகளை வழங்கினார்.

ஆவரங்கால் தமிழரசு சின்னத்துரை 2015ஆம் ஆண்டில் தனது 89 ஆவது வயதில் இறையடி சேர்ந்தார். இவர் தமிழரசுக்கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழரசுக் கட்சியிலும், பின்னாளில் தமிழர் விடுதலைக் கூட்டணியிலும் இணைந்திருந்து தமிழர்களின் அகிம்சைப் போராட்டங்கள் அனைத்திலும் பங்கெடுத்தவராவார்.

தமிழர் தலைவர்களான தந்தை செல்வா, கு.வன்னியசிங்கம், அ.அமிர்தலிங்கம், நாகநாதன், சாவகச்சேரி வி.என்.நவரத்தினம், உடுவில் தர்மலிங்கம் ஆகியோருடன் இணைந்து தமிழரசுக் கட்சியை வளர்த்தவராவார். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளால் புலம்பெயர்ந்த நாடுகளில் வசித்து வந்த இவர், தனது சொந்த ஊரான ஆவரங்காலில் தன்னுடைய இறுதிக் காலத்தைக் கழித்தார். (ந–25)

## பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 18 சந்தேகநபர்கள் சிக்கினர்

### கிளி. பொலிஸாரின் விசேட நடவடிக்கையில்

கிளிநொச்சி, ஜூன் 16
கிளிநொச்சி நீதிவான் மன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 18 சந்தேகநபர்கள் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணி முதல் காலை 6 மணி வரை மேற்கொள்ளப்பட்ட திடீர் நடவடிக்கையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்துக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய வழக்குகளுக்கு முன்னிலையாகத் தவறிய 18 பேருக்கு, கிளிநொச்சி நீதிவானால் கடந்த திங்கட்கிழமை பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்ட விசேட நடவடிக்கை மூலம் அவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந–21)

## முதிரைக் குற்றி கடத்தியவருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜூன் 16
முதிரை மரக் குற்றிகள் கடத்திய லொறிச் சாரதிக்கு 25 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது சாவகச்சேரி நீதிமன்றம். கைப்பற்றப்பட்ட முதிரைக் குற்றிகளைப் பறிமுதல் செய்யுமாறும் உத்தரவிடப்பட்டது.

கடந்த 26ஆம் திகதி நீதிமன்றில் வழக்கு நடைபெற்றபோது அபராதம் விதிக்கப்பட்டது. வாகன உரிமை தொடர்பான வழக்கு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. வாகன உரிமை, அதன் உரிமையாளரால் நிரூபிக்கப்பட்டதை அடுத்து வாகனத்தை விடுவிக்குமாறு உத்தரவிடப்பட்டது. (ந–9)

### திருத்தல பாதயாத்திரை

யாழ்ப்பாணம், ஜூன் 16
உலக சைவத் திருச்சபையின் திருத்தலப் பாத யாத்திரைக் குழுவால் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்துக்கான திருத்தல பாத யாத்திரை நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஆலயத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது. திருச்சபையின் இளைஞர் மன்றத் தலைவர் மருத்துவர் தனேஸ்வரன் தலைமையில் காலை நயினாதீவைச் சென்றடையும் என்று சபையின் இலங்கைப் பிரதிநிதி சிவஸ்ரீ கு.சுமுகலிங்கம் தெரிவித்தார். (ந–9)

### இசை சொற்பொழிவு

வவுனியாவேப்பங்குளம்ஸ்ரீகாளி அம்பாள்திருக்கோயிலில் இன்று மாலை 6 மணிக்கு இராசையா ஸ்ரீதரனின் 'அம்பிகையின் அருள்' என்ற தலைப்பில் தெய்வீக இசைச் சொற்பொழிவு நடைபெறவுள்ளது. (ந–ரி)

## இனத்தின் தனித்துவத்தைக் காக்க அனைவரும் இணையவேண்டும்

### யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 16
இனத்தின் தனித்துவம் அழிக்கப்படுகின்றபோது அல்லது மாற்றியமைக்கப்படுகின்ற சூழ்நிலையில் எமது கலாசாரங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையுள்ளது. அவற்றைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இவ்வாறு யாழ். மாவட்ட செயலர் நா.வேதநாய கன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் யாழ். மாவட்ட மாநாட்டு மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது. அதில் தலைமையுரை ஆற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தெரிவித்ததாவது:
எந்தவொரு இனத்துக்கும் தனித்துவமான பண்பு காணப்படுகின்றது. அது பேணிப்பாதுகாக்கப்படவேண்டும். எமது கலைகள், பண்பாடுகளை அழியாது பாதுகாக்க வேண்டும். புதியவர்களையும் உள் வாங்கிச் செயற்படவேண்டும்.

யாழ். மாவட்ட கலாசாரப் பேரவை உருவாக்கப்பட்டதன் நோக்கம் கலைஞர்களைக் கௌரவித்தல், ஆவணப்படுத்தல் போன்றவற்றைச் செய்வ தற்கே.

இன்று எமது சமூகத்தில் கொள்ளை, கொலை, மதுப் பாவனை, போதைப் பொருள் பாவனை, பாலியல் துன்புறுத்தல்கள் என்பன அதிகரித்துள்ளன.



இத்தகைய பிரச்சினைகளில் இருந்து நாம் விடுபட வேண்டும். இவற்றைச் சமூகத்தில் இருந்து முற்றாக நீக்க வேண்டும். எல்லோரும் இணைவதன் மூலமே எமது கலாசார விழுமியங்களைப் பாதுகாக்க முடியும். – என்றார். (ந)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ். மாவட்டப் பாடசாலைகளில் சங்கீதம், சைவசமயம் பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று யாழ். சின்மயா மிஷனால் இன்று வியாழக் கிழமை நடத்தப்படவுள்ளது.

நல்லூர் திருவிழாவை முன்னிட்டு இந்துவாக வாழ்வோம் செயற்றிட்டத்தின் ஒரு பகுதியாக, பாடசாலை மாணவர்களுக்கான பஜனை நிகழ்வு நடத்தப்படவுள்ளது. இது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

வட மாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நண்பகல் 12 மணி தொடக்கம் பி.ப 2 மணி வரையும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ந–ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகளுக்கு இரட்டைக்குடியுரிமை

## இந்தியப் பிரதமரிடம் ஜெயலலிதா மனு

கொழும்பு, ஜூன் 16

தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கும் இலங்கைத் தமிழர்களுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். அதற்கு இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம், தமிழ்நாடு முதலமைச்சர் ஜெயலலிதா வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாட்டின் முதலமைச்சராக, கடந்த மாதம் மீண்டும் பதவியேற்றுக் கொண்ட ஜெயலலிதா புதுடில்லியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேசினார். சந்திப்பில் 94 பக்கங்கள் அடங்கிய மனுவையும் இந்தியப் பிரதமரிடம் கையளித்தார்.

தமிழ்நாட்டின் தேவைகள், வழங்கப்பட வேண்டிய வசதிகள், நிறைவேற்றப்பட வேண்டிய கோரிக்கைகளை உள்ளடக்கிய இந்த மனுவில் இலங்கைத் தமிழர் விவகாரமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தங்கியுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள், இந்தியாவில் எந்தத் தடைகளுமின்றி வேலைவாய்ப்பு மற்றும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வசதியாக, அவர்களுக்கு இரட்டைக் குடியுரிமையை வழங்க வேண்டும் என்று இந்திய நடுவண் அரசிடம் தமிழ் நாடு அரசு கேட்டுக் கொள்கிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் அப்பாவித் தமிழர்களை இனப்படுகொலை செய்தவர்களுக்கு எதிராக இந்திய அரசு தேவையான நடவடிக்கைககளை எடுக்கவேண்டும்.

இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் சபை போன்ற, பன்னாட்டு அரங்கில் இந்தியா பொருத்தமான நகர்வுகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஙு-5)

# அடிப்படைவாதிகளுக்கு களம் அமைக்கிறார் விக்கி

## அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல சாடல்



கொழும்பு, ஜூன் 16

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்கினேஸ்வரன் தமிழ் - சிங்கள அடிப்படைவாதிகளுக்கு களம் அமைத்துக் கொடுக்கின்றார். பிரச்சினைகளைச் சிக்கலாக்கும் கருத்துக்களைத் தெரிவிக்கின்றார்.

இவ்வாறு சபை முதல்வரும் உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

நாட்டில் இன்று மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. கடந்த காலக் காட்டுத் தர்பார் இல்லாதொழிக்கப்பட்டு சட்டத்தின் ஆதிக்கம் நாட்டுக்குள் நிலைநாட்டப்பட்டுள்ளது.

கடந்த ஒரு வருடத்தில் நல்லாட்சி அரசு தமிழ் மக்களினதும், சிறுபான்மை மக்களினதும் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துச்சம உரிமைகளைவழங்கியுள்ளது. தமிழ், சிங்கள மக்களிடையே தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் விசேட வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

வடக்கில் ஓர் அகதி முகாம்கூட இருக்கக்கூடாது. மக்கள் அனைவரும் அவர்களது சொந்தக் காணிகளிலேயே மீள்குடியமர்த்தப்படவேண்டும். இதுதான் அரசின் கொள்கையாகும். அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அரசு படிப்படியாக தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றி வருகிறது. அனைத்தையும் உடனடியாக நிறைவேற்ற முடியாது.

மனித உரிமைகளை, அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க விசேடதிட்டங்களை முன்னெடுக்கின்றது. இதனைச் சர்வதேசம் புரிந்துகொள்ளவேண்டும். முப்பது வருடகாலப் போர் முடிவடைந்து தற்போது ஒருவருட காலப் பகுதிக்குள்தான் நல்லாட்சி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வடமாகாண முதலமைச்சர் படித்தவர் - பண்பானவர் அரசியல்வியூகம் தெரிந்தவர் என்று நினைத்தேன். ஆனால் தற்போதைய அவரது செயற்பாடுகள் கவலையளிக்கின்றன. இராணுவ முகாம்களை ஒரே நாளில் அடைக்கச் சொல்கிறார்.

முதலமைச்சரின் நடவடிக்கைகள் நாட்டில் இனவாதத்தை தூண்டுவதாகவே அமைந்துள்ளன. வடக்கில் படையினரை வைத்திருக்க வேண்டிய அவசியம் அரசுக்குக் கிடையாது. அதே வேளை தேசிய பாதுகாப்புத்தொடர்பிலும் அரசு கவனம் செலுத்த வேண்டும். படிப்படியாக வடக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படும் - என்றார். (ஙு-5)

# பனாமா மோசடியாளர்களை பாதுகாக்கின்றாராம் ரணில்

## ஜீ.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜூன் 16

பனாமா ஆவணத்தில் வெளியிடப்பட்ட மோசடிக்காரர்களை பாதுகாக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கசூட்சுமமாகச்செயற்பட்டு வருகின்றார். உயர் நீதிமன்றம், மத்திய வங்கியின் ஆளுநர் குற்றமற்றவர் என்பதும் நிருபிக்கப்படவில்லை. இவ்வாறு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொரளையில் அமைந்துள்ள சிறிவஜிராஸ்ரம பௌத்த நிலையத்தில் இடம்பெற்ற கூட்டு எதிர்க் கட்சியின் செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெறுகின்றன. பெரிய நிதி மோசடி விசாரணைப் பிரிவு மற்றும் லஞ்ச ஒழிப்பு ஆணைக்குழு ஆகியவற்றில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை முன்னிலைப்படுத்தி விசாரணைகளை முன்னெடுக்கப்படுகின்றதே தவிர ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து யாரும் விசாரணைக்கு அழைக்கப்படுவதில்லை.

மத்திய வங்கி ஆளுநரின் விடயத்தில் இனிப் பொறுமை காக்க முடியாது. இன்று நாட்டின் பொருளாதாரம் படுமோசமான பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. 1945ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதைய நல்லாட்சியில்தான் நடைமுறைக் கணக்குகளில் திறந்த கொள்கையைக் கையாள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதனை வெளிப்படையாகக் கூறிவிட்டார்.

இதனால் நாட்டிலிருந்து எந்தத் தொகையானாலும் வெளியில் கொண்டு செல்ல முடியும். இதன் பின்னணி குறித்து சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பனாமா ஆவணத்தில் வெளியிடப்பட்ட இலங்கையர்களுக்கான பெயர்ப் பட்டியலில் ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்கள் உள்ளனர். இவர்களைப் பாதுகாக்கும் நோக்கிலேயே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தற்போது செயற்படுகின்றார்.

நல்லாட்சி அரசுக்குள் முரணான நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக மத்திய வங்கி ஆளுநர் விடயத்தில் அரசுக்குள் சிக்கல் நிலை ஏற்படும் - என்றார். (ஙு-5)

# சிறுநீரக வியாபாரம் குறித்து ஆராய இந்தியா செல்கின்றது பொலிஸ் குழு

## பொலிஸார் நீதிமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாக இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ள ராஜ்குமார் ராவ் எனும் பிரதான சந்தேக நபர் இலங்கையில் நடைபெற்ற சட்ட விரோத சிறுநீரக வியாபாரத்துடன் சம்பந்தப்பட்டுள்ளாரா என்பது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் கொழும்பு நீதிவான் மன்றில் தெரிவித்தனர்.

இதனை ஆராய்வதற்குச் சிறப்பு பொலிஸ் குழுவொன்று விரைவில் இந்தியா செல்லவுள்ளது என்றும் கொழும்பு குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்தது.

சட்ட விரோத சிறுநீரக வியாபாரம் தொடர்பாகக் கொழும்பில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஏழு இந்திய பிரஜைகள், நேற்றுமுன்தினம் மீண்டும் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்தியர்களுக்குச் சிறுநீரக அறுவைச் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கொழும்பில் அமைந்துள்ள தனியார் வைத்தியசாலைகளில் இவை மேற் கொள்ளப்பட்டுள்ளன. இந்த அறுவைச் சிகிச்சைகளுடன் தொடர்புடைய ஆவணங்கள் குறித்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்ட இந்தியப் பிரஜைகள் 7 பேரையும் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். அன்றே அவர்களின் பிணை மனுக்கள் ஆராயப்படும் என்றும் நீதிவான் அறிவித்தார். (ஙு-4)

## கடல் அசுத்தம்; 5ஆவது இடத்தில் இலங்கை

கொழும்பு, ஜூன் 16

உலகின் கடலை அசுத்தப்படுத்தும் பட்டியலில் இலங்கை 5ஆவது இடத்தைப் பெற்றுள்ளது என்று சமுத்திரப் பாதுகாப்பு அதிகார சபை தெரிவிக்கிறது.

உலக சமுத்திரங்கள் தினத்தை முன்னிட்டு சமுத்திரச் சுற்றாடல் அதிகார சபையால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு செயற்றிட்டமொன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

சபையின் பொது முகாமையாளரான சமுத்திரச் சுற்றாடல் விஞ்ஞானி கலாநிதி டர்ணி பிரதீப்குமார இது குறித்து தெரிவித்ததாவது:

சமுத்திரங்களின் சுற்றாடலைப் பாதுகாத்துக் கொள்வது சம்பந்தமாகப் பெருமளவிலான தரப்பினர் கவனம் செலுத்துவதில்லை. ஆயினும் சுற்றுலாத்துறை, விவசாயத்துறை மற்றும் அதனோடு சம்பந்தப்படும் சிறுபோகம், பெரும் போகங்கள் என்ற இரண்டு போகங்கள் தொடர்பாகப் பருவப் பெயர்ச்சிக் காற்றுகள் உருவாவது போன்ற காரணிகள் சமுத்திரச் சுற்றாடல் பாதுகாப்புடன் ஆழமான தொடர்பைக் கொண்டுள்ளன- என்றார். (ஙு-22)

# ஐ.ம.சுதந்திர முன்னணியுடன் 13 அரசியல் கட்சிகள் கூட்டு

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 16

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டணி அமைக்க, 13 அரசியல் கட்சிகள் விருப்பம் தெரிவித்துள்ளன என்று முன்னணியின் செயலாளர் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் கூட்டுச் சேர விண்ணப்பித்துள்ள இந்தக் கட்சிகளுடன், தற்பொழுது பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொள்கைக்கு முரணில்லாத, கட்சிகளுடன் கூட்டுச் சேர்வதில் தடைகள் எதுவும் இல்லை. எதிர்வரும் தேர்தல்களில் இந்தக் கட்சிகளுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்படும்.

நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி. டி.பி., ஆறுமுகம் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், அதாவுல்லாவின் தேசிய காங்கிரஸ், சிஹல உறுமய, தொழிலாளர் கட்சி, சிறி ரெலோ மற்றும் ஜனநாயக மக்கள் கட்சி என்பனவே கூட்டுச் சேர விருப்பம் தெரிவித்துள்ளன - என்றார். (ஙு-ஜ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒதுக்கப்பட்ட நிதி 6 மாதத்தில் முடிந்தது!

தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் உபசரிப்புக் களுக்காக அரசால் 2016 ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட நிதி 6 மாதங்களுக்குள் முடிவடைந்துள்ளது என்று அமைச்சின் மூத்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சின் உபசரிப்பு நடவடிக்கைகளுக்கான நிதிக் குறைபாட்டை நீக்கித் தருமாறு அமைச்சால் நிதி அமைச்சிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சுக்கு ஒரு வருடத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதி இவ்வாறு 6 மாதங்களில் முடிவடைந்தமை தொடர்பில் அந்த அமைச்சின் மேலதிக செயலாளரிடம் வினவப்பட்டபோது, இந்த அமைச்சுக்கு இரு அமைச்சர்கள் உள்ளனர். அதனால், ஒதுக்கப்பட்டுள்ள நிதி விரைவில் முடிவடைந்து விட்டது என்று குறிப்பிட்டுள்ளார்.

தபால் மற்றும் முஸ்லிம் சமய விவகார அமைச்சர் எம்.எச். அப்துல் ஹலீம் தெரிவிக்கையில், உபசரிப்புக்களுக்காக அமைச்சுக்கு ஒதுக்கப்பட்ட நிதி எந்த வகையிலும் போதியதன்று. வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட பிரமுகர்கள் அமைச்சுக்கு வரும்போது அவர்களை உபசரிப்பதற்கு நிதி அவசியம்-என்றார். (ற-5)

# அபிலாசைகளை முரசறைய ஐ.நா. முன்பாகத் திரளுங்கள்

## ஈழத் தமிழர் மக்களவை வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 16

சர்வதேச நாடுகளின் நலன்களுக்குச் சாதகமாக எதிர்வினையாற்றிவரும் மைத்திரி - ரணில் கூட்டரசைப் பாதுகாத்துப் பலப்படுத்தும் உலக நாடுகளின் அநீதியான போக்கைக் கண்டித்தும், எமது இனத்தின் தேசிய அபிலாசைகளை முரசறையவும் இக்கட்டான இந்தத் தருணத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி, ஐ.நா. முன்றிலில் ஓரணியில் தமிழ் மக்கள் அணிதிரள வேண்டும்.

இவ்வாறு அனைத்துலக ஈழத் தமிழர் மக்களவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது:-

இந்த நூற்றாண்டின் மாபெரும் இனப்படுகொலை சிங்கள - பௌத்த பேரினவாத அரசால் தமிழர் தாயகத்தில் நிகழ்த்தப்பட்ட போது விழிதிறந்த உறக்க நிலையில் இருந்து கை கட்டி, வாய் பொத்தி வேடிக்கை பார்த்த அதே உலக நாடுகளிடமும், ஐ.நா. சபையிடமுமே அதற்கான நீதியை எதிர்நோக்கியிருக்கும் கையறு நிலையில் உலகத் தமிழர்களாகிய நாம் இருக்கின்றோம்.

சிங்கள - பௌத்த பேரினவாத அரசின் ஆயுதப் பயங்கரவாதத்தில் இருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்காக வரலாற்று தன்னியல்பில் எமது கைகளில் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்கள் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டன.

இந்த ஆயுத மௌனிப்பானது புலம்பெயர் தமிழர்களின் கைகளில் நீதிக்கான அறவழிப் போராட்டமாக முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பு கைமாற்றத்தின் வெளிப்பாடாகவே அமைந்திருந்தது.

எமக்கு இழைக்கப்பட்ட, இழைக்கப்பட்டு வருகின்ற அநீதிகளுக்கு நீதியை பெறும் தவிர்க்க முடியாத இடமாக ஜெனிவாவில் அமைந்துள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபை திகழ்ந்து வருகின்றது. அந்த வகையிலேயே முள்ளிவாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் தொடர்ச்சியாக ஜெனிவாவை மையப்படுத்திய அறவழிப் போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை முன்னிறுத்தி தாயகம் - தேசியம் - தன்னாட்சியுரிமை ஆகிய மூலாதாரக் கோட்பாடுகளை வலிமையுடன் முன்கொண்டு சென்று கொண்டிருக்கும் புலம்பெயர் தமிழர்களின் வகிபாகத்தினை வலுவிழக்கச் செய்வதன் மூலம் தமிழர்களது விடுதலைவேட்கையைத் தணித்துவிடலாம் எனக்கருதும் உலக நாடுகள் மைத்திரி - ரணில் கூட்டாட்சியைப் பாதுகாக்கத் தலைப்பட்டு வருகின்றன.

இதன் வெளிப்பாடாகவே, மைத்திரி - ரணில் கூட்டாட்சியில் நல்லாட்சி என்ற பெயரிலான அரசு ஒன்றை உருவாக்கிய உலக நாடுகள் தமது பிராந்திய நலன்களை முன்னிறுத்தி எமது தேசிய அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் முனைப்பில் ஈடுபட்டு வருகின்றன.

தமிழர் தாயகத்தில் நிகழ்த்தப்பட்ட இன அழிப்புக் குற்றத்திற்கு பொறுப்புக்கூறும் கடப்பாட்டில் இருந்து இலங்கை அரசை பிணையெடுக்கும் இடமாக ஜெனிவா மனித உரிமைகள் சபை மாற்றப்பட்டுள்ளது. தற்போது கூட்டப்பட்டு இருக்கும் 32ஆவது அமர்வில் மைத்திரி - ரணில் கூட்டாட்சி அரசுக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்துக்குட்பட்ட நடவடிக்கைகள் குறித்தான வாய்மொழி மூலமான அறிக்கை வாசிக்கப்பட உள்ளது.

அரசமைப்புத் திருத்தம் என்ற பெயரில் 'புதிய மொந்தையில் பழைய கள்' எனும் தந்திரத்தினூடே சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்கத்தை நிலைநாட்டும் சதிச்செயல், தாயகத்திலும் புலத்திலும் சிங்களத்தின் கைக் கூலிகளாகிவிட்ட குறித்த தமிழர்கள் சிலரின் துணையோடு அரங்கேற உள்ளது.

ஒரே இலட்சியத்தில், ஒன்றுபட்ட மக்கள் சக்தியாக, எமக்கு முன் தடைக்கல்லாக உருவாகியிருக்கும் எல்லாத் தடைகளையும் உடைத்தெறிந்து நெஞ்சுறுதி கொண்ட வேங்கைகளாக மூச்சோடும்- வீச்சோடும் விடுதலையை வென்றெடுக்கும் வரை ஒருபோதும் ஓயோம் என்ற ஓர்மத்துடன் ஜெனிவா முன்றிலில் அணியாவோம் - என்றுள்ளது. (ற-5)

# ஆஸி. செல்லும் அகதிகள் படகு இந்தோனேசியா திரும்பியது

## எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக



கொழும்பு, ஜூன் 16

44 இலங்கைத் தமிழ் அகதிகளுடன், இந்தோனேசியக் கடற்பரப்பில் படகு ஒன்று ஆஸ்திரேலியா நோக்கிச் சென்று மீண்டும் இந்தோனேசியக் கடற்பகுதிக்கே திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒரு கர்ப்பிணி உள்ளிட்ட 15 பெண்கள் மற்றும் ஒன்பது சிறுவர்கள் உள்ளிட்ட 44 பேருடன் இந்தியாவில் இருந்து அகதிகள் படகு புறப்பட்டிருந்தது. இயந்திரக் கோளாறால் இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்தின், லொஹொக்கா கடற்கரைப் பகுதியில் தத்தளித்த நிலையில் கடந்த சனிக்கிழமை இந்தப் படகு கண்டுபிடிக்கப்பட்டது.

படகில் இருந்தவர்களிடம் எந்த ஆவணங்களும் இல்லாததால் அவர்களைத் தரையிறங்க அதிகாரிகள் அனுமதி மறுத்தனர். பழுதடைந்திருந்த இயந்திரத்தைத் திருத்தி, ஆயிரம் லீற்றர் டீசலையும் மற்றும் உணவுப் பொருள்களையும் கொடுத்தனர். தமது நாட்டுக் கடற்பரப்பை விட்டு வெளியேறுமாறு பணித்தனர். அதையடுத்து, அகதிகள் படகு ஆஸ்திரேலியா நோக்கிப் பயணமானது. ஆனால் மீண்டும் இந்தோனேசியாவின் ஆச்சே மாகாணத்துக்கு அகதிகள் படகு திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. தமக்கு ஆயிரம் லீற்றர் டீசல் போதாது என்றும் 6 ஆயிரம் லீற்றர் டீசல் தருமாறும் படகில் இருந்தவர்கள் கோரியுள்ளனர்.

மேலதிகமாக 6 ஆயிரம் லீற்றர் டீசலை வழங்க முடியாது. அதன் பெறுமதி மிக அதிகமானது என்று இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ற-5)

# தொடர்கிறது பணிப்புறக்கணிப்பு ஆறு லட்சம் கடிதங்கள் தேக்கம்

கொழும்பு, ஜூன் 16

நாடளாவிய ரீதியில் தபால் திணைக்கள ஊழியர்கள் முன்னெடுத்துள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தால் ஆறு லட்சத்துக்கும் அதிகமான கடிதங்கள் தலைமைத் தபால் நிலையங்களில் தேங்கியுள்ளன.

கடந்த 12ஆம் திகதி நள்ளிரவு முதல் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனால் தபால் திணைக்களத்தின் அன்றாட அலுவல்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

> தபால் திணைக்கள ஊழியர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் சிந்தக்க பண்டார தெரிவித்துள்ளார்.

தபால் திணைக்கள ஊழியர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் அரசுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சு தோல்வியில் முடிவடைந்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் சிந்தக்க பண்டார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடு முழுவதிலும் தபால் திணைக்களத்தில் 2 ஆயிரம் வெற்றிடங்கள் காணப்படுகின்றன. அந்தப் பணிகளை ஏனைய ஊழியர்களின் மேலதிக நேர வேலைகளின் ஊடாகவே பூர்த்தி செய்ய நேரிட்டுள்ளது. எமது மேலதிக வேலைநேரக் கொடுப்பனவுகள் இதுவரையிலும் அதிகரிக்கப்படாமலுள்ளன.

தபால் திணைக்கள அதிகாரிகள் ஊழியர்களின் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்கவில்லை. மாறாக மேலதிக நேரக் கொடுப்பனவைக் குறைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் நியாயமான தீர்வை விரைவில் வழங்குமாறும் அரசின் உயர் மட்ட அதிகாரிகள் பலருடன் பேச்சு நடத்தியும் இதுரையிலும் எவ்விதமான தீர்க்கமான முடிவும் எட்டப்படவில்லை.

நாடளாவிய ரீதியில் தொழிற்படும் தபால் ஊழியர்களுக்கான சம்பள அதிகரிப்பு பல வருட காலமாக மேற்கொள்ளப்படவில்லை. தபால் திணைக்களத்துக்கு அரசால் வழங்கப்பட்டுள்ள அனைத்து விதமான நியமனங்களும் முறைகேடானவை. எங்களுக்கான சம்பள அதிகரிப்பைப் பெற்றுத்தர வேண்டும். எமது கோரிக்கைகளுக்கான உரிய தீர்வைப் பெற்றுக் கொடுக்கவேண்டும். இல்லையேல் தொடர்ந்தும் எமது தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படும் - என்றார்.

தபால் பணியாளர்களின் பிரச்சினைகள் அமைச்சரவையின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று தபால்மா அதிபர் ரோகண அபேவர்த்தன தெரிவித்தார். பணியாளர்களது பிரச்சினைகள் தொடர்பில் அமைச்சரவையில் விவாதிக்கப்படும் என்றார்.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக நாடளாவிய ரீதியில் தபால் சேவையானது முழுவதுமாக செயலிழந்துள்ளது. வெளிநாட்டு மற்றும் பதிவுத்தபால் சேவைகளும் முற்று முழுதாக பாதிப்படைந்துள்ளன. (ற-5)

# ஹுசேனின் வாய்மூல அறிக்கைக்கு பதிலளிக்கத் தயாராகிறது இலங்கை

கொழும்பு, ஜூன் 16

இலங்கையின் மனித உரிமை நிலமை மற்றும் உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பில் ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் சையிட் அல் ஹுசேனின் வாய்மூல அறிக்கைக்கு பதிலளிப்பதற்கு இலங்கையரசு தயாராகி வருகின்றது.

ஹுசேனால் வெளியிடப்படவுள்ள வாய்மூல அறிக்கையானது உள்ளக விசாரணைப் பொறிமுறை குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்புவதாக அமையும் என்பதை அவரின் ஆரம்ப உரையிலிருந்து ஊகிக்க முடிவதால் அரசு அது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றது.

ஜெனிவாவில் உரையாற்றவுள்ள வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பான முன்னேற்றம் மற்றும் அரசு இது தொடர்பில் மேற்கொண்டுள்ள வேலைத்திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கவுள்ளார். உள்ளக விசாரணைப் பொறிமுறையானது எவ்வளவு காலத்துக்கு இயங்கும் மற்றும் அதற்கான ஆணை எவ்வாறு அமையும் என்றும் அதற்கான அடிப்படைக் கட்டமைப்பு குறித்தும் அமைச்சர் மங்கள சமரவீர தனது விளக்கத்தில் குறிப்பிடுவார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 28ஆம் திகதி ஜெனிவா செல்லவுள்ள அமைச்சர் மங்கள சமரவீர, ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் ஹுசேனைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதன்போது ஹுசேன் கோரியுள்ள நீதி வழங்கும் செயற்பாட்டுக்கான உபாய மார்க்கம் குறித்தும் கலந்துரையாடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உள்ளக விசாரணைப் பொறிமுறையின் வடிவம் குறித்தும் அமைச்சர் மங்கள ஹுசேனுக்கு விளக்கமளிக்கவுள்ளார். (ற-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# ஐ.நா.மனித உரிமைகள் சபையே நீ, என்ன செய்யப் போகிறாய்...?

மலையைக் கெல்லிய போதிலும், எலியை மட்டுமே பிடிக்க முடிந்தது. தமிழ் முதுமொழிகளில் மேற்போந்ததும் ஒன்று. எதற்காக இந்தப் பீடிகை என்று வாசகர்கள் மனதுக்குள் முணுமுணுப்பது கேட்கிறது.

காணாமற் போனோர், இல்லை இல்லை காணாமற் போகச் செய்யப்பட்டோர் குறித்து கடந்த 2013 ஓகஸ்ட் மாதம் முதல் விசாரணை செய்த ஆணைக்குழு ஒன்றின் தலைவர் மக்ஸ்வெல் பரணகம தமது ஆதங்கத்தை வெளியிட்டுள்ளார்.

நாட்டில் நடந்த போரின்போது--இறுதிக் கட்டப் போரின்போது, சரண் அடைந்தவர்களின் பெயர் விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சு இதுவரை வழங்கவில்லை என்ற மனப்புளுக்கத்தின் வெளிப்பாடே அது என்று கொள்ளலாம்.

முறைப்பாட்டாளர்கள் தெரிவித்தமைக்கு அமைய விவரங்களை வழங்குமாறு உத்தியோகபூர்வமாகக் கேட்டபோதிலும், அது கிடைக்கவில்லை என்பது அவரது ஆதங்கத்துக்கு மூலகாரணம் எனலாம்.

தாம் கேட்ட பட்டியல் கிடைத்திருப்பின், விசாரணைகளுக்கு பேருதவியாக அமைந்திருக்கும் என்றும், அவர் மனம் நொந்து கூறியுள்ளார்.

மேலும், புனர்வாழ்வு நிலையங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் பட்டியல்களைக் கேட்டிருந்தோம். அவை எமக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும்-

15,000 பெயர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், சில பெயர்கள் புனைபெயர்களாகவே இருந்தன.

இவற்றுக்கு மத்தியில், யாழ்.குடாநாட்டில் வன்செயல்களின்போது, காணாமற் போனவர்கள், இறந்து போனவர்களாகப் பதிவு செய்யப்படும் அட்டூழியமும் அவ்வப்போது, மேலெழுந்தது.

காணாமற் போனோர் விவகாரத்தில், மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளாதீர்கள் என்று பாதிக்கப்பட்டோரிடம், பாதுகாவலர் சங்கம் கோரிக்கை விடுத்ததும் இங்கு ஊன்றிப் பதியப்பட வேண்டிய ஒன்றாகும்.

ஐ.நா.மனித உரிமைகள் சபையின் செயற்குழு வெளியிட்ட அறிக்கையில், அனைத்து நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையிலேயே காணாமற் போனோரின் எண்ணிக்கை மிக உச்சம் என்று 2008 ஆம் ஆண்டில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், காணாமற் போனோர் குறித்து விசாரணை செய்த ஆணைக்குழு தமது பணியை இந்த மாதத்துடன் நிறைவு செய்யவுள்ள கட்டத்தில்-

விசாரணைகளை ஓரளவுக்காவது திருப்திகரமாக முடிக்க இயலாததற்கான பற்றாக்குறைகள் குறித்து எடுத்துச் சொல்வதால் எதுவும் ஆக்கபூர்வமாக, சாதகமான பயன் எதனையும் விளைவிக்கப் போவதில்லையே...!

பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும் என்ற தமிழ் முதுமொழிக்கு, ஒப்ப மீண்டும் மீண்டும், பாதிக்கப்பட்ட மக்கள்--

உறவுகளைப் பறிகொடுத்து, காணாமற் போகச் செய்யப்பட்ட தமிழ் உறவுகளை நினைந்து நினைந்து நெக்குருகுவதைத் தவிர என்ன செய்யலாம்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையே, இது விடயத்தில் நீ என்ன செய்யப் போகிறாய்? இயலாத்தன்மை உன்னிடமும் மேலெழுகிறதே...?

ம.கணபதிப்பிள்ளை

(நேற்றைய தொடர்ச்சி)

வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைமைத்துவம் சிறுபான்மையினத்தவருக்குக் கிடைக்காத வகையில் 1978 இல் வரையப்பட்ட அரசமைப்பினுள் சரத்துக்கள் சேர்க்கப்பட்டுள்ளபோதிலும், அது தோல்வியில் முடிந்திருப்பதை இன்று நாம் பார்க்கிறோம்.

இந்த நாட்டில் தமிழர்களின் உரிமைகளை நிலைநாட்டத் தந்தை செல்வா சிங்களத் தலைமைகளோடு செய்து கொண்ட ஒப்பந்தங்கள் என்னவாயின? எந்தவித பயனுமற்று நீர்த்துப் போயின. நாட்டில் நீதி நியாயத்தை நிலைநாட்டி ஆட்சி புரிய வேண்டிய சிங்களத் தலைமைகள் அவற்றை எல்லாம் புறந்தள்ளின. ஆட்சி புரிந்தன, துர்நடத்தையை வெளிப்படுத்தின.



## டட்லி - செல்வா ஒப்பந்தம்

ஐ.தே.கட்சி டட்லி சேனநாயக்காவின் ஆட்சிக்காலப் பகுதியில் தந்தை செல்வாவோடு ஓர் உடன்படிக்கையை மேற்கொண்டது. மாவட்ட சபையை வலுப்படுத்தி அதனூடாகத் தமிழர் உரிமைகளை உறுதிப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சியே அது. அந்த முயற்சியை முன்னெடுத்துச் செல்ல

> சிங்கள ஆட்சியாளர்களின் கண்மூடித்தனமான ஆட்சியால் பாதிப்படைந்த சிறுபான்மை இனம் அவ்வப்போது தமது எதிர்ப்பைத் தெரிவித்து, அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டதும், அந்தப் போராட்டங்களை ஆட்சியாளர் படைபலம் கொண்டு அச்சுறுத்தி மிரட்டி அடக்கிவந்ததுவும், அதனால் பல இனக் கலவரங்கள் இந்த நாட்டில் அரங்கேறின என்பதுவும், இந்த முப்பதாண்டு அரசியலின் வரலாற்றுப் பதிவாகும்.

அமைச்சரவையில் தமிழ் அமைச்சர் திருச்செல்வம் இடம்பெற்றிருந்தார். அவர் தமிழர் இருப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு திருகோணமலையில் கோயில் கொண்டிருக்கும் பாடல்பெற்ற பழம்பெரும் கோணேசர் கோயிலைச் சூழ உள்ள நிலப் பரப்பைப் புனிதபிரதேசமாக்க எடுத்த முயற்சி தடுக்கப்பட்டது.

அதற்குத் தடை போட்டவர் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தனாவே. அதனால் அமைச்சர் தமது பதவி யைத் துறந்தார். இந்த நிலையில் பிரதமர் டட்லி தந்தையை அழைத்து ஆட்சியைக் கலைக் கட்டுமா? என்று கேட்டார். அதற்குத் தந்தை செல்வா எங்களுக்காக ஆட்சியைக் கலைக்க வேண்டாம். நீங்கள் ஆட்சியைத் தொடருங்கள். நாம் விலகிக் கொள்கிறோம் – என்றார். இதுவே தமிழர் செல்நெறி.

இங்கேதந்தை செல்வா அரசியல் பண்பாட்டின் சிகரத்தையே எட்டி நின்றார். ஆட்சி அதிகாரத்தைக் கைவசப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு ஓர் இனத்தின் பிறப்புரிமைகளைப் பற்றிச் சிறிதேனும் சிந்திக்காமல் வீம்புபேசும் சிங்களத் தலைமைகளால் தந்தை செல்வாவின் அரசியல் பண்பாட்டின் மாண்பையும் அதன் பெருமையையும் எங்ஙனம் புரிந்துகொள்ள அன்றி உணர்ந்து கொள்ள முடியும்.

பின்னாளில் நாடாளுமன்றில் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசியல் உரிமைகளைப் பறித்து பெண் என்றும் பாராமல் கூக்குரலிட்டுக் கும்மாளம் போட்டு ஐ.தே.க அரசு அவரைக் கேலி செய்தவேளையிலே அந்த அம்மையார் செய்வது இன்னதென்று அறியாது சிந்திய மூக்கும், அழுத கண்ணீருமாய் அவலப்பட்டபோது, அன்றைய எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கமும் தலைவர் மு.சிவசிதம்பரமும் அவருக்கு ஆறுதலும் தேறுதலும் கூறி, பக்குவமாய் அவரை அவையிலிருந்து வெளியேற்றி வீடுவரை அவரைக் கொண்டு சென்றனர். இந்தத் தமிழர் தம் பண்பாட்டின் செல்நெறி சிங்களத் தலைமைகளால். இன்று வரை புரிந்து கொள்ளப்படாதிருப்பது ஏனோ?

## கண்மூடித்தனமான ஆட்சி

சிங்கள ஆட்சியாளர்களின் கண்மூடித்தனமான ஆட்சியால் பாதிப்படைந்த சிறுபான்மை இனம் அவ்வப்போது தமது எதிர்ப்பைத் தெரிவித்து அமைதி வழிப் போராட்டத்தில் ஈடுபட்டது. அந்தப் போராட்டங்களை ஆட்சியாளர்கள் படைபலம் கொண்டு அச்சுறுத்தி மிரட்டி அடக்கிவந்தனர். அதனால் பல இனக் கலவரங்கள் இந்த நாட்டில் அரங்கேறின என்பது இந்த முப்பதாண்டு அரசியலின் வரலாற்றுப் பதிவாகும்.


அரசின் திட்டமிட்ட செயல்களுக்கு எடுத்துக்காட்டாக ஒன்றைக் குறிப்பிடலாம். யாழ்ப்பாணத்தில் நான்காவது தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை நடத்த தமிழறிஞர் குழு எடுத்த முடிவை அரசு ஏற்க மறுத்து, அந்த மாநாட்டைக் கொழும்பு நகரில் நடத்தும்படி பணிப்புரை வழங்கியது, அந்தப் பணிப்புரைக்கு கீழ்ப் படியாத தமிழ் அறிஞர் குழு யாழ். நகரிலேயே அந்த மாநாட்டை நடத்த உறுதியாக நின்று தம்பணியை முன்னெடுத்துச் சென்றது.

இந்த மாநாட்டைச் சிறப்பிக்க உலகில் பல நாடுகளில் இருந்தும் தமிழ் ஆர்வலர்களும் அறிஞர்களும் வருகை தர இருந்தனர்.

அந்த வருகையைத் தடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்ட போதிலும் அதைச் சரிவர அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. சிறப்பாக நடந்த மாநாட்டின் இறுதிநாளில் திட்டமிடப்பட்ட அரசின் கபடத்தனம் தலைதூக்கியது.

மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டது. எங்கும் காரிருள் சூழ்ந்தது. கண்ணீர்ப் புகைக் குண்டுகள் மழைத் தாரை போல் எங்கும் சொட்டுச் சொட்டாக வீழ்ந்தன. இந்த் வேளையிலே மாநாட்டில் கலந்துகொண்ட பெண்பிள்ளைகள், மூத்தோர் இளையோரின் நிலை எப்படி இருந்திருக்கும்? அதை எப்படி எடுத்துரைப்பது?

மக்கள் கூட்டம் கொந்தளித்தது. எங்கும் கூக்குரல். எங்கும் அவலக்குரல். திக்குத்திசை எதுவென்று தெரியவில்லை! மக்கள் இழுத்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனத்தவரை மதிக்காததால் நாட்டில்

# பெரும் பிரளயம்

துப் பறித்துக்கொண்டு ஓடினர், முட்டினர், மோதினர் இந்த நெரிசலிலே அகப்பட்ட ஒன்பது தமிழர்கள் பரிதாபமாகச் சாவடைந்தார்கள்.

முடமான இளமறியை முதுகில் ஏந்தி மூவுலகும் உலாவந்த பகவான் புத்தர் பிரான். மூன்று முறை கால் பதித்த புண்ணிய பூமியான இலங்கைத் திருநாட்டில் இப்படியான நாடகம் அரங்கேறியிருப்பது சிங்களத் தலைவர்களின் கபடத் தனத்தின் வினையா? அல்லது விளையாட்டா?

பெரும்பான்மை இனம் என்ற மிடுக்கால் ஏற்பட்ட வீம்பும் அதன் வழிவந்த துர்செயல் முனைப்புகளுமே இவை எனச் சொல்லிவிட முடியும். ஆங்கிலேயர் ஆட்சியில் கல்வியறிவால் உயர்ந்து கடமையால் சிறந்து உத்தியோக வசதிவாய்ப்புக்களைப் பெற்ற தமிழர்கள் தங்களுடைய ஆளுகையின் கீழ், அடங்கி வாழ்ந்தால் என்ன? என்பதுவே சிங்களத் தலைமைகளின் எண்ணக் கருவாகும். இந்தக் கருவை கருத்தில் கொண்டே அவர்களது செயற்பாடுகளும் அமைந்திருந்தன.

இதனைக் கண்டு கொண்ட தமிழ் இளைஞர்கள் உள அழுத்தத்தால் உந்தப்பட்டு அமைதி வழிப்பட்ட மிதவாதத் தலைமைகளைப் புறந்தள்ளி வீறுபெற்ற நிலையே அடுத்த முப்பது ஆண்டு ஆயுதப் போராட்டமாக



*தந்தை செல்வா 1961 ஆம் ஆண்டு லண்டன் செல்வதற் காக கொழும்பு விமான நிலையத்தை வந்தடைந்தபோது பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்படுகின்றார்.*

இலங்கை அன்னையின் வரலாறில் பதிவாகிறது.

இலங்கையில் நடந்தது உள் நாட்டுப் போர். அது சகோதரப் போர். இந்த நாட்டைத் தாயகமாகக் கொண்ட இரு இனங்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாட்டால் ஏற்பட்ட போர். அரசியல் ஆதிக்கமும் அடக்குமுறையும் கொண்ட ஓர் அணிக்கும் மறுக்கப்பட்ட உரிமைக்காகவும் வாழ்வாதாரத்துக்காகவும் கிளர்ந்தெழுந்த அணியுடன் வெடித்த போர் இது.

தந்தை செல்வா அறிவால் தமிழினத்தை ஓரணியாக்கினார். இளைஞர் அணித்தலைவரோ ஆயுதமுனையில் தமிழ் இனத்தை ஓரணியாக்கினார். தமிழர் வாழ்விடங்களான வடகிழக்கு மாகாணங்கள் போர்க்களமாக மாறின. முப்படைக்கு முன்னே, அவர்களைச் சொற்ப எண்ணிக்கையைக் கொண்ட வீரர்கள் எதிர்கொண்டார்கள். அவர்களது மூலோபாயத்துக்கும் வீரதீரச் செயல்களுக்கும் முப்படைகளாலும் ஈடுகொடுக்க முடியவில்லையே! என்ன அதிசயம்!! இதை உலகே கண்டு வியந்தது. அவர்களின் செயற்பாடுகளில் சில உலகையே அச்சுறுத்துவதாகக் கருதிய உலகம், அவர்களைப் பயங்கரவாதிகள் பட்டியலில் இணைத்துவிட்டது. உலகம் சொன்னது, நீங்கள் உரிமைக்காகப் போராடுகிறீர்கள். அதில் தவறில்லை. அது உங்கள் பிறப்புரிமை. ஆனால் நீதிக்குப் புறமான மனித உரிமைக்கு மாறான செயற்பாடுகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். அந்த அறிவுறுத்தலைக் கருத்தில் கொள்ளாததால் உலகமும் எமது போராட்டத்தை நசுக்கும் கைங்கரியத்தில் இறங்கியது.

**முடிசூடா மன்னனாக மகிந்த**

நமது போராட்டத்தைச் சிங்களப் படையால் வெற்றி கொள்ள முடியுமா? உலகம்தான் அவர்களுக்கு வெற்றிவாய்ப்பைத் தேடிக் கொடுத்தது. போரின் பின், போராட்டத்துக்கு மூலகாரணமாக இருக்கும் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசு முயற்சிக்கும் என்று உலகம் எதிர்பார்த்தது. ஆனால், சிங்களத் தலைமைகளோ தமிழர் உரிமைப் போர் அடக்கப்பட்டுவிட்டது. அவர்களுக்கு ஏது தீர்வு என்ற அலட்சியப் போக்கைக் கையாண்டது. இன்று நல்லாட்சி பற்றிப் பேசும் இருகட்சிகளின் தலைமைகளும் அன்று அதைப் பற்றிய கருத்துக்களையே வெளிப்படுத்தின.

இந்தநிலையில் மகிந்தவை பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டிய பெருவீரனாக சாதனையாளனாக காலம் உருவாக்கியது. சிங்கள ஊடகங்கள் அவர் புகழ் பாட முடிசூடா மன்னனாக அவர் புகழின் சிகரத்தையே எட்டி நின்றார்.

தென்னிலங்கை விழாக் கோலம் பூண்டது. மகிழ்ச்சி வெள்ளத்தில் சிங்களப் பேரினவாதம் எக்காளமிட்டது, ஆனால் சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் சுதந்திர உணர்வை அடக்கலாம், ஒடுக்கிவிடலாம் என்று சிங்களத் தலைமைகள் இனி மேலும் எண்ண வேண்டாம். அவர்களின் பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், எத்தனை யுகங்கள் சென்றாலும் அவர்களின் ஆழ்வுணர்வுகள் கொழுந்து விட்டு எரிந்தவண்ணமே இருக்கும். இதையொரு பயமுறுத்தலாகக் கருதவேண்டாம். தமிழ் மக்களின் செல்நெறியே அதுவாகும் என்று கருதுங்கள். விரைந்து இந்தப் பிரச்சினைக்கு முடிவு காண முயலுங்கள்.

## தவறு செய்தவர்கள் இனியாவது திருந்துவார்களா?

தென்னிந்தியாவைச் சேர்ந்த நான்கு சிற்பிகள் அலவாங்கால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று வெளிவந்த செய்தி வேதனையைத் தந்தது. போர் முடிந்த பின்னர் இங்குள்ள ஆலயங்களில் பல்வேறு சீரமைப்புப் பணிகள் இடம்பெற்றுவருகின்றன. இதில் தென்னிந்தியாவைச் சேர்ந்த சிற்பிகள் பலர் ஈடுபட்டுள்ளனர் என்பதைஅவதானிக்க முடிகின்றது. இவர்களில் பலர் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் தமது பணிகளைச் சிறப்பாகச் செய்து முடிப்பதையும் காண முடிகின்றது. இந்த நிலையில் மேற்படி நான்குசிற்பிகள்தாக்கப்பட்டமையானது,தமிழ்நாட்டுமக்களின்உணர்வலைகளைத் தாக்கி விடும் என்பதில் ஐயமில்லை.

ஏதாவது பிணக்கு இருப்பின், அதைப் பேசித் தீர்த்துக் கொள்வதே நியாயமானது. பிழை, சரி எவரிடத்திலும் இருக்கலாம். ஆனால், பண்புகளை இழந்து அலவாங்கால் சிற்பிகள் தாக்கப்பட்டுள்ளமைதான் ஏற்றுக்கொள்ள முடியாத தவறாகும். ஏற்கனவே உள்ளூரில் வாள்வெட்டுக் கலாசாரம் புரையோடிப் போயுள்ள நிலையில், சிற்பிகள் தாக்கப்பட்டமை எமது பெயருக்கு அபகீர்த்தியையே ஏற்படுத்தப் போகின்றது. ஈழத் தமிழர்கள் இன்னல்படும் போதெல்லாம் தமிழ் நாட்டிலுள்ள எமது உறவுகளே குரல் கொடுக்கின்றனர்.

அவர்களின் ஆதரவு எமக்கு ஆறுதலையும் கொடுக்கின்றது. இந்த நிலையில் மிலேச்சத்தனமான வகையில் சிற்பிகள் தாக்கப்பட்டதை எவருமே நியாயப்படுத்த முடியாது. அத்துடன் இந்திய – இலங்கை மீனவர் விவகாரம் தீர்வு எதுவுமின்றி இழுபறி நிலையில் காணப்படுகின்றது. இது இந்த இரு பகுதியினரதும் வாழ்வாதாரப் பிரச்சினை என்பதால் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் விளங்குகின்றது.

வாள், அலவாங்கு ஆகியவற்றைக் கையில் ஏந்தி மற்றவர்களைத் தாக்குவதைப் பண்பாடு உள்ள எந்தச் சமூகமும் ஏற்றுக்கொள்ளாது, தவறு புரிந்தவர்கள் இனியாவது தம்மைத் திருத்திக்கொள்வார்களா?

வேழமுகன், இணுவில்

## தண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுதான் என்ன?

சுன்னாகத்தை அண்டிய பகுதிகளில் வாழ்கின்ற மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினை நீண்டுகொண்டே செல்வது வேதனையைத் தருகின்றது.

பொறுப்பில்லாத மனிதர்களின் செயற்பாடுகளால் இன்று குடாநாட்டு நீர்வளம் பயன்பாட்டுக்கு உதவாததாக மாறிவிட்டது. அதிலும் சுன்னாகத்தை அண்டிய பிரதேசத்திலுள்ள நிலத்தடி நீர் எண்ணெய்க் கழிவுகள் கலந்து பாவனைக்கு உதவாததாக மாறிவிட்டது என்று சொல்லப்படுகிறது.

இதனால் அங்கு வாழ்கின்ற மக்கள் தமது குடிதண்ணீர்த் தேவையை பூர்த்தி செய்வதில் பெரும் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

சில குடும்பத்தினர் வருவது வரட்டும் என்ற அசட்டுத் துணிவுடன் தமது கிணற்று நீரை எடுத்து அருந்துவதையும் காணமுடிகின்றது.

ஆனால், இதன் காரணமாகப் பெரும் பின்விளைவுகளை இவர்கள் எதிர்கொள்ளப்போகின்றனர். ஆகவே இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமானதொரு தீர்வைக் காண்பதே சிறந்ததாகும். மலத்தொற்றும், எண்ணெய்க் கழிவும் நிறைந்த நீரைத் தொடர்ந்து எவ்வளவு காலத்துக்குப் பயன்படுத்துவது? இதற்கு நிரந்தரத் தீர்வு கிடைக்காதா?

உரியவர்களே இது உங்களின் கவனத்துக்கு.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். [illegible] விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : U
Twitter : UTH



# நாய் இறைச்சித் திருவிழாவை நிறுத்துமாறு மனு கையளிப்பு

## சீன ஜனாதிபதியிடம்

பீஜிங், ஜூன் 16

சீனாவில் யூலின் நகரில் நடைபெறவுள்ள நாய் இறைச்சித் திருவிழாவுக்கு எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. எதிர்ப்புத் தெரிவித்து ஆரம்பிக்கப்பட்டுள்ள கையெழுத்துப் போராட்டத்தில் இதுவரை 11 மில்லியன் மக்கள் கையெழுத்திட்டுள்ளனர்.

பெரும்பாலான மக்களுக்கு நாய் செல்லப் பிராணியாகும். ஆனால், நாய் இறைச்சி உண்பது என்பது சீனாவில் சர்வசாதாரணமாகும். அதைத் திருவிழாவாகவும் கொண்டாடுகின்றனர்.

இந்தநிலையில் சர்வதேச மனித வள அமைப்பால் இந்தத் திருவிழாவை நிறுத்துமாறு மனு கையளிக்கப்பட்டுள்ளது. லண்டனில் உள்ள சீனத் தூதரகத்தில் இந்த மனு கையளிக்கப்பட்டது. எனினும் அதைச் சீனத் தூதரகம் நிராகரித்துவிட்டது. அதனால் சீன ஜனாதிபதிக்கு நேரடியாக மனுக் கையளிக்கப்பட்டுள்ளது.

கூண்டுகளில் அடைக்கப்படும் நாய்கள் உணவு, நீர் இன்றி யூலின் நகருக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. அங்கு கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றன. இதனைத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் நாய் இறைச்சி சுகாதாரத்துக்குச் சிறந்தது. வெப்ப காலத்துக்கு உகந்த உணவு என்று விழாவுக்கு ஆதரவளிப்போர் கூறுகின்றனர்.

(ந-ரி4)

# திருமணம் செய்ததால் இளம் பெண் கொலை

லாகூர், ஜூன் 16

பாகிஸ்தானில் தனது விருப்பத்துக்கு திருமணம் செய்த பெண்ணை அவரது சகோதரர் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நாட்டையே உலுக்கியுள்ளது. அனும் – இசாக் – மசி என்ற பெண் வீட்டைவிட்டு வெளியேறி கிறிஸ்தவர் ஒருவரைத் திருமணம் செய்து கொண்டார். அதனை விரும்பாத அவரது சகோதரர் சாகிப் இசாக் மசி, தலையில் மரக்கட்டையால் அடித்துக் கொலை செய்துள்ளார்.

இந்தக் கொலைக்கு எதிராக அனுமின் தந்தை வழக்குப் பதிவு செய்தார். பாகிஸ்தானில் கௌரவக் கொலைகள் இடம்பெறுவது மிகக்குறைவே. ஆனால் இன்னமும் இவ்வாறான கொலைகள் பிற்போக்கான சமூகத்தினரிடையே இடம்பெறுகின்றன என்று சமூக ஆர்வலர் ஒருவர் தெரிவித்தார்.

(ந-ரி4)

# பிரான்ஸில் பெரும் ஆ
# வன்முறைகளில் 41

பரிஸ், ஜூன் 16

பிரான்ஸில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள தொழிலாளர் சட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் பெரும் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் தலைநகர் பரிஸில் ஒன்றுகூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஆர்ப்பாட்டத்தில் வன்முறைகள் ஏற்பட்டதை அடுத்துப் பொலிஸார் கண்ணீர் புகைத் தாக்குதல் நடத்தினர்.

வன்முறைகளில் 17 பொதுமக்களும், 24 பொலிஸாரும் காயமடைந்தனர். 58 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டங்களால் பிரான்ஸ் பொலிஸார் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டுள்ளனர். தற்போது பிரான்ஸில் யூரோ உதைபந்தாட்டத் தொடர் நடைபெற்று வருகின்றது. இந்த நிலையில் ஆர்ப்பாட்டங்களால் பாதுகாப்பு ஏற்பாடுகள் பாதிப்படையும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஐ.எஸ். அமைப்பால் அதிக அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ள ஐரோப்பிய நாடுகளில், பிரான்ஸும் ஒன்றாகும். இந்தக் குழப்ப நிலையைப் பயன்படுத்தி தீவிரவாத அமைப்புக்கள் தாக்குதல் நடத்தக் கூடும் என்றும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

(ந-ரி4)



# 68 வயதுப் பாடசாலை மாணவன்

காத்மண்டு, ஜூன் 16

நேபாளத்தில் 68 வயதான கமி எனும் முதியவர் அந்த நாட்டின் வயது முதிர்ந்த பாடசாலை மாணவன் எனக் கருதப்படுகிறார். தற்போது அவர் பள்ளிப் படிப்பை முடித்துக்கொண்டு ஆசிரியராக வேண்டும் என்ற இலட்சியத்துடன் பாடசாலைக்குச் சென்று வருகிறார்.



10 ஆம் வகுப்பில் கல்வி கற்கும் கமி 14 – 15 வயதினருடன் கல்வி கற்று வருகிறார். தனது கவலைகளை மறக்க கல்வி கற்கிறேன் என்று கூறுகின்றார் அவர்.

முதியவருக்குக் கற்பிக்கும் அனுபவம் இதுவே முதல் முறை என வகுப்பாசிரியர் தெரிவித்தார்.

தனிமையை அதிகம் உணரும் கமி, படிப்பிலும் விளையாட்டிலும் கவனம் செலுத்தி வருகிறார். மிகவும் உறுதியான மனப்பாங்குடன் எனது விருப்பத்துக்கமைய வாழ்க்கையை நடத்தி வருகின்றேன் என்று அவர் தெரிவித்தார்.

(ந-ரி4)

# கவனத்
# அழகா

லண்டன், ஜூன்.16

சிறுவர்கள் தம்மை அ
சியாகவும் காண்பிப்ப
தம்மைக் கவனிக்க
தற்காகவே என அ
கண்டு பிடிக்கப்பட்டுள்
கள் அதிக கவனத்
ரிப்பையும் பெறுவத
மிகவும் மருட்சியாகக்
கின்றன என ஒக்ஸ்பே
கழக ஆய்வில் தெரிவி
மனித மூளை அழகு
கும் செயற்றிறனைக்
உண்டு. அதனால் சி
வெளித் தோற்றத்தை
விதத்தில் பேணுகின்ற



சண்டை நடப்பதால் மக்கள் பாதுகாப்புத் தேடி நதியைக் கடப்பதற்கு காத்திருக்கின்றனர்.

# பலூஜாவில் தொடர்ந்து உக்கிர மோதல்கள் ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றம்

பாக்தாத், ஜூன் 16

ஈராக்கின் பலூஜா நகர் மீது ஈராக் படைகள் கடுத் தாக்குதலை நடத்திவரும் நிலையில், கடந்த 3 வாரங்களுக்குள் அங்கிருந்து 43ஆயிரம் பொதுமக்கள் வெளியேறியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.


ஐ.நாவின் அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளது. கடந்த மாதம் 22ஆம் திகதியில் இருந்து கடந்த 13ஆம் திகதிவரையான காலப் பகுதியிலேயே குறித்த எண்ணிக்கையான மக்கள் வெளியேறியுள்ளனர்.

ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பலூஜா நகர் மீது ஈராக் படைகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளன. நகரின் அண்மைய பகுதிகளை ஈராக் படைகளிடம் இழந்துள்ள ஐ.எஸ். அமைப்பு பலூஜா நகரைத் தக்க வைக்கும் முயற்சியாகப் பொதுமக்களைக் கேடயமாக வைத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. எனினும் அங்கிருந்து பெரும் எண்ணிக்கையான மக்கள் ஆபத்தான நதியைக் கடந்து தப்பிச்செல்கின்றனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பெரும் எண்ணிக்கையான மக்கள் குறுகிய காலத்தில் அகதிகளாகியுள்ளதால் அவர்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் பெரும் சிக்கல் நிலை காணப்படுகின்றது. அகதிகளுக்கான பொருள் விநியோகமும் நிதிப்பற்றாக்குறையும் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, பலூஜா நகரில் இருந்து தப்பிச் செல்லும் பொதுமக்கள் மீது ஐ.எஸ். அமைப்பு தாக்குதல் மேற்கொண்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ந-ரி4)



சொனி நிறுவனத்தின் தயாரிப்பான
விளையாட்டுக்களை விளையாடும் மு
முழுதாக மூடியிருக்கும் இந்த கவசத்தின்
பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம் ஆர்ப்பாட்டம் 41 பேர் காயம்



## வனத்தை ஈர்ப்பதற்கு ழகாகும் சிறுவர்கள்

, ஜூன்.16
ள் தம்மை அழகாகவும், மருட் ம் காண்பிப்பது பெரியவர்கள் க் கவனிக்க வேண்டும் என்ப வே என ஆய்வு ஒன்றில் டிக்கப்பட்டுள்ளது. குழந்தை திக கவனத்தையும், பராம யும் பெறுவதற்காக தம்மை மருட்சியாகக் காட்டிக் கொள் என ஒக்ஸ்போர்ட் பல்கலைக் ய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மளை அழகுக்கும், மருட்சிக் பற்றிறனைக் காட்டும் இயல்பு அதனால் சிறுவர்கள் தமது தோற்றத்தைக் கவரக்கூடிய ் பேணுகின்றனர் என அந்த ஆய்வு தெரிவிக்கின்றது. இவற்றுடன் சத்தம் மற்றும் வாசனையும் செல் வாக்கு செலுத்துகின்றன என்று அந்த ஆய்வு தெரிவிக்கின்றது.

குழந்கைளின் மருட்சியான தன்மை எமது மூளையை அதிகம் தூண்டு பவை என ஆய்வை மேற் கொண்ட பேராசிரியர் தெரி வித்தார்.

அவர்களின் இந்த இயல்பு எம்மைக் கட்டுப்படுத்தி, அவர் களுக்கு இலாவகமான முறையில் எம்மை நடத்து விக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

(ற-ரி4)



யாரிப்பான வி.ஆர் ஹெட்செட் மூலம் மென் செயலி ளயாடும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. கண்களை த கவசத்தின் மூலம், நேரடியாக விளையாடும் அனுபவத்தை

(ற-ரி4)

## சிகரெட் வீசினால் அபராதம்



பேர்ன், ஜூன் 16
சுவிட்சர்லாந்து நாட்டில் சிகரெட் புகைத்துவிட்டு அதனைச் சாலையில் வீசும் நபர்களுக்கு 100 பிராங் அபராதம் விதிக்கும் புதிய நடவடிக்கை ஆரம்பமாகவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சுவிஸில் உள்ள பொது இடங்களில் சிகரெட் துண்டுகளை வீசுவது, உணவுப் பொட்டலங்களைப் போடுவது, பிளாஸ்ரிக் போத்தல்களை வீசிச் செல்வது போன்றவற்றைத் தடுக்க அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

சிகரெட் துண்டுகளைச் சாலையில் வீசும் நபர்கள் மீது மாகாண நிர்வாகங்கள் அபராதத் தொகையை வசூல் செய்து வருகின்றன. சுவிஸின் ஜூரா மாகாணத்தில் உள்ள பொறென்சரி என்ற நகராட்சியும் இந்த நடைமுறையைச் செயற்படுத்தவுள்ளது. இந்த நகர் முழுவதும் ஒதுக்கப்பட்ட பொருள்களைக் கொட்டுவதற்காகக் குப்பைத் தொட்டிகள் வைக்கப்படும். முதற்கட்டமாக, சிகரெட் துண்டுகளைச் சாலையில் வீசும் நபர்களுக்கு 100 பிராங்க் அபராதம் விதிக்க நகராட்சி நிர்வாகம் முடிவு செய்துள்ளது என்றும், இது விரைவில் நடைமுறைக்கு வரவுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-ரி4)



## விளையாடிய சிறுவனை இழுத்துச் சென்றது முதலை

வொஷிங்டன், ஜூன் 16
டிஸ்னி ரிசார்ட்டுக்கு பொழுதுபோக்காகச் சென்ற தம்பதியரின் 2 வயதுக் குழந்தையை முதலை இழுத்துச் சென்றது. பொலிஸார் கடும் தேடுதலை மேற்கொண்டுள்ளபோதும், இதுவரை குழந்தையைக் கண்டுபிடிக்கவில்லை.

டிஸ்னிக்குச் சொந்தமானது ஆர்லாண்டோவில் உள்ள கிராண்ட் ஃபுளோரிடியன் ரிசார்ட் மற்றும் ஸ்பா. இது டிஸ்னி மஜிக் ராச்சியத்துக்கு அருகில் உள்ளது. இங்கு ஏராளமானோர் குடும்பத்துடன் வந்து பொழுதுபோக்குவது வழக்கம். நெப்ராஸ்கா மாநிலத்தில் இருந்து இரண்டு குழந்தைகளுடன் குடும்பமாக ஒரு தம்பதியினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்திருந்தனர்.

அமெரிக்க நேரப்படி இரவு 9 மணியளவில் அங்குள்ள கடற்கரை அருகில் அவர்களுடைய 2 வயதுச் சிறுவன் விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது திடீரென ஒரு முதலை கரைக்கு வந்து சிறுவனை நீருக்குள் இழுத்துச் சென்றது. இதைச் சற்றுத் தாமதமாகவே சுற்றி இருந்தவர்கள் அறிந்துள்ளனர். சிறுவனின் தந்தை உடனே நீருக்குள் பாய்ந்து தேடினார். எவ்வளவு தேடியும் குழந்தை கிடைக்கவில்லை. சம்பவம் பரவிய உடனே ஐம்பது பொலிஸ் மற்றும் வன விலங்கு நிபுணர்கள் தீவிரமாகத் தேடினர். ஆனால் குழந்தையை இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இழுத்துச் சென்ற முதலை 4 தொடக்கம் 7 அடி நீளம் உடையது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முதலை இழுத்துச் சென்ற சிறுவனை இனியும் மீட்க நினைப்பது வீண் முயற்சி என அங்குள்ள அதிகாரிகளில் ஒருவரான ஷெரீப் ஜெர்ரி டெமிங்ஸ் தெரிவித்தார்.

டிஸ்னியின் செய்தி தொடர்பாளர் அது குறித்துக் கூறும்போது, இந்தச் சோகமான சம்பவம் துரதிர்ஷ்டவசமானது. அதேசமயம், டிஸ்னி நிறுவனத்தின் புகழைச் சீரழிக்கக் கூடியது – என்றார். (ற-ரி4)

011 5 411 411
www.sdb.lk | @SDBbank
www.facebook.com/sdbbank

ஒரு வருட நிலையான வைப்புக்களுக்கு

11%

(வ.தே.வ. 11%)

கவர்ச்சிகர வருடாந்த வட்டி

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்

011 5 411 411

SDBL சணச அபிவிருத்தி வங்கி பிஎல்சி
தேசத்தின் முன்னோடி

சணச அபிவிருத்தி வங்கி இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg. No: PB62PQ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிறப்பு முதல் இறப்பு வரை

## பிறந்த எண்ணின் பலன்கள் 6

(பிறந்த எண்ணின் பலன்கள் என்ற தொடரில் பிறந்த எண் 6 குறித்த விவரங்கள் இங்கே பிரசுரமாகின்றன.)

ஒன்பது எண்களிலும்இயற்கையிலேயே அதிர்ஷ்டசாலிகளான 6 ஆம் எண்காரர்களைப் பற்றிப் பார்ப்போம். இந்த உலகத்தைப் பற்றி மட்டுமே நினைப்பவர்கள் இவர்கள்தான். பூர்வ ஜென்மம், அடுத்த ஜென்மம் போன்றவற்றில் அதிகம் நம்பிக்கையில்லாதவர்கள். அது மட்டுமல்ல அப்படிப் பேசுபவர்களைக் கண்டால் கிண்டலும், குதர்க்கமும் செய்வார்கள்.
இன்பம், பணம், சுகமான அனுபவங்கள் ஆகியவற்றை நோக்கி இவர்கள் ஓடுவார்கள்! சுயநலம் மிகுந்தவர்கள் இவர்கள்தான். இயல், இசை,நாடகம் ஆகிய முத்தமிழில் மிகவும் ஈடுபாடு உடையவர்கள். நீடித்த இளமை இவர்களது வரப்பிரசாதமாகும். மன்மதர்களின் மைந்தர்கள் இவர்களே. புத்திரபாக்கியம் நிறைந்தவர்கள் இவர்கள் தான். அதிலும் பெண் குழந்தைகள் இவர்களுக்கு அதிகம் உண்டு. பண விடயத்தில் இவர்களே மிகவும் அதிர்ஷ்டமானவர்கள்.
இவர்களே குபேரனின்மைந்தர்கள்! எவர் மூலமாவது எப்படியாவது இவர்களுக்குச் சமயத்துக்கு ஏற்பப் பணம் வந்துகொண்டேஇருக்கும். சாப்பிடுவதிலும், சிற்றின்பத்திலும் பணத்தை நிறையச்செலவு செய்வார்கள்.
ஆனால் மற்ற பொதுவான விடயங்களிலும், அடுத்தவர்களுக்கு (இலாபம் இல்லாமல்) உதவுவதிலும் மிகுந்த கஞ்சத்தனம் பார்ப்பார்கள்.
இந்த 6 எண்காரர்கள் சிற்றின்பத்தில் மிதமாக இருக்கப் பழகிக்கொள்ள வேண்டும். 6 எண் பலம் குறைந்தால் கடவுள், சாத்திரங்கள் மீது மிகுந்த அவநம்பிக்கை கொள்வார்கள். அடிக்கடி மற்றவர்களிடம் பணம் வாங்குவார்கள். ஆனால்திருப்பிக் கொடுக்கும் போது மட்டும் இழுத்துப் பிடித்துத்தான் கொடுப்பார்கள். இவர்கள் தங்களது நேரத்தை காதல், கவிதை, கதை,வசனம், சினிமா, கருவிகள் என்று வீணாக்குவார்கள்.
தங்களது சபல புத்தியின் காரணமாகப் பல அன்பர்கள் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி, ஏங்கி, பல முயற்சிகள் செய்து,பலதுன்பங்களை அடைகின்றனர். மனத்தில் பலவகைக் குணங்கள், பொறாமைகள், மற்றவர்களைப் புண்படுத்தும் குறும்புப் பேச்சுகள் இவர்களுக்கு உண்டு. ஆனால் எவராவது இவர்களுடைய துயரங்களையும், துன்பங்களையும் பற்றிப் பேசினால் இவர்களுக்கு அந்த இடத்தில் இருக்கப் பிடிக்காது. இவர்களுக்கு ஓரளவு கோப குணமும் உண்டு. கோபம் வரும் போது முரட்டுத்தனமாக நடந்து கொள்வார்கள்.
இவர்களுக்கு 5 ஆம் எண்காரர்களைப் போன்று நண்பர்கள் அதிகம்உண்டு.இவர்கள் எளிதில் மாற்ற முடியாத பிடிவாதம்காரர்களே!
எனவே சிறுவயதிலிருந்தே இந்த எண்காரர்கள் ஒழுக்கம், பொறுமை போன்ற நல்ல குணங்களை விடா முயற்சியுடன் வளர்த்துக் கொள்ள வேண்டும். பொதுவாகவே ஒரு வீட்டில் 6 எண் குழந்தைகள் பிறப்பது, அந்தக் குடும்பத்தின் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும் என்பார்கள். மேலும் 6 எண்காரர்கள், தங்கள் பிறந்த வீட்டின் வசதியை விடப் பிற்காலத்தில் உயர்ந்த செல்வர்களாகவே விளங்குவார்கள்.
இவர்களின் காம உணர்ச்சிகள், காதல் ஆகியவை நிலையானவை. ஆனால் அவைகள் வேகமும், முரட்டுத்தனமும் உடையவையாக இவர்களுக்கு இயற்கையிலேயேநிறைந்து காணப்படும். எப்போதும் இவர்கள் தங்களது அதிர்ஷ்டத்தையே நம்பி இருப்பார்கள். துன்பப்பட்டு உழைப்பதில் அலட்சியம் காட்டும் குணம் இருக்கும். இதை இவர்கள் மாற்றிக் கொண்டால்தான் 'விஜயலட்சுமி' எப்போதும் இவர்களுடன் இருப்பாள். தங்களின் அனாவசியக் குடும்பச் செலவுகள், அனாவசிய ஆடம்பரச் செலவுகள் ஆகியவற்றைக் குறைத்துக் கொண்டால்தான்,பணம் எப்போதும் நீங்காமல் இவர்களுடன் இருக்கும். இல்லையெனில் கடன் தொல்லையும், ஏமாற்றமும் ஏன் வறுமையும் கூட ஏற்பட்டு விடும்.

**இவர்களது தொழில்கள்**

இவர்களின் மனத்துக்கு மிகவும் பிடித்தது கலைத் தொழில்தான். எனவே சினிமா, இசை போன்ற பொழுதுபோக்குத் துறை களில்,எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் இவர்களுக்கு வெற்றி நிச்சயம்! மேலும் துணிக்கடை, நகைக்கடை வியாபாரம் போன்றவையும் வெற்றி தரும்.
மற்ற எண்கள் 1, 5 வந்தால் அரச அதிகாரியாகவும் பிரகாசிப்பார்கள். சிற்பம், சித்திரம் போன்ற நுணுக்கமான துறைகளிலும், அலங்காரப் பொருள்கள், கவரிங் நகை விற்பனை தயாரிப்பு ஆகியவற்றிலும் இவர்கள் வெற்றி அடையலாம். அதுமட்டுமன்றி சட்ட நுணுக்கம் பேசி விவாதம் புரியும் சட்டத்தரணிகள், நீதிபதிகள் போன்ற தொழில்களும் ஓரளவு நல்லதே! ஆனால் பணத்துக்காக வளைந்து கொடுக்கும் இயல்பு இவர்களுக்கு உண்டு. மேலும் பெண்கள் உபயோகப்படுத்தும் அனைத்துப் பொருள்கள், அழகு சாதனங்கள் வியாபாரம் போன்றவையும் நன்மை தரும்.

(தொடரும்)

# அடிப்படை வசதிகளின்றி அவலப்படும் மன்னாகண்டல் மக்கள்

■ தனம்

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மன்னாகண்டல் மீள் எழுச்சிக் கிராம மக்கள்தாம்அடிப்படை வசதிகள்இன்றி அவலப்படுகின்றனர்என்று மிக்ககவலையுடன் தெரிவித்தனர்.மன்னாகண்டல் கிராமத்தின்நிலைபற்றி மேலும் அவர்கள் தெரிவிக்கையில்; "மீள் எழுச்சிக் கிராமத்துக்கான வீடுகள் தரப்பட்டுஎம்மைக் குடியேற்றினர். ஆனால் குடியேற்றிய இடத்தில் குடி தண்ணீர் இல்லாததால் வேறு இடங்களுக்கு அலைய வேண்டியுள் ளது. மின்சாரம் இல்லை, சுற்றிவரக் காடுகள், யானைகளின் அட்டகாசம், போக்குவரத்துத் துன்பம் எனப் பல வகையான துன்பங்களை அனுபவித்து வருகின்றோம்" என்றனர்.
அந்தக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி கல்யாணசுந்தரம் அருள் நாயகி தெரிவித்ததாவது:
"இந்தப்பகுதியில் கிணறுகள் மிகவும் குறைந்தளவே உள்ளன. குழாய்க் கிணறுகள் கிடையாது. இருக்கும் கிணற்று நீர் உப்புநீராக (சுவர்) இருப்பதால் நல்லதண்ணீருக்கு நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. எமக்குக்குடிதண்ணீரை வழங்கும் திட்டம் ஒன்று ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."
"எமது கிராமத்தைப் பொறுத்தவரை 254 குடும்பங்களுக்கான காணிகள் உள்ளன. ஆனால் அதிகளவு காணிகளின் உரிமையாளர்கள் புதுக்குடியிருப்பில் வசித்து வருகின்றனர். காணிகள் பெருமளவில் பெரும் காடாக மாறியுள்ளன. வீதிகள் பராமரிப்பின்றி எங்கும் செல்லமுடியாதநிலையில் உள்ளன. பகல் இரவாகக் காட்டு யானைகளின் அட்காசம் உள்ளது. வீடுகளில் உணவுச் சாமான்கள் குறிப்பாக நெல், உழுந்து போன்றவற்றை வைத்திருக்க முடியாது. அண்மையில் பாடிக் கொண்டிருந்த வானொலியைக் கூட யானை தூக்கி எறிந்துள்ளது".
"காணிகளைத் துப்புரவு செய்து மீள் குடியேற்றுங்கள், அவற்றுக்கான பாதைகளையும் முதன்மை வீதிகளையும் புனரமைத்துத் தாருங்கள் என நாம் கேட்டிருந்தும் எதுவும் செய்து தரப்படவில்லை. மின்சாரக் கம்பங்கள் நடப்பட்டு, மின் வயர்கள் பொருத்தப்பட்டுள்ளன. ஆனால் எமக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. மிகவும் துன்பத்தின் மத்தியில் வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்கான அனைத்து வேலைகளையும் செய்துவிட்டு காத்திருக்க வேண்டிய நிலையில் உள்ளோம்" என்றார்.

> எமது கிராமத்தைப் பொறுத்தவரை 254 குடும்பங்களுக்கான காணிகள் உள்ளன. ஆனால் அதிகளவு காணிகளின் உரிமையாளர்கள் புதுக்குடியிருப்பில் வசித்து வருகின்றனர். காணிகள் பெருமளவில் பெரும் காடாக மாறியுள்ளன. வீதிகள் பராமரிப்பின்றி எங்கும் செல்ல முடியாத நிலையில் உள்ளன. பகல் இரவாக காட்டு யானைகளின் அட்டகாசம் உள்ளது.

அந்தக் கிராமத்தைச் சேர்ந்த திருமதி [illegible]வரன் ஜெயராணி தெரிவித்ததாவது: "எனது கணவர் விபத்தில்காலமாகிவிட்டார்.எனக்குநான்குபிள்ளைகள். மூவர் ஆண்கள், ஒருவர் பெண். எனக்கு எந்தவித வருமானமும் இல்லை. மாடு ஒன்றின் மூலமாகக் கிடைக்கும் ஒன்றரை தொடக்கம் இரண்டு லீற்றர் வரையான பாலை விற்பதாலும் 17 வயதான எனது மகன்குடும்பவறுமைகாரணமாக சின்னஞ்சிறு வயதிலும் வீடுகட்டும் மேசன் மாரோடு உதவியாளராக வவுனியா சென்று வேலை செய்வதாலும் குடும்பச் சீவியம் போய்க் கொண்டிருக்கிறது.
எனது காணியைச்சுற்றியுள்ள காணி உரிமையாளர்கள் புதுக்குடியிருப்பில் இருப்பதால் காணிகள் யாவும் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் பகல் இரவாக யானைகளின் தங்குமிடமாக இந்தப்பகுதி மாறியுள்ளது. வீட்டுக்குக் கதவு, யன்னல்களும் இல்லை.பயந்தநிலையிலேயே வாழ்ந்து வருகிறோம். அது மட்டுமல்ல, எமது வீடுகளுக்கு அண்மையில் இராணுவ முகாம் ஒன்றுள் ளது. அதனால் இராணுவ நடமாட்டமும் உள்ளது. எனக்கு ஏனையோரின் உதவி கிடைக்கும் வகையில் காணி ஒன்றை வழங்குமாறு கேட்டேன். ஆனால் வழங் கக் கூடிய காணிகள் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. காட்டின் மத்தியில் நான் தனித்திருப்பது பொருத்தமானதாக இல்லாவிடினும்என்னசெய்வது? பொறுத்துத்தானே ஆகவேண்டியிருக்கிறது" – என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் கல்வி வாய்ப்புக்களுடன் கூடிய பாடத்தேர்வுகளும் நடைமுறைகளும்

சேனாதிராசா ஜெயானந்தன்

க.பொ.த.உயர்தர மாணவர் அனுமதி தொடர்பாக நோக்குகின்றபோது ஒரு மாணவன் அல்லது மாணவி உயர்தர வகுப்பில் சேர்வதற்கான தகைமையைப் பெற்றுள்ள கல்வியாண்டின் மே மாதம் 1 ஆம் திகதி 18 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல்வேண்டும். இவர்கள் இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தால் நடத்தப்பட்ட க.பொ.த. சா.தரப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவோ அல்லது இந்தப்பரீட்சைக்குச் சமாந்தரமான அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சான்றிதழைக் கொண்ட வெளிநாட்டிலிருந்து வரும் மாணவர்களாகவோ இருக்கலாம்.இவற்றைவிட க.பொ.த.சா.தரம் சித்தி பெற்று க.பொ.த.உ.தர அனுமதியைப் பெறத்தகுதியுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்களுடன் வேண்டுகைகள் சமர்ப்பிக்கும் பொழுது அவர்களை அனுமதிப்பது தொடர்பாக மாகாணப் பாடசாலையாயின் மாகாணக் கல்விப்பணிப்பாளராலும் தேசியப் பாடசாலையாயின் கல்வி அமைச்சின் செயலாளராலும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

ஒருவர் க.பொ.த. உயர்தரத்தில் கற்பதற்குரிய அடிப்படைக் கல்வித்தகைமையை நோக்குகின்றபோது அவர் ஊடகமொழி (தமிழ்/ஆங்கிலம்/சிங்களம்), கணிதம் உட்பட ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தி பெறுவதோடு அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருப்பது அவசியமாகும்.

மேலும் ஒருவர் ஒரே தடவையில் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்ய முடியாதபோது இரு தடவைகளில் அவர்களது பெறுபேற்றைப் பூர்த்திசெய்து கொள்ள முடியும். அதாவது முதலாவது தடவையில் ஊடக மொழி கணிதம் உட்பட 5பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு குறைந்தது 3 பாடங்களில் திறமைச்சித்திகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால் அவர் தேவையான அம்சங்களை அடுத்துவரும் ஆண்டுகளில் பூர்த்தி செய்ய வேண்டும். தவறும் பட்சத்தில் பாடசாலையிலிருந்து நீக்கப்படுவர் என்ற நிபந்தனையுடனேயே இணைத்துக் கொள்ளப்படுவர்.

> ஒருவர் க.பொ.த. உயர்தரத்தில் கற்பதற்குரிய அடிப்படைக்கல்வித் தகைமையை நோக்குகின்றபோது அவர் ஊடகமொழி (தமிழ்/ஆங்கிலம்/சிங்களம்), கணிதம் உட்பட ஒரே தடவையில் 6பாடங்களில் சித்தி பெறுவதோடு அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்தியைக் கொண்டிருப்பது அவசியமாகும். மேலும் ஒருவர் ஒரே தடவையில் இந்த நிபந்தனையைப் பூர்த்தி செய்ய முடியாத போது இரு தடவைகளில் அவர்களது பெறுபேற்றைப்பூர்த்தி செய்து கொள்ள முடியும்.



இந்த நிபந்தனைகளைவிட ஒருவர் ஊடகமொழி, கணிதம் உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருப்பதோடு அவற்றில் இரு பாடங்களில் மாத்திரமே திறமைச்சித்தியினைப் பெற்றிருப்பாராயின் பெறத்தவறிய ஏதாவது ஒரு பாடத்தில் பாடசாலை மட்டத்திலான மதிப்பீட்டுத்திட்டத்தில் (பரீட்சைப் பெறுபேற்றிலுள்ள கணிப்பீட்டு மட்டம் 01, 02,03) திறமைச் சித்தியைப் அல்லது அதைவிட உயர்வான சித்தியைக் குறிப்பிட்ட மாணவர் பெற்றிருப்பாராயின் அவரை உயர்தரம் கற்க அனுமதிக்கலாம்.

ஆனால் துறைத்தேர்வையும் பாடத்தேர்வையும் செய்கின்ற போது அந்த நிபந்தனைக்குச் செல்வாக்குச் செலுத்தாத பாடங்களாக இருக்க வேண்டும். குறிப்பாக தமிழ், கணிதம் ஆகிய பாடங்களைத்தவிர ஏனைய பாடங்களை சித்திமாற்றம் செய்யலாம். இவற்றினைத் தவிர பிரதேசத்துக்குப் பிரதேசம் சில வேறுபாடான நெகிழ்ச்சித்தன்மைகளும் பின்பற்றப்படுகின்றன.

**கலைப்பிரிவு** (Arts Stream)

கலைத்துறையைத் தெரிவுசெய்யும் ஒருவர் ஊடகமொழி, கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு 3 பாடங்களில் திறமைச்சித்தியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

சமூக விஞ்ஞானங்கள் /பிரயோக சமூகக் கற்கைகள்

இந்தத்துறையில் குறைந்தது ஒருபாடம் அல்லது விரும்பினால் இரண்டு அல்லது மூன்று பாடங்களைத் தெரிவு செய்யலாம்.

1. பொருளியல்
2. புவியியல்
3. வரலாறு (இந்திய வரலாறு/ஐரோப்பிய வரலாறு/ நவீன உலக வரலாறு)
4. மனைப் பொருளியல்
5. கணக்கீடு/ வணிகப் புள்ளிவிவரவியல்
6. அரசியல் விஞ்ஞான மூலகங்கள்
7. அளவையியலும் விஞ்ஞான முறையும்
8. தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்
9. தொடர்பாடல் ஊடகக் கற்கை
10. விவசாய விஞ்ஞானம்/கணிதம்/இணைந்த கணிதம்

**தொழில்நுட்பவியல் பாடங்கள்**

இந்தப்பிரிவில் ஒரு பாடத்தையும் சமூகவிஞ்ஞானங்கள்/பிரயோக சமூகக் கற்கைகளில் இரு பாடங்களையும் தெரிவு செய்ய முடியும்.

1. மின் இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம்
2. குடிசார் தொழில்நுட்பம்
3. பொறிமுறைத் தொழில்நுட்பம்
4. உணவுத் தொழில்நுட்பம்
5. உயிர்வள தொழில்நுட்பம்
6. விவசாயத் தொழில்நுட்பம்

குறிப்பு: மின் இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம்/ குடிசார் தொழில்நுட்பம்/ பொறிமுறைத் தொழில் நுட்பம் இவற்றில் ஒன்றைக் கலைத்துறையில் எடுப்பதன் மூலம் பல்கலைக்கழகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கற்கை நெறியைத் தேர்வு செய்யமுடியும். (ICT)

**சமயங்களும் நாகரிகங்களும்**

இந்தப் பிரிவில் சமயபாடம் ஒன்றைத் தெரிவு செய்தால் அது தொடர்பான நாகரிக பாடத்தைத் தெரிவு செய்ய முடியாது. சமய பாடத்தைத் தெரிவு செய்யும் ஒருவர் க.பொ.த.சா.தரப் பரீட்சையில் கட்டாயமாக சமயபாடத்தில் திறமைச்சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

1. பௌத்தம் / பௌத்த நாகரிகம்
2. கிறிஸ்தவம்/ கிறிஸ்தவ நாகரிகம்
3. இஸ்லாம்/ இஸ்லாமியநாகரிகம்
4. இந்துசமயம் / இந்துநாகரிகம்
5. கிரேக்க உரோம நாகரிகம்

**அழகியற் கற்கைகள்**

இந்தத் துறையில் ஒன்று அல்லது இரண்டு பாடங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். அழகியல் பாடத்தைத் தெரிவு செய்யும் ஒருவர் க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் கட்டாயமாக அந்தப் பாடத்தில் திறமைச்சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

01. சித்திரம்.
02. நடனம் (சிங்களம்/பரதம்)
03. சங்கீதம்(கர்நாடக/ கீழைத்தேய/ மேலைத்தேய)
04. நாடகமும் அரங்கவியலும்(தமிழ்/சிங்களம்/ஆங்கிலம்)

**வெளிநாட்டு மொழிகள்**

இத்துறையில் குறைந்தது ஒரு பாடம் அல்லது விரும்பினால் இரண்டு பாடங்களைத் தெரிவு செய்யலாம்.

சீனம், பிரெஞ்சு, ஜேர்மன், ஹிந்தி, ஜப்பானிஸ், மலாய், பார்சிய, ரஷ்ய, உருது, சாஸ்திரிய மொழிகள்

சாஸ்திரிய மொழிகளிலும் பாடங்களைத் தெரிவு செய்யலாம்.

அரபு, பாளி, கிரேக்கம், சமஸ்கிருதம், இலத்தீன்

வெளி நாட்டு மொழிகள், சாஸ் திரிய மொழிகள்,இரண்டினையும் இணைத்து விரும்பினால் இரண்டு அல்லது மூன்று பாடங்களைத் தெரிவு செய்யலாம்.

**தேசிய மொழிகள்**

தேசிய மொழிகள் மூன்றினையும் ஒருவர் தெரிவு செய்து கொள்ள முடியும். தேசிய மொழியைத்தெரிவு செய்யும் ஒருவர் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் கட்டாயமாக அப் பாடங்களில் திறமைச் சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.

ஆங்கிலம், சிங்களம், தமிழ்

குறிப்பு:தேசிய மொழிகள் இரண்டையும் சமயங்கள் /நாகரிகங்கள் என்ற பகுதியில் ஒரு பாடத்தினையும் தெரிவு செய்யலாம்.

**வணிகப்பிரிவு** (Commerce Stream)

வணிகத் துறையைத் தெரிவு செய்யும் ஒருவர் ஊடக மொழி, கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தி அடைந்திருப்பதோடு மூன்று பாடங்களில் திறமைச்சித்தியைக் கொண்டிருத்தல்வேண்டும். அவற்றில் கணிதம்/வர்த்தகம்/முயற்சியாண்மைக் கற்கை என்பவற்றில் ஒன்று திறமைச்சித்தியாக இருத்தல் வேண்டும்.

இப்பிரிவில் இரண்டு அல்லது மூன்று பாடங்கள்

01.கணக்கியல்
02.பொருளியல்
03.வணிகக் கல்வி

குறிப்பு : பல்கலைக் கழகத்தில் கணக்கியலும் நிதியும் போன்ற சில பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்குக் கணக்கியல் பாடம் அவசியமானதாகும்.

மூன்றாவது பாடமாக பின்வருவனவற்றுள் ஒன்று.

01.விவசாய விஞ்ஞானம்/ஜேர்மன்
02.அரசியல் விஞ்ஞான மூலகங்கள்.
03.அளவையியலும் விஞ்ஞானமுறையும்
04.பிரெஞ்சு
05.இணைந்த கணிதம்/கணிதம்.
06.வணிகப்புள்ளி விவரவியல்.
07.வரலாறு.
08.ஆங்கிலம்.
09.பௌதீகவியல்.
10.புவியியல்.
11.தகவலும் தொடர்பாடல் தொழில்நுட்பமும்.

கட்டுரையாளர் : ஆசிரியர்,
வழிகாட்டல் ஆலோசனை,
முல்லைத்தீவு மகா வித்தியாலயம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRIN
Twitter : UTHAYANPRINT



# வரலாற்றில் இன்றைய தினம்

1779 - ஐக்கிய ராச்சியத்தின் மீது ஸ்பெயின் போர்ப் பிரகடனம் செய்ததையடுத்து ஜிப்றால்ரர் மீதான பெரும் முற்றுகை தொடங்கியது.

1815 - வோட்டர் லூ சண்டைக்கு இரண்டு நாள்கள் முன்னதாக லிங்கி சண்டை மற்றும் குவாட்டர் பிறாஸ் சண்டைகள் நடைபெற்றன.

1871 - வேதாந்த சாஸ்திரம் தவிர்ந்த ஏனைய பாடநெறிகளை ஒக்ஸ்போர்ட், கேம்பிறிஜ் மற்றும் டர்ஹாம் பல்கலைக்கழகங்களில் கற்பதற்குச் சமய பாடத் தேர்விலிருந்து விலக்களிக்கும் பல்கலைக் கழகத் தேர்வுச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1883 - விக்டோரியா கலையரங்கில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவத்தில் இங்கிலாந்து சண்டர்லாண்டில் 183 சிறார்கள் உயிரிழப்பு.

1891 - ஜோன் அபோட் கனடாவின் மூன்றாவது பிரதமரானார்.

1903 - போர்ட் மோட்டார் கம்பனி கூட்டிணைக்கப்பட்டது.

1904 - பின்லாந்து கவர்னர் ஜெனரல் நிகோலோய் பொப்றிக்கோ்வ, ஈயூன் சமான் என்பவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1911 - நியூயோர்க்கில் கணினி நிரற்படுத்தும் மற்றும் பதிவு செய்யும் கம்பனி ஐபிஎம் உருவாக்கப்பட்டது. (இன்ரநாஷனல் பிஸினஸ் மெசின் கூட்டுத்தாபனம்)

1915 - பெண்கள் நிறுவனம் பிரித்தானியாவில் ஸ்தாபிக்கப்பட்டது.

1940 - லித்துவேனியாவில் கம்யூனிஸ்ட் அரசு அமைக்கப்பட்டது.

1958 - 1956 இல் ஹங்கேரி எழுச்சியில் ஈடுபட்ட இம்ரி நாகி, பால்ம லேற்றர் மற்றும் தலைவர்களுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டது.

1963 - விண்வெளியில் பறந்த முதல் பெண் விண்வெளி வீரரானார் வலன்ரைனா ரெறஸ்கோவா.

1972 - கனடாவின் ஆகப் பெரிய நீர் மின் திட்டம் சேர்ச்சில் நீர்வீழ்ச்சி உற்பத்தி நிலையத்தில் தொடக்கி வைக்கப்பட்டது.

1990 - யாழ்.கோட்டைப் பகுதியில் மோதல். ஷெல் மற்றும் ஹெலி தாக்குதலில் நான்கு பொதுமக்கள் சாவு.

- பலாலிப் பகுதியில் இருந்து ஆயிரக் கணக்கான மக்கள் இடம்பெயர்வு.

1992 - வடக்கு - கிழக்கு இணைப்பை அரசு அனுமதிக்க மாட்டாதென ஜனாதிபதி பிரேமதாச அறிவிப்பு.

2004 - கடந்த வாரம் பொது நிகழ்ச்சி ஒன்றின் போது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமசிங்கவால் பறக்கவிடப்பட்ட புறா இறந்தது ஏன் என விசாரணை செய்ய அதிகாரிகளுக்கு உத்தரவு.

- காலை வேளை மும்பை அருகே ரயில் கவிழ்ந்ததில் 25 பேர் உயிரிழப்பு.

2010 - புகையிலையை முற்றாகத் தடை செய்த முதல் நாடாகியது பூட்டான்.

# சூழ்நிலையால் மாறிய கிளிகள்

காட்டில் இருந்த ஒரு மரத்தில் பெண் கிளி ஒன்று வசித்து வந்தது. அதற்கு இரண்டு குஞ்சுகள் இருந்தன.

தாய்க்கிளி ஒருநாள் வெளியே போயிருந்தபோது ஒரு வேடன் அந்த இரண்டு குஞ்சுகளையும் பிடித்து ஒரு கூட்டுக்குள் அடைத்து வீட்டுக்கு எடுத்துச் சென்றான்.

வழியில் ஒரு கிளிக்குஞ்சு வேடன் கூண்டிலிருந்து தவறிக் கீழே விழுந்துவிட்டது.

கீழே விழுந்த கிளிக்குஞ்சை காட்டிலிருந்த முனிவர் ஒருவர் எடுத்து வளர்த்தார்.

ஒரு குஞ்சை மட்டும் வேடன் வளர்த்தான்.

சில காலத்துக்குப் பிறகு காட்டுக்கு வேட்டையாட வந்த ஒரு மன்னர் வழி தவறித் தன் குதிரை மீது அமர்ந்தவாறு வேடன் வசித்த குடிசையின் பக்கமாக வந்தார்.

மன்னனைக் கண்ட வேடன் வளர்க்கும் கிளி "யாரோ ஒரு திருடன் வருகிறான். அவனைப் பிடித்துக் கட்டு, அடி, உதை, கொல்லு" என்று கூக்குரலிட்டது.



அந்தக் கூச்சலைக் கேட்டு அச்சமடைந்த மன்னர் குதிரையை வேகமாகச் செலுத்தியவாறு அவ்விடத்தை விட்டு அகன்றார்.

பிறகு மன்னர் முனிவர் வசிக்கும் ஆச்சிரம வாசலை அடைந்தார்.

முனிவர் அப்போது ஆச்சிரமத்தில் இல்லை.

முனிவர் வளர்க்கும் கிளி மன்னரைக் கண்டதும் "மன்னர் அவர்களே! வாருங்கள். தங்கள் வரவு நல்வரவாகும். முனிவர் இப்போதுதான் எங்கோ சென்றிருக்கிறார். தயவு செய்து அமர்ந்து களைப்பாறுங்கள். ஆச்சிரமத்தினுள் போதுமான அளவு உணவும், நீரும் இருக்கின்றன. அருள் கூர்ந்து உணவுண்டு, ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள்" என்று மரியாதை தவழ மன்னரை உபசரித்தது.

அந்த இரண்டு கிளிகளுக்குமிடையே இருந்த பண்பு வேறுபாட்டைக் கண்ட மன்னன் ஆச்சரியமடைந்தான்.

அதுகுறித்து முனிவர் வளர்க்கும் கிளியிடமே விளக்கம் கேட்டான்.

"மன்னர் அவர்களே! வேடன் வீட்டில் வளரும் கிளி என்னுடைய சகோதரிதான். ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள். சந்தர்ப்பவசத்தினால் நான் முனிவர் ஆச்சிரமத்திலும், என் சகோதரி வேடன் குடிசையிலும் வளரவேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. எவர் எவர் எந்தெந்த இடத்தில் வளர்கிறார்களோ அந்தச் சூழ்நிலைக்கு ஏற்பத்தான் அவர்களது அறிவும் வளர்ச்சியும் பண்பு நிலையும் அமையும். உதாரணமாக செண்பகப்பூ சாக்கடை ஓரத்திலே வளர்ந்தால் அதன் மணம் சாக்கடை நாற்றத்தில் கரைந்து பொதுவாகச் சாக்கடை நாற்றம்தான் வீசும். அதே செண்பக மலர்ச்செடி அழகான சூழலுடன் கூடிய நந்தவனத்தில் வளர்ந்து மலர்ந்தால் அதன் மணமே மனதை மயக்கும் அளவுக்கு இனிமை தவழ்வதாக இருக்குமல்லவா? என் சகோதரி பண்பாடும் அறிவும் குறைந்த வன்முறைத் தொழில் புரியும் வேடனுடன் வளர்வதால் அவனுடைய வெறுக்கத்தக்க இயல்புகளும் பேச்சும் என் சகோதரியிடம் படிந்துவிட்டன. நானோ பண்பிலும், அறிவிலும் உயர்ந்த முனிவரின் ஆச்சிரமத்திலே வளர்ந்து வருவதால் எனது இயல்பிலும், பேச்சிலும் பண்புணர்வைக் காண முடிகிறது".


இவ்வாறு முனிவரின் ஆச்சிரமத்துக் கிளி கூறியது.

# உலகில் புகழ்பெற்ற பேருரைகள்

## மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி (1869 -1948)

இவர் மகாத்மா காந்தி என அழைக்கப்பட்டார். இவர் தேசப்பிதா என்றும் இந்தியாவில் அறியப்படுபவர். இருபதாம் நூற்றாண்டின் மாபெரும் மனிதர் என்று தேர்வானவர். 1942ஆம் ஆண்டில் இவர் ஆற்றிய உரை "வெள்ளையனே வெளியேறு" என்பது பிரபலமான உரையாகும்.

அந்த உரையில்; தீர்மானத்தை நீங்கள் விவாதிக்கும் முன்பு, நான் உங்கள் முன்பு ஒன்று அல்லது இரண்டு விடயங்களை முன்வைக்கிறேன். நீங்கள் இரண்டு விடயங்களையும் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டு நான் அவற்றை உங்கள் முன்வைக்கும் பார்வையிலேயே பரிசீலிக்க வேண்டுகிறேன். என் பார்வையிலேயே அவற்றைப் பரிசீலிக்க வேண்டும்.




ஏனெனில் அவற்றை நீங்கள் ஆமோதித்தால் நான் கூறுபவற்றை எல்லாம் செயலாற்றிட நீங்கள் உந்தப்படுவீர்கள். அது ஒரு பெரும் பொறுப்பாக இருக்கும். என்னைச் சில பேர் கேட்கிறார்கள்; அதாவது நான் 1920 - இல் இருந்த அதே ஆள்தானா அல்லது என்னிடம் ஏதாவது மாற்றம் நிகழ்ந்து உள்ளதா? என்று. அந்தக் கேள்வியை நீங்கள் என்னிடம் கேட்பது சரியே.

1920 ஆம் ஆண்டு இருந்த அதே காந்திதான் நான் என உறுதியாகக் கூறுகிறேன். எந்த அடிப்படை விடயத்திலும் நான்மாறவில்லை. அப்போது அகிம்சை மீது நான் கொண்டிருந்த முக்கியத்துவத்தை இப்போதும் தொடர்கிறேன். அகிம்சை மீது நான் கொண்டிருந்த அக்கறை பலம் பெற்றுள்ளது. தற்போதைய தீர்மானம் மற்றும் என் முந்தைய எழுத்துக்கள், உரைகள் ஆகியவை இடையே உண்மையில் எந்த முரண்பாடும் இல்லை. தற்போது உள்ள தருணம் போன்றவை வாழ்வில் ஒவ்வொருவருக்கும் நிகழ்வதில்லை. மேலும் அரிதாகவே எவருக்காவது நிகழ்கிறது. இன்று நான் சொல்வது செய்வது எல்லாம் சுத்த அகிம்சை அன்றி வேறில்லை என்பதை நீங்கள் அறிந்திடவும் உணர்ந்திடவும் வேண்டும் என்று விழைகிறேன்.

செயற்குழுவின் வரைவுத் தீர்மானம் அகிம்சையின் அடிப்படையில் உள்ளது. அவ்வாறே தீர்க்கமான போராட்டத்தின் வேர்கள் அகிம்சையில் அமைந்துள்ளன. ஆசையால் உங்களில் யார் ஒருவராவது அகிம்சை மீது நம்பிக்கை இழந்து விட்டு இருந்தாலோ அல்லது விரக்தி ஏற்பட்டு இருந்தாலோ இந்தத் தீர்மானம் மீது வாக்கு அளித்திட வேண்டாம்.

(அடுத்த வியாழன் தொடரும்)





# வர்ணம் தீட்டுவோம் வாங்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டோர் எவராயினும் நிவாரணம் வழங்குவது அவசியம்

கொஸ்கம, சலாவ இராணுவ முகாமிலுள்ள ஆயுதக்கிடங்கு வெடித்தமையால் ஏற்பட்ட பேரிடரையடுத்து, தமது உறைவிடங்கள் சேதமுற்ற உடைமைகளை இழந்துள்ள மக்கள் தமது வேதனையின் வலியைப் பொறுக்கமுடியாது இராணுவத்தினருடன் மல்லுக்கட்டுகின்ற-வாக்குவாதப்படுகின்ற சம்பவங்கள் கடந்த ஒருவார காலப்பகுதிக்குள் பல தடவைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரச தரப்பிலுள்ளவர்களுக்கு மக்களின் நடவடிக்கை அசௌகரியத்தைத் தந்தாலும், எரிச்சலூட்டுவதாக இருந்தாலும், பாதிக்கப்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற வகையில் கொஸ்கம மக்களின் கோபத்திலுள்ள நியாயப்பாட்டை எம்மால் புரிந்துகொள்ளமுடிகின்றது.

இத்தகைய பேரிடர் நடந்துள்ள நிலையில், தமது நகரத்தினூடாகச் செல்லும் வீதியில் வழமையான போக்குவரத்து இடம் பெறுவதைச் சேதமுற்ற வீடுகளிலிருந்து வெறுமனே பார்த்துக்கொண்டிருக்க அவர்களால் முடியாது. தங்களது வீடுகள் முன்னர் இருந்ததுபோன்று கட்டி முடிக்கப்பட்டு, பழைய செழிப்பான வாழ்க்கை உறுதி செய்யப்பட்டு, உண்மையான விசாரணைகள் நடத்தப்பட்டு, பேரிடருக்கான காரணங்கள் கண்டறியப்பட்டு, அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்போதே அவர்களால் ஆறுதலடைய முடியும்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரால் தமிழ் மக்கள் மீது கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில் இலங்கை அரசு அரங்கேற்றிய கொடிய போரின் விளைவாகச் சொல்லொணாத் துன்பங்களை உயிர் மற்றும் உடைமை இழப்புக்களாலும் உளநிலை அழுத்தங்களாலும் எதிர்கொண்டு நடைப்பிணங்களாக, நம்பிக்கை நலிந்தவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கும் மக்களின் நிலையைத் தென்பகுதியில் வாழ்கின்ற பெரும்பான்மையின சிங்கள மக்களில் அதிகமானவர்கள் அறியாதவர்களாக அல்லது அறிந்துகொள்ள அக்கறையில்லாதவர்களாகவே வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.


நல்லிணக்கத்தின் அவசியம் பற்றி சிங்கள மக்களே அதிகமாக அறியாமல் இருக்கின்றனர். அவர்களிடமே இது விடயத்தில் விழிப்புணர்வு ஊட்ட வேண்டியிருக்கின்றது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே தெரிவித்துள்ள நிலையில், கொஸ்கம பேரிடரால் ஏற்பட்டுள்ள மனமாற்ற இடைவெளியைச் சரியான முறையில் பயன்படுத்திப் போரால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களிலுள்ள நியாயப்பாட்டைப் புரிய வைப்பதற்கும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்கும் காத்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம்.

கொஸ்கமவில் ஏற்பட்ட இடரின் பின்னரே சிங்கள அரசியல்வாதிகள் உட்படப் பலரும் வடக்கு-கிழக்கில் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களின்போது அவர்கள் எப்படிப் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்ற கருத்துகளைப் பொதுமேடைகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், சமூக ஊடகங்களிலும் பகிர்ந்துகொள்வதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையை நாம் துன்பத்தில் நிகழ்ந்த ஆசீர்வாதமாகவே நோக்கவேண்டும். தனக்கு வந்தால்தான் தெரியும் காய்ச்சலும் தலைவலியும் என்பார்கள். இன்று தமது பகுதியில் நிகழ்ந்துள்ள இடரின் பின்னரே தமிழர் பகுதிகளில் இழைக்கப்பட்ட அழிவுகளின் கனதி பற்றிப் பலரும் பேச முனைகின்றனர். ஆயுதங்கள் என்பது அலங்காரப்பொருள்கள் அல்ல. ஆயுதங்களால் பூக்களைத் தூவமுடியாது. அவற்றால் அழிவே ஏற்படும் என்ற விடயத்தைக்கூடக் கொஸ்கம பேரிடரின் பின்னர்தான் அரசியல்வாதிகளில் பலரும் உணர்ந்துகொண்டிருக்கின்றனர். தமிழ் மக்கள் போரின் பெயரால் தம்மீது பல்வேறு வகையிலும் திணிக்கப்பட்ட வலியைப் பொறுத்துக்கொண்டு ஊமைகளாக இருந்துவிடவில்லை. மாறாக, கஞ்சிக்கு வழியில்லாவிட்டாலும், நடக்கச் சீவனே இல்லாத நிலையிலும்கூட இழைக்கப்பட்ட அநீதிக்கான நியாயத்தைக் கோரியும் தமக்குத்தரப்படவேண்டிய நட்டஈட்டை ஒழுங்கான முறையில் தரப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் தொடர்ச்சியாகப் போராடியும் குரல் கொடுத்துக் கொண்டுமே இருந்துவருகிறார்கள்.




இந்நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 32ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ளது. 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு அமைவாக, அடுத்த மாதம் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ள இந்தக் கூட்டத் தொடரில், இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையொன்றை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் ராட் அல் ஹுசேன் சமர்ப்பிக்கவுள்ளார்.

அரசின் இதுவரைகால நடவடிக்கைகளில் நல்லிணக்கம் தென்படவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ள நிலையிலும், பொறுப்புக்கூறல் தொடர்பில் இன்னமும் ஆரம்பகட்ட செயற்பாடுகளே முன்னெடுக்கப்படாத நிலையிலும், ஜெனிவா கூட்டத் தொடரிலும் அதற்கு வெளியிலும் தொடர்ச்சியாக உண்மைகளைத் தெளிவுபடுத்தி உயரிய அழுத்தங்களை ஏற்படுத்துவதற்கும், அதனூடாகத் தமிழ் மக்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கூட்டமைப்பினரும் அக்கறையுடைய சகல தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டியது அவசியமாகும்.



## குத்துச் சண்டை உலகின் விடிவெள்ளி

# முகம்மது அலி

குத்துச்சண்டை உலகின் சிம்மசொப்பனமாக விளங்கிய மாவீரர் முகமது அலியின் மூதாதையர்கள் அமெரிக்காவின் தென்கிழக்கு மாகாணமான கென்டகியில் உள்ள லூயிஸ்வில்லி மாநகரில் அடிமைகளாக வாழ்ந்தவர்கள். பிழைப்புக்காக இசைக்கருவிகள் வாசிப்பதும், இசைப் பாடல்கள் பாடுவதும் இவர்களின் குடும்பத் தொழிலாக இருந்து வந்தது. முகமது அலியும் ஓர் இசைக் கலைஞனாகப் பயிற்சி பெறத்தான் விரும்பினார். ஆனால், அவர் சிறுவனாக இருந்தபோது நடந்த ஒரு சம்பவமே அவரை ஒரு குத்துச் சண்டை வீரராகப் பயிற்சி பெறத்தூண்டியது என்றால் வியப்பாகத்தான் இருக்கும்.


1942ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17ஆம் திகதி பிறந்த கேஸியஸ் மார்செலஸ் க்ளேவுக்கு (முகமது அலியின் இயற்பெயர்) பன்னிரண்டு வயது நிரம்பிய சமயத்தில், அவர் உயிருக்கு உயிராக நேசித்த அவருடைய சைக்கிள் திருட்டுப் போனது. சொல்ல முடியாத ஆத்திரத்துடன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்த முகமது அலி, காவலர்கள் முன்னிலையில் "என் சைக்கிளைத் திருடியவன் மட்டும் என் கையில் மாட் டினால், அவன் முகத்தில் ஓங்கி இப்படிக் குத்துவேன்" என்று முஷ்டியை உயர்த்திக் காட்டினார். இந்தக் காட்சி, ஒரு சிறந்த திரைப்படத்தில் வரும் திருப்புமுனைக் காட்சி போன்று முகமது அலியின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தியது. முகமது அலியின் கடுங்கோபமும் ஆக்ரோசமான முகமும் அங்கிருந்த பொலிஸ் உத்தியோகத்தரான ஜோ இ மார்ட்டினின் மனதில் தைத்தது. "தம்பி, சைக்கிள் திருடனின் முகத்தில் ஓங்கிக் குத்துவதற்கு இந்த உடம்பு போதாது, நீ உன் உடம்பை இரும்பைப்போல் உறுதியாக்க வேண்டும். நானே உனக்கு குத்துச்சண்டைப் பயிற்சி அளிக்கிறேன்" என்று கூறியதோடு நில்லாமல், அன்றே பயிற்சியைத் தரத் தொடங்கினார். பயிற்சியைத் தொடங்கியபோது முகமது அலியின் உயரம் 4அடி 3செ.மீ, எடை 87பவுண்டுகள். சரியாக ஆறு ஆண்டுகளில் முகமது அலி குத்துச்சண்டைக்காக மேடை ஏறிய போது அவரின் உயரம் 6அடி 3செ.மீ, எடை, 212 பவுண்டுகள் வயதோ வெறும் பதினெட்டுத்தான். எவரோ முகம் தெரியாத சைக்கிள் திருடனின் மேல் முகமது அலிக்கு ஏற்பட்ட ஆவேசத்தை சரியான பாதையில் திசை திருப்பிய பயிற்சியாளர் ஜோ இ மார்ட்டீன், முகமது அலியைவிட 26 வயது மூத்தவர். ஆனால், முகமது அலி ஆப்பிரிக்க இனத்தவர் என்ற காரணத்தால், சில உணவு விடுதிகளில் நுழைய அவருக்கு அனுமதி மறுக்கப்படும் சமயங்களில், முகமது அலியைக் காரில் அமர வைத்துவிட்டு, வயது வித்தியாசம் பாராமல் ஜோ இ மார்ட்டீனே அவருக்கு உணவு வாங்கி வந்து தருவார். இந்தப் பாரபட்சமான நிலைமை, 1960 ஆம் ஆண்டு ரோம் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் முகம்மது அலி தங்கம் வென்ற பின் மாறத் தொடங்கியது. அனுமதி மறுத்த விடுதிகள் எல்லாம், முகமது அலிக்குப் பாராட்டு விழாக்களை நடத்தி, நட்சத்திர விடுதிகளாகக் கௌரவம் பெற்றன.

**தன் வாழ்நாளில் 61முறை மேடையேறி, 56முறை வெற்றி கண்ட முகமது அலி, அதில் 37 முறை"நாக் அவுட் பஞ்ச்" மூலம் எதிரிகளை மண்ணைக் கவ்வச் செய்தார்.**

தன் பதினெட்டாம் வயதிலேயே குத்துச் சண்டை உலகின் விடிவெள்ளியாகத் துலங்கிய முகமது அலி, 22ஆவது வயதில், "குத்துச்சண்டை உலகின் ஆபத்தான வீரர்" என்று அறியப்பட்ட சோனி லிஸ்டனை ஏழு சுற்றுக்களில் வீழ்த்தி, அதிர்ச்சித் தோல்வி கொடுத்து, உலகின் ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். அதன் பின் அவருக்குச் சாதனைகள் வந்து குவியத் தொடங்கின.

1967ஆம் ஆண்டு நடந்த வியட்நாம் போரில் அமெரிக்க இராணுவ வீரராக களமிறங்கும்படி அமெரிக்க அரசு முகமது அலியைக் கட்டாயப்படுத்தியது. இதற்கு முகமது அலி மறுத்தார். இதனால், கோபமுற்ற அமெரிக்க அரசு அவரது சாம்பியன் பட்டத்தைப் பறித்ததுடன், நான்கு ஆண்டுகள் அவர் குத்துச்சண்டைப் போட்டியில் பங்கேற்கவும் தடை விதித்தது. போராட்ட குணமே இரத்தமும் சதையுமாகக் கொண்ட முகமது அலி, அந்தத் தடைகளுக்கு அஞ்சாமல், தனக்கேற்பட்ட தடையை உடைத்தெறியும் சட்டப் போராட்டத்தில் ஈடுபட்டார். தொடர்ந்து, இனவெறிக்கு எதிரான போராட்டங்களில் கவனம் செலுத்தினார். 1971ஆம் ஆண்டு முகமது அலிக்கு, அமெரிக்க நீதிமன்றம் போட்டிகளில் பங்கேற்கலாம் என்று தீர்ப்பளித்தது. 1974 ஆம் ஆண்டு ஜோ பிரேசியருடன் மோதி, மீண்டும் உலகின் ஹெவி வெயிட் சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். தன் வாழ்நாளில் 61முறை மேடையேறி, 56முறை வெற்றிகண்ட முகமது அலி, அதில் 37 முறை"நாக் அவுட் பஞ்ச்" மூலம் எதிரிகளை மண்ணைக் கவ்வச் செய்தார். "வெற்றி என்பது ஒருவரின் தனிப்பட்ட சொத்தல்ல. பயிற்சியாலும், முயற்சியாலும் அது எவருக்குமே சாத்தியம்" என்று உலகுக்குரைத்த அந்த மாவீரன், "இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற வீரர்" என்ற பட்டத்தையும் 1999ஆம் ஆண்டில் வென்றார். கடந்த நான்காம் திகதி அன்று தன் 74 ஆம் வயதில் உலக ரசிகர்களைத் துயரத்தில் ஆழ்த்தி மறைந்தார் முகமது அலி.

Noolaham Foundation | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா



**மேடம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணி நிறைவேறும். எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு திீர் சலுகையால் வருமானம் உயரும்.

**இடபம்:** எதிர்பார்த்த சுபசெய்தி தானாக தேடி வரும். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கூடும். குடும்பத்தினருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**மிதுனம்:** புதியவர்களிடம் பழகுவதில் நிதானம் தேவை. தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேற தாமதமாகலாம். மிதமான லாபம் கிடைக்கும். உடல்நலத்திற்காக மருத்துவ சிகிச்சை ஏற்படும்.

**கடகம்:** பெருந்தன்மையுடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும் என்ற மனநிலை உருவாகும். லாபம் மிதமாக இருக்கும். வெளியூர்ப் பயணத்தில் திடீர் மாற்றம் ஏற்படும்.

**சிங்கம்:** யாரிடமும் சொந்த வியம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பு தேவைப்படும். லாபம் சுமாராகவே இருக்கும். குடும்பத்தில் சுபச்செலவு செய்து மகிழ்வீர்கள்.

**கன்னி:** செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் வேலைப்பளு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும் அலைச்சலால் சோர் வுக்கு ஆளாக நேரிடலாம். நண்பர்களின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும்.

**துலாம்:** எதிரி தொல்லை படிப்படியாக மறையும். தொழில், வியாபாரத் தொடர்பு பலம் பெறும். சேமிக்கும் விதத்தில் வருமானம் கிடைக்கும். புதிய உறவினர்களின் அறிமுகம் உண்டாகும்.

**விருச்சிகம்:** நண்பர்கள் எதிர்பார்ப்புடன் நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் இருந்த தேக்க நிலை மறையும். லாபம் படிப்படியாக உயரும். மாணவர்கள் படிப்பில் கூடுதல் கவனம் தேவை.

**தனுசு:** புத்துணர்ச்சியுடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உருவாகும். வருமானம் அதிகரிக்கும். உறவினர் பாசத்துடன் நடந்து கொள்வர்.

**மகரம்:** நண்பர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**கும்பம்:** பரபரப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் தடையனைத்தும் விலகும். ஆதாயம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை காப்பது அவசியம்..

**மீனம்:** யாரிடமும் சச்சரவு கொள்ள வேண்டாம். தொழிலில் ஆதாயம் மிதமாக இருக்கும். சுப விடயத்தில் தாமதம் உண்டாகும். உறவினர்கள் உதவிகரமாக நடந்து கொள்வர்.




# சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | 6 | | | | 8 | |
| 6 | | 8 | 1 | 5 | | | | 4 |
| | | | | | | | 2 | |
| | | 2 | | | 3 | | | |
| | | 3 | 7 | 9 | 1 | 8 | | |
| 8 | | | 2 | | | 1 | | |
| | 8 | | | | | | | |
| 9 | | | | 7 | 2 | 6 | | 8 |
| | 5 | | | | 6 | | 4 | 9 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | 3 | 8 | 4 | 2 | 5 | 1 | 7 | 9 |
| 5 | 1 | 2 | 7 | 9 | 3 | 8 | 6 | 4 |
| 7 | 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 5 |
| 1 | 7 | 5 | 9 | 6 | 4 | 3 | 2 | 8 |
| 4 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 5 | 7 |
| 8 | 2 | 9 | 5 | 3 | 7 | 4 | 1 | 6 |
| 2 | 4 | 6 | 3 | 7 | 9 | 5 | 8 | 1 |
| 9 | 8 | 7 | 2 | 5 | 1 | 6 | 4 | 3 |
| 3 | 5 | 1 | 8 | 4 | 6 | 7 | 9 | 2 |


நேற்றைய சுடோக்கின் விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப் படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தட வைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட் டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப் பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்குஎன்பதுஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண்என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.



## லைக்கா தயாரிப்பில் இணையும்
# விஜய் – மாதவன்

துல்கர் சல்மான், பார்வதி நடித்து மலையாளத்தில் பெரும் வெற்றி பெற்ற படம் 'சார்லி'. இந்தப் படத்தின் தமிழ் ரீ–மேக் உரிமையை கைப்பற்றுவதில் பலத்த போட்டி நிலவி வந்ததாகக் கூறப்படுகிறது. இந்த நிலையில் தற்போது ரஜினி காந்தின் '2.0' படம் உட்பட பல திரைப் படங்களை தயாரித்து வரும் 'லைகா புரொடக்ஷன்ஸ்' நிறுவனம் 'சார்லி'யின் தமிழ் ரீ–மேக் உரிமையை கைபற்றியுள்ளது. அதனை இயக்கும் பொறுப்பு விஜய்யிடம் வழங்கப் பட்டுள்ளது 'இறுதிச்சுற்று' படத்தைத் தொடர்ந்து நல்லகதைகளை தேடி வந்த மாதவனுக்கு 'சார்லி' யில் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்புக்கிடைத்துள்ளது. 'சார்லி' யில் கதாநாயகியாக நடித்த பார்வதியே தமிழ் 'சார்லி' யிலும் கதாநாயகியாக நடிக்க இருக்கிறாராம். விஜய், மாதவன், பார்வதி முதன் முதலாக இணையும் இந்தப்படத்தின்படப்பிடிப்புஅடுத்த வருடம்தான் ஆரம்பமாகுமாம்!









ஊமை ராணி

சந்தோசங்களை அரவணைத்து சோகங்களை துறந்து நண்பர்களிடத்தில் உறவுகளை கண்ட பள்ளிக்காலம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | கொடிகாமம் | பருத்தித்துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 1000 | 900 | 800 |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 400 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 500 | 800 | 500–700 | – |
| பாரை | 550 | 600 | 500 | 650 | 700 | 600 | 500 |
| சுறா | 500 | 700 | 600 | 800 | 1000 | 600 | – |
| சீலா | 300 | 600 | 400 | 800 | 450 | 600 | – |
| விளை | 650 | 600 | 400 | 800 | 400 | 600 | 450 |
| முரல் | 300 | 400 | 350 | 400 | 400 | 400 | 450 |
| கும்பிளா | 400 | 450 | 300 | 450 | 500 | 600 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | – | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 450 | 400 | 400 |
| திரளி | 300 | 300 | 200 | 200 | 300 | 200 | 400 |
| நகரை | 250 | 300 | – | 300 | 400 | 300 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 300 | 150 | 400 | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 300 | 200 | 350 | 400 | 350 | 250 |
| மதனம் | 150 | 300 | 180 | – | 300 | – | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 100 | 100 | 100 | – |
| பாலை | 400 | 300 | 250 | 400 | 600 | 400 | – |
| வாளை | 100 | 200 | 200 | – | 400 | – | – |

# இது புதுசு



## பாத் பேசின்

பாத் பேசின் அறிமுகமாகியுள்ளது. செராமிக்கில் உற்பத்தியான இந்த பேசின், பல்வேறுபட்ட வடிவங்களில் கிடைகின்றன. இவற்றின் விலை 20 ஆயிரம் ரூபாவிலிருந்து 35 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

# பீட்ரூட் கட்லெட்




### தேவையானவை

துருவிய பீட்ரூட் – முக்கால் கோப்பை
கடலை மா – 4 கரண்டி
மிளகாய் தூள் – 1 கரண்டி
சீரகத் தூள் – அரைக்கரண்டி
மசாலா கால் கரண்டி
உப்பு – தேவையான அளவு
மைதா மா – 1 கரண்டி
ரஸ்க் தூள் – தேவையான அளவு,
எண்ணெய் – பொரிப்பதற்கு தேவையான அளவு.

### செய்முறை

ஓர் அகலமான பாத்திரத்தில் துருவிய பீட்ரூட், மிளகாய் தூள், சீரகத் தூள், கடலை மா, உப்பு, மசாலா சேர்த்து நன்றாகப் பிசையவும். இந்தக் கலவை கெட்டியாக இருக்க வேண்டும். தளர்வாக இருந்தால் 1 அல்லது 2 கரண்டி கடலை மாவைச் சேர்த்துப் பிசைந்து கொள்ளவும். ஒரு கிண்ணத்தில் கோதுமை மாவைப் போட்டு [illegible] தண்ணீர் சேர்த்து கட்டி இல்லாமல் கரைத்துக்கொள்ளவும். பிசைந்து வைத்திருக்கும் பீட்ரூட் கலவையைச் சிறுசிறு வட்டமாகத் தட்டி கோதுமைக் கரைசலில் ஒருமுறை அமிழ்த்தி எடுத்து, ரஸ்க் தூளில் நன்கு இரண்டு புறமும் புரட்டி ஒரு தட்டில் வைத்துக் கொள்ளவும். இதை அரை மணி நேரம் குளிர்சாதனப் பெட்டியில் வைத்திருக்கவும். எண்ணெயைக் காய வைத்து, தட்டி வைத்த பீட்ரூட் கட்லெட்களை பொன்னிறமாகப் பொரித்து எடுக்கவும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 150 | – | 120 | 160 | 100 | 120 | – | 80 |
| கத்தரி | 190 | 180 | 160 | 180 | 160 | 200 | – | 180 |
| கரட் | 200 | 250 | 250 | 120 | 240 | 300 | – | 140 |
| மரவள்ளி | 80 | 70 | 80 | 70 | 60 | 80 | – | 50 |
| பயிற்றை | 200 | 180 | 150 | 180 | 160 | 120 | – | 160 |
| பாகல் | 200 | 220 | 200 | 140 | 200 | 200 | – | 160 |
| கருணைக்கிழங்கு | 120 | 120 | 120 | 120 | 120 | – | – | 80 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 90 | 80 | 100 | – | 80 |
| சி.வெங்காயம் | 120 | 160 | 160 | 180 | 150 | 200 | – | 140 |
| பூசணி | 70 | 70 | 80 | 80 | 80 | 100 | – | 80 |
| தக்காளி | 180 | 200 | 220 | 140 | 180 | 200 | – | 160 |
| வாழைக்காய் | 80 | 60 | 60 | 80 | 60 | 80 | – | 40 |
| கீரை | 25 | 40 | 50 | 20 | 40–50 | 40 | – | 50 |
| பொன்னாங்காணி | 35 | 40 | 40 | 45 | 30– 40 | 40 | – | 12 |
| பச்சை மிளகாய் | 600 | 600 | 700 | 600 | 500–600 | 800 | – | 550 |
| புடோல் | 80 | 100 | 80 | 140 | 120–140 | 120 | – | 100 |
| கோவா | 180 | 180 | 180 | 140 | 180 | 220 | – | 140 |
| வெண்டி | 120 | 160 | 160 | 140 | 180 | 200 | – | 60 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 300 | 220 | 240 | – | 240 |
| லீக்ஸ் | 180 | 200 | 150–240 | 140 | 200 | 250 | – | 180 |
| தேங்காய் | 40 | 30 | 40 | 30–35 | 20–30 | 35 | – | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 110 | 100–120 | 100 | – | 120 |
| தேசிக்காய் | 350 | 300 | 250 | 250 | 200–240 | 150 | – | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 20 | 20 | – | 15 |
| கறிமிளகாய் | 200 | 260 | 300 | 140 | 240–300 | 200 | – | 200 |
| இராசவள்ளி | 160 | 160 | 160 | 180 | – | 160 | – | 120 |
| முருங்கைக்காய் | 500 | 220 | 550 | 340 | 300–350 | 300 | – | 200 |

# கண்ணாடிகளைப் பராமரிக்க...



கண்ணாடி அனைவரின் வீட்டிலும் இருக்கும் ஓர் அழகு சாதனம்.கண்ணாடியை விரும்பாதவரை காண முடியாது. கண்ணாடி பிம் பத்தை எதிரொளிக்கும் ஒன்றாக விளங்கு கிறது. கண்ணாடி எப்போதும் பளிச் சென்று இருக்க பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் சில உண்டு.

மெலிதான ஈர துணியில் திருநீறை தொட்டு கண்ணாடியை துடைத் தால் பளபளப்பாக இருக்கும்.

சுண்ணாம்பைதண் ணீரில் கரைத்து அந்த நீரை தொட்டு கண்ணாடி துடைத் தாலும் பளபளப் பாக இருக்கும்.

முகத்திற்கு பூசும் பவுடரை கொண்டு கொஞ்சம் கண் ணாடியில் துடைத் தாலும் பளபளப் பாக இருக்கும்.

## நாளை ஆனி-03

வெள்ளிக்கிழமை - 17.06.2016
திதி: துவாதசி பி.ப.01.03
நட்சத்திரம்: விசாகம் பி.இ.2.56 வரை
ராகுகாலம்: 10.23-11.53 வரை
சுபநேரம்: 05.23-07.23 வரை
பிரதோஷ விரதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நுட்பம்



### இலத்திரனியல் பல்துலக்கி

நவீன தொழில்நுட்பத்தின் புதிய படைப்பாக பல் துலக்குவதற்காக இலத்திரனியல் பல் துலக்கி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதனை அமெரிக்க நிறுவனமான ஓன்வி வெளியிட்டுள்ளது.

இந்த இலத்திரனியல் பல்துலக்கியில் பற்பசையை வைத்து அதனைப் பற்களில் வைத்தால், அது தானாகவே பற்களைத் துலக்க ஆரம்பித்து விடும். இதில் உள்ள சிறப்பம்சம் என்னவென்றால் உங்கள் பற்கள் எந்த அளவு சுத்தம் செய்யப்பட்டுள்ளது என்பதை இதில் பொருத்தப்பட்டுள்ள கமரா மூலம் ஸ்மார்ட் கைத்தொலைபேசியில் பார்த்துக் கொள்ளலாம். இதன் மூலம் எடுக்கப்படும் புகைப்படங்களைத் தேவைப்படும்பொழுது உங்கள் பல் மருத்துவரிடம் காட்டிச் சிகிச்சையும் பெற்றுக்கொள்ளலாம்.

### அப்பிளின் புதிய இயங்குதளம்




நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட இலத்திரனியல்சாதனங்களின்தயாரிப்பில் முன்னணியில் உள்ள அப்பிள் நிறுவனம் சீர்ரா எனப்படும் தனது புதிய இயங்குதளத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இது சர்வதேச மென்பொருள் மேம்பாட்டாளர்கள் மாநாட்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. அமெரிக்காவின் சான்பிரான்சிஸ்கோ நகரில் சர்வதேச மென்பொருள் மேம்பாட்டாளர்கள் மாநாடு கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியது. இதில் அப்பிள் நிறுவனத்தின் சார்பில் நடந்த கூட்டத்தில் அந்த நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி புதிய இயங்குதளத்தை அறிமுகப்படுத்தினார்.

இந்தப் புதிய இயங்குதளம், அப்பிள் கடிகாரம், தொலைக்காட்சி, ஐபோன் மற்றும் மெக் கணினி என்பவற்றை இணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# டி.எஸ்.ஐ. விநியோகஸ்தர் மாநாட்டில் 102 பிரதிநிதிகளுக்கு சிறப்புக் கௌரவம்




டி.சம்சன் அன்ட் சன்ஸ் (தனியார்) நிறுவனம், இவ்வாண்டின் தனது முதலாவது விநியோகஸ்தர் மாநாட்டை அண்மையில் புத்தளத்தில் நடத்தியது. 'வெற்றிக்கான ஓட்டம்' எனும் தலைப்பில் அண்மையில் இந்த நிகழ்வு சிலாபம் கரோலினா பீச் ஹோட்டலில் இடம்பெற்றது. சிறந்த சேவைகளை வழங்கிய 102 பிரதிநிதிகள் இதில் பங்கேற்பதற்காகத் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

நாடு முழுவதும் ஏற்பாடு செய்யப்படவுள்ள இத்தகைய நிகழ்வுகளின் ஓர் அங்கமாகவே இது இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் மிகப் பிரதானமான நோக்கம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள நிறுவனத்தின் விநியோக வர்த்தகப் பங்காளிகளின் சேவைகளைக் கௌரவித்து அங்கீகரிப்பதாகும். மிக முக்கிய நிகழ்வாக, அளப்பரிய பங்களிப்புக்களை வழங்கியமைக்காகப் பத்து விநியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர். மாநாட்டின் ஒரு அங்கமாக, குழு நிலை கலந்துரையாடலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கும் சகல பிரச்சினைகளும் இங்கு ஆராயப்பட்டன.

அவர்களின் கருத்துக்களும் பகிர்ந்து கொள்ளப் பட்டன. ஆலோசனைகள் செவிமடுக்கப்பட்டன. டி.எஸ்.ஐக்கும் அதன் விநியோகஸ்தர் களுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இவை அமைந்திருந்தன. டி.சம்சன் அன்ட் சன்ஸ் (தனியார்) நிறுவனத்தின் பணிப்பாளர் கௌல்ய பெரேரா, பிரதம செயற்பாட்டு அதிகாரி றுவன் கன்னங்கர மற்றும் முகாமைத்துவ பீட சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் விற்பனை, சந்தைப்படுத்தல் பிரிவு அதிகாரிகள், நிறுவனத்தின் பங்காளிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

டி.எஸ்.ஐ உற்பத்தி வரிசையின் புதிய வரவுகளை அறிமுகம் செய்யும் வகையில், கண்ணைக் கவரும் பெஷன்ஷோ ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இவற்றுள் பல விற்பனைப் பங்காளிகளுக்கு அறிவூட்டும் வகையில் அமைந்திருந்தன. டி.எஸ்.ஐ உற்பத்தி வரிசைகள் பற்றிய மேலதிக புரிந்துணர்வை அவர்கள் இதன் மூலம் பெற்றுக் கொண்டனர். (த)

## 85000 மெற்றிக் தொன் நெல்லை சந்தைக்கு விடத் தீர்மானம்

சந்தைப்படுத்தல் சபையிடம் இருந்து 85 ஆயிரம் மெற்றிக் தொன் நெல்லை சந்தையில் விநியோகம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த பருவத்தின்போது சேகரிக்கப்பட்ட குறித்த நெல் தொகை, எதிர்காலங்களில் அரிசியின் விலை உயர்வடையும் சாத்தியத்தை கருத்திற்கொண்டு இவ்வாறு விநியோகம் செய்யப்படவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பான கேள்விகோரல் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என்று நெல் சந்தைப்படுத்தல் சபை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிலையில், இரண்டு லட்சம் மெற்றிக் தொன்னுக்கும் அதிகமான நெல் தற்போது சந்தைகளில் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக நெல் சந்தைப்படுத்தல் சபை தெரிவித்துள்ளது. (த)

## சிங்கர் அறிமுகப்படுத்தும் இணைய திருமண பதிவகம்


சிங்கர் சிறிலங்கா பிஎல்சி, அண்மையில் இடம்பெற்ற விசேட நிகழ்வு ஒன்றில் முதன்முறையாக இணையத் திருமணப் பதிவகம் ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

மிகவும் பாதுகாப்பான இணைய நுழைமுகம் ஒன்றினூடாக, திருமண இணைகள் உலகின் எப்பகுதியிலிருந்தும், தமது சொந்தத் திருமணப் பதிவகத்தை ஆரம்பித்து, நிர்வகிப்பதற்குச் சிங்கர் இணையத் திருமணப் பதிவகம் இடமளிக்கின்றது. நீடித்து உழைக்கும் நுகர்வோர் சாதனங்கள் முதல் தளபாட வகை வரை 30க்கும் மேற்பட்ட உற்பத்திப் பிரிவுகளை உள்ளடக்கியவாறு, சிங்கர் சந்தைப்படுத்துகின்ற ஒட்டுமொத்த உற்பத்திகள் மற்றும் வர்த்தக நாமங்களை இது கொண்டுள்ளது. இதன் மூலமாக திருமண ஜோடிகள் தமக்குத் தேவையான எந்த உற்பத்தியையும் சௌகரியத்துடன் தெரிவு செய்ய முடியும். சிங்கர் திருமணப் பதிவகத்தில் இணையம் மூலமாகத் தம்மை முதலில் பதிவு செய்து கொள்கின்ற முதல் ஐந்து அதிர்ஷ்டசாலித் திருமண இணைகளுக்கு விசேட அன்பளிப்புக் கூடைகள் மற்றும் அன்பளிப்பு வவுச்சர் களைச் சிங்கர் வழங்கவுள்ளது.

சிங்கர் நிறுவனத்தின் இந்த புதிய வழங்கல் தொடர்பாகத் தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்ட அந்நிறுவனத்தின் தொழிற்பாடுகளுக்கான பணிப்பாளரான சந்தன சமரசிங்க, "இன்றைய சமுதாயத்தில், திருமண இணைகள் முன்னெப்போதும் இல்லாதவாறு தொழில்நுட்ப மேம்பாடுகளைத் தழுவி வருவதுடன், தமது வாழ்வின் மிக முக்கிய தினத்தை எதிர்கொள்வதில் திருமணப் பதிவகத்தை இலகுவாக ஏற்படுத்தி, எங்கிருந்தும் இந்தப் பதிவகத்தினுள் நுழைந்து, இலகுவாக இடைத் தொடர்பாடல்களை மேற்கொள்ள முடியும்"-என்றார். (த)

CSE
15/06/2016

| | | | |
|---|---|---|---|
| ASPI | | 6,500.64 | 6,518.08 |
| S&P SL20 | | 3,426.68 | 3,436.06 |
| [illegible] | | 422,823,382 | 826,430,910 |
| [illegible] | | 206,733,439 | 569,728,130 |
| [illegible] | | 384,758,509 | 663,664,100 |
| [illegible] | | 216,089,943 | 236,702,816 |
| [illegible] | | 38,064,873 | 161,886,816 |



பங்குச் சந்தை தகவல்கள்

| [illegible] | | | | |
|---|---|---|---|---|
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.X0000 | 176 | 850,157 | 150,326,685.00 |
| [illegible] | JKH.N0000 | 159.1 | 219,099 | 35,224,454.20 |
| [illegible] | RICH.N0000 | 8.4 | 3,273,099 | 27,714,459.30 |
| [illegible] | ALUM.N0000 | 17.7 | 1,414,585 | 24,768,479.80 |
| [illegible] | TJL.N0000 | 37 | 439,604 | 16,265,386.70 |
| ஹற்றன் நஷனல் வங்கி | HNB.N0000 | 216.5 | 72,654 | 15,729,408.90 |
| [illegible] | AEL.N0000 | 22.5 | 682,861 | 15,505,180.20 |
| [illegible] | CIC.N0000 | 95 | 125,964 | 11,966,660.00 |
| [illegible] | SEYB.N0000 | 90.1 | 124,296 | 11,202,238.60 |
| [illegible] | LLUB.N0000 | 171 | 60,308 | 10,384,358.20 |

அறிவித்தல்கள்

பங்குலாபம்

[illegible] மோட்டார்ஸ் (SMOT) - பங்கு ஒன்றிற்கு Rs. 15.00

[illegible] (CTLD) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.65

[illegible] (HPFL) - பங்கு ஒன்றிற்கு Rs. 1.65

[illegible] (CARG) - பங்கு ஒன்றிற்கு Rs. 2.25

சந்தைக் குறிகாட்டிகள்

| | |
|---|---|
| [illegible] | 294 |
| [illegible] | 216 |
| [illegible] | 13.51 |
| [illegible] | 1.51 |
| [illegible] | 2.79 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அலவி மௌலானா காலமானார்

மூத்த அரசியல்வாதியும், மேல்மாகாண முன்னாள் ஆளுநருமான அலவி மௌலானா கொழும்பில் நேற்றிரவு காலமானார்.
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினராகச் செயற்பட்டவர் அலவி மௌலானா. அத்துடன் ஏராளமான தொழிலாளர் நலப் போராட்டங்களில் ஈடுபட்டு, இலங்கையின் மூத்த தொழிற்சங்கத் தலைவர்களில் ஒருவராகவும் அவர் மதிக்கப்பட்டிருந்தார்.
1994 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த பொதுசன ஐக்கிய முன்னணி அரசில் ஊடகத்துறைப் பிரதியமைச்சராகவும், தொழில் அமைச்சர் மற்றும் உள்ளூ ராட்சி மாகாண சபைகள் அமைச்சராகவும் அவர் செயற்பட்டிருந்தார்.
அதன் பின்னர் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் மேல் மாகாண ஆளுநராக இரண்டு தடவைகள் பதவி வகித்திருந்தார். அண்மையில் சுகவீனமுற்றி ருந்த நிலையில் கொழும்பு தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டிருந்த அலவி மௌலானா, நேற்றிரவு உயிரிழந்துள்ளார். (த-வ-5)

# மின் ஒளியில் துரையப்பா விளையாட்டரங்கு

யாழ்ப்பாணம்,ஜீன் 16
துரையப்பா விளையாட்டு அரங்கு புனரமைப்புச் செய்யப்பட்டு நாளைமறுதினம் சனிக்கிழமை ஜனாதிபதியால் மீளத் திறந்து வைக்கப்படவுள்ளது.
இதனால் நேற்றிரவு அதிக வலுவுள்ள மின்சார விளக்குகள் இயக்கப்பட்டு துரையப்பா விளையாட்டு அரங்கு சுற்றாடல் ஒளிமயமாகக் காணப்பட்டது. (த-வ-17)

## மரபணு

வித்தார்.
வழக்கு விசாரணைகள் தொடர்பான அறிக்கைகள் இன்னும் வரவேண்டியுள்ளதனாலேயே மரபணுப் பரிசோதனை அறிக்கை முடிவைத் தற்போது வெளியிட முடியாது என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.
புங்குடுதீவு மாணவி வித்தியா கூட்டுவன்புணர்வின் பின்னர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போது மரபணுப் பரிசோதனை அறிக்கை முடிவு தொடர்பில் மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டத்தரணி கேட்டிருந்தார்.
கூட்டு வண்புணர்வுக் கொலையின் பின்னர் வித்தியாவின் கண் புருவத்துக்கு மேல் காணப்பட்ட திரவம் மற்றும் முடி என்பனவும் சந்தேகநபர்களின் குருதி மாதிரிகளும் ஒத்துப் போகின்றதா என்பது பற்றிய ஆய்வுக்காக அந்தச் சான்றுப் பொருள்கள் மரபணுப் பரிசோதனைக்கு ஜீன் ரெக் எனும் தனியார் நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.
மரபணுப் பரிசோதனை அறிக்கை சில தவணைகளுக்கு முன்னர் நீதிமன்றிடம் ஒப்படைக்கப்பட்டது. எனினும் அதன் விவரம் இன்னமும் வெளிவரவில்லை. (த-வ-4)

முக்கியமல்ல. இனி எப்படி வாழ இருக்கின்றோம் என்பதே அவசியம் என எடுத்துரைத் தார். இதுவரை காலமும் மற்றவர்களைக் கட்டுப் படுத்த வேண்டுமென்ற நிலையில் இரு இனங் களும் இருந்தன. இனிமேல் கட்டுப்படுத்தவேண்டு மென்ற எண்ணத்தை விட்டு, இணைந்து விடயங் களை முன்னெடுத்துச் செல்ல வேண்டிய நடவடிக் கைகள் பற்றி சிந்தனையுடன் பேசவேண்டும்,
அந்தச் சிந்தனையின் மூலம் அனைத்து இனங் களும் வித்தியாசமான மனோநிலையைக் கொண்டிருக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார். சுவிஸில் முக்கியமாகச் சிறுபான்மை இனத்தினரை மேலெழுப்ப வேண்டுமென்ற அடிப்படை எண்ணம் அரசிடமும், மக்களிடமும் இருப்பதை எடுத்துக் காட்டினார்.
சிறுபான்மை இனத்தவரை வளரவிடாமல் தடுக்க வேண்டும், மேலெழும்பாமல் தடுக்கவேண்டும், அடிமைப்படுத்தி வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் மறைந்துபோய், சுவிஸ் நாட்டைப் பொறுத்தவரை சிறுபான்மை இனத்தவர்களுக் குத்தான் முன்னுரிமை கொடுக்க வேண்டும் சிறு பான்மை இன மக்களை வலுவானவர்களாக்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாக வும் அந்த நாட்டுத் தூதுவர் சுட்டிக்காட்டினார் -என்றார். (த-வ-5-101-106)

## வழங்கிய

விவகாரம் என்பனவற்றில், மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.
புதிய அரசமைப்புத் தொடர்பில் அரசு முன்னேற்றகரமான செயற்பாடுகளை முன்னெடுத்தாலும், அன்றாடம் இடம் பெறும் பல பிரச்சினைகள் காரணமாக, மக்களுக்கு இன்னும் எந்தவித விமோசனமும் திடைக்கவில்லை - என்றார். (த-வ-5)

## சிறுபான்மையினருக்கு

முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் தெரிவித்துள்ளார்.
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனுக்கும், சுவிஸ் தூதுவருக்கும் இடையில் நேற்றுச் சுமார் 2 மணி நேரம், கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இந்தச் சந்திப்பின் முடிவில் ஊடகங்களுக்கு முதலமைச்சர் கருத்துத் தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:
எமது அரசியல் தீர்வுகள் எப்படியானதாக இருக்கக்கூடும். பொருளாதார ரீதியாக மத்திக்கும் மாகாணத்துக்கும் இருக்க வேண்டிய உறவுகள் பற்றியும் தூதுவர் பேசினார். அரசியல் ரீதியான தீர்வைக் காண வேண்டிய சூழ்நிலையில் இலங்கை இருக்கும்போது, மனோநிலை மாறவேண்டுமென்று வலியுறுத்தினார்.
இதுவரை காலமும் எவ்வாறு வாழ்ந்து வந்தோம் என்பது

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 16.12.1931 — மறைவு 19.05.2016

### திருமதி கண்மணி செல்லத்துரை

கடந்த 19.05.2016 இறைபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி கண்மணி செல்லத்துரை அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(16.06.2016) வியாழக் கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் 18.06.2016 சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்திலும் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

வரகு சாட்டி வீதி,
நவாலி வடக்கு, மானிப்பாய். — குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### திருமதி மேரிதிரேசா அல்போன்சஸ்



இளவாலையைப் பிறப்பிடமாகவும், பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரிதிரேசா அல்போன்சஸ் 14.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை அல்போன்சஸ்(புகையிரத திணைக்கள உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர் களான தேவசகாயம், ஜோண்பிள்ளை, அந்தோனிப்பிள்ளை மற்றும் பொன்னு (செட்டிகுளம்), வின்சன்(லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சுலோஜனா மற்றும் றோகினி(லண்டன்), அருமை (லண்டன்), குணம்(பிரான்ஸ்), சாந்தினி (லண் டன்), றோகான் (பண்டத்தரிப்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆனந்தா ஜோசவ், றஜனி (லண்டன்), சாந்தா(பிரான்ஸ்), ராஜன் (லண்டன்), அன்ரனிற்வேணி (ஆசிரியை புனித கென்றியரசர் கல்லூரி -இளவாலை) ஆகியோரின் மாமியாரும் டிலக்ஸன், டயானி, பிரசாந், கிருஷாந், மீரா, ஏவன், யூலியன், அன்ரியா, வினோதினி, ஜெசிக்கா, சுபோதினி, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் அனிஷா, ஹணா, சாமுவேல் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


பொந்தி வீதி,
பண்டத்தரிப்பு.

தகவல்:
றோகான் (மகன்)

076 678 9158

## மரண அறிவித்தல்

### கந்தையா தர்மலிங்கம்



யாழ். மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் 3 ஆம் வாய்க்கால், பரந்தனை நிரந்தர வதிவிடமாகவும், கோரக் கன்கட்டு, நாவலடி, பரந்தனை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தர்மலிங்கம் 14.06.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான வேலணையைச் சேர்ந்த பொன்னையா - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், நாகதேவி (கனடா), நவசீலன் (கனடா), நவநேசன் (நேசன் - பரந்தன்), நவகாந்தி (பிரதம முகாமைத்துவ உதவியாளர் - கச்சேரி வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், நேசரத்தினம் (கனடா) யோகேஸ்வரி (கனடா), சந்திரகலா (பரந்தன்) சண்முகானந்தன் (உதவித்திட்டமிடல் பணிப்பாளர் , பிரதேச செயலகம், வெண்கலச் செட்டிகுளம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் , நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், வினோத் (கனடா), சுதர்சனா (கனடா), றயன் (கனடா), ஹரிஸ் (கனடா), அபிமன் (தேசிய உயர்கல்வி நிறுவகம் - யாழ்ப்பாணம்), சாரங்கன் (நைற்றா - கிளிநொச்சி), ருஷாந் (கிளி/ மத்திய ம.வி), பிரகாஷ், பிரணித் (கிளி.ம.வி) கேதிகா, மயூரிகா (வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலம்), தரணியன் (வவுனியா தமிழ் மத்திய ம.வி) ஆகியோரின் அன்புப் பேரனாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2016) வியாழக்கிழமை அன்னாரது தற்காலிக வதிவிடமான நாவலடி இல்லத்தில் பி.ப. 2.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோரக்கன்கட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொளள்ளவும்.

கோரக்கன்கட்டு,
பரந்தன்.

தகவல்:
குடும்பத்தினர்.

(கே.77) (13.18)

077 198 0988, 076 703 4490

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கேள்வி அறிவித்தல்
### மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

உள்ளூராட்சி மன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மூலதன வேலைத்திட்டம்
வவுனியா வடக்குப் பிரதேசசபை, நெடுங்கேணி.

ஒப்பந்த பெயர் : நெடுங்கேணி மாறாயிலுப்பை வீதி கல்லிட்டுத்தாரிடல்.
ஒப்பந்த இல : **MPCLG/CPILIF/VU/VNPS/W/01**

01. மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சினுடைய உள்ளூராட்சி மன்றங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தல் மூலதன வேலைத்திட்டத்தின் கீழ் நெடுங்கேணி மாறாயிலுப்பை வீதி கல்லிட்டுத்தாரிடல் திட்டத்திற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பெறுகைக்குழு, வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி. தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. கேள்வி பெற தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப் படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி வேலைக்கான இக்ராட் (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை **(Schedule)** பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப் பிரதேச சபை, நெடுங்கேணி (தொலைபேசி: 0242053014, மின்னஞ்சல் - vnpsnk@gmail.com ) இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாள்களில் காலை 09.00 மணி முதல் மாலை 14.00 மணி வரை 08.07.2016ஆம் திகதிவரை கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் இடத்திலிருந்து 16.06.2016ஆம் திகதியிலிருந்து 08.07.2016 வரை காலை 09.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000/-**(வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர்/செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேச சபை, நெடுங்கேணி எனும் முகவரிக்கு 08.07.2016ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித்திகதியிலிருந்து 63 நாள்கள் (அறுபத்து மூன்று நாள்கள் 09.09.2016) வரையும் செல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| கேள்வி எண் | வேலை விவரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| **MPCLG/CPILIF/VU/VNPS/W/01** | நெடுங்கேணி மாறாயிலுப்பை வீதி கல்லிட்டுத்தாரிடல். | 3.557 Mn | 3 Months | C8 or Above | 36,000.00 | 07.10.2016 |

11. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 30.06.2016ஆம் திகதி 14.30 மணிக்கு வவுனியா வடக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர் தமது செலவில் கலந்து கொள்ளமுடியும்.

தலைவர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
வவுனியா வடக்கு பிரதேச சபை,
நெடுங்கேணி.
15.06.2016

(C/22011)(10.17)

# தற்கொலை அங்கி மீட்பு; கைதானார் மற்றொருவர்

யாழ்ப்பாணம், ஜூன் 16

மறவன்புலவில் சில மாதங்களுக்கு முன்னர் தற் கொலை அங்கிகள் உட்பட வெடிப் பொருள்கள் கைப்பற்றப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் மறவன்புலவைச் சேர்ந்த மேலும் ஒருவரைப் பயங்கரவாத விசாரணைப் பிரிவி னர் கைது செய்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கடமையாற்றும் சிவராசா சிவகுலன் (முரளி) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று குற்றஞ்சாட்டப்படும் ரமேஷ் என்பவருடன் தொலைபேசியில் உரையாடினார் எனவும், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் குறித்த ரமேஸுடன் கதைத்த தொலைபேசி இலக்கத்தின் உரிமையாளரான பெண்ணொருவரை விசாரித்தபோது, தனது பெயரில் உள்ள தொலைபேசி சிம் தனது அண்ணனான முரளியினால் பயன்படுத்தப் பட்டுவந்ததெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனால் குறித்த நபரைக் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்கு விசாரணைக்கு எனத் தெரிவித்து அழைத்த பயங்கரவாத விசாரணைப் பிரிவினர், பின்னர் அவரைக் கைது செய்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த நபர் ஈ.பி.டி.பி.யின் சாவகச்சேரி அலுவலகத்திலும் பின்னர் சர்வாவுடனும் இணைந்து அரசியல் பணிகளில் செயற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (த-வ-4-9)

## நீங்காத நினைவுகளுடன்
## 25ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
08 . 06 . 1955



மறைவு
23 . 06 . 1991

### அமரர் சிவப்பிரகாசம் குபேரன்

[ K.S.K பிரபல வர்த்தகர்–ஆஸ்பத்திரி வீதி, சங்கானை]

திதி: 16.06.2016

எமக்கு அன்பு காட்டி ஆரமுதூட்டி பாசம் காட்டி
பண்புகள் புகட்டி உத்தமமாய் வாழ வைத்த
அன்புத் தெய்வமே எம் தந்தை
நீவிர் சென்று கால் நூற்றாண்டுகள் சென்றாலும்
காலமெல்லாம் எம்மோடு கலந்திருப்பீர் மூச்சோடு
எம்மை விட்டு உம் நினைவுகள் என்றும் நீங்காது
உம் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

குபேரன்
குடும்பத்தினர்.

(J.2179) (17.19)

## அகவை இருபத்தொன்றில் ஆறாத
## வடுக்களாய் உன் நினைவுகள்

தோற்றம்
16 . 06 . 1995



மறைவு
06 . 10 . 2012

### அமரர் ஜெயக்குமார் கீர்த்திகன்

[ கொக்குவில் இந்துக் கல்லூரி 2014 கலைப்பிரிவு ]

எம் குல முத்தே கீர்த்தி எமை தத்தளிக்கவிட்டு
எங்கே சென்றாயடா....? உன் குறும்பு கலந்த நினைவுகள்
இன்றும் எம் இதயத்தை வருடுதடா...!
கொக்குவில் இந்துவின் தவப்புதல்வனாய் நீ
கூடிக் குலாவித் திரிகையில்
காலனவன் உனைக்கவர்ந்து சென்றானோ
உன் கீர்த்தி இந்துவில் காலமெல்லாம் நிலைக்க வேண்டுமென்று
உன் நாமத்தில் ஒரு மண்டபம் அமைத்தனரோ...!

அகவை ஏழ் மூன்று ஆனால் என்ன...? ஐ பத்து ஆனால் என்ன..?
எம் இதயங்களில் வாழும் உன் நினைவுகளை அந்தக் காலனால்
கவர்ந்து செல்ல முடியாதடா...! என்றும் நீ வாழ்வாய் பல்லாண்டு
எம் இதயங்களில் நினைவுகளாய்!

நந்தாவில் லேன்,
கொக்குவில்.

என்றும் உன் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

(c.22014 (17.19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எவ்.சி.ஐ.டிக்கு

இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரிக்கவே இந்த விசாரணைப் பிரிவு நிறுவப்பட்டது. ஆனால், இது இறுதியானதல்ல. நிதி மோசடி விவகாரங்களைக் கையாள இலங்கையில் நிரந்தர அலுவலகம் அமைப்போம். இதைவிட அதிகாரமும் - பணிகளும் விரிவாக்கப்பட்டதாக அந்த அலுவலகம் இருக்கும். அதுவரை நிதி மோசடி விசாரணைப் பிரிவு செயற்படும்.

இதன் கால எல்லையை நீடிப்போம். புதிய அலுவலகம் அமைப்பதற்காக நாடாளுமன்றத்தில் சட்டம் நிவேற்றுவோம். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும். இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற வேண்டும். இந்த நடைமுறைகளை நாம் செய்துமுடிக்க 5, 6 மாதங்கள் செல்லும். அதுவரை நிதி மோசடி விசாரணைப் பிரிவு இயங்கும். புதிய அலுவலகம் இந்த வருடத்துக்குள் நிறுவப்படும் - என்றார். (த-வ-5)

## மாணவரின்

ரால் கைது செய்யப்பட்டனர்.

களனிப் பல்கலை கழகத்தில் பகிடிவதையில் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் 7 மாணவர்கள் கைது செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுதலை செய்யுமாறு கோரி ஏனைய மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் கொழும்பில் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்துக்கு நீதிமன்றம் தடைவிதித்திருந்தது. எனினும் கொழும்பு கோட்டையை நோக்கிப் பேரணியாகச் செல்ல மாணவர்கள் முயன்றனர். கோட்டை லோட்டஸ் சந்தியில் வைத்துப் பொலிஸார் அவர்கள் மீது கண்ணீர் புகைத் தாக்குதல் நடத்தினர். தண்ணீரையும் வேகமாக அவர்கள் மீது பீச்சியடித்தனர். இதனால் மாணவர்கள் கலைந்தோடினர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவிகள் மூவர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படும் வரை தமது போராட்டம் தொடரும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் அறிவித்துள்ளனர். (த-வ-5)

## வித்தியா

குத் தேவையேற்படின் பாதுகாப்பும் வழங்கமுடியும் என்றும் நீதிமன்றம் தெரிவித்தது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் குறித்த வழக்கு, நீதிவான் எம்.எம்.றியால் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட 12 சந்தேகநபர்களும் மன்றில் முற்படுத்தப்பட்டிருந்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவு அதிகாரியும் நீதிமன்றில் முன்னிலையாகி வழக்கு நிலமை தொடர்பில் உள்ள தமது தரப்பு நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தினார். சுவிஸ்குமார் பற்றிய விடயமும் அவர்களால் அங்கு முன்வைக்கப்பட்டது.

வழக்கு விசாரணை இன்னும் பூர்த்தியாகாத நிலைமை தொடர்பில் பொதுமக்கள் அதிருப்தி தெரிவிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக்காட்டிய நீதிவான், வழக்கு விசாரணைகளை விரைவில் முழுமைப்படுத்துமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குப் பணித்தார்.

“இந்தப் படுகொலை, அதனுடன் தொடர்புடைய சம்பவங்கள் தொடர்பில் பொதுமக்கள் தகவல் தெரிந்திருந்தால், அது பற்றி நேரடிச் சாட்சிகள் யாராவது இருந்தால், அவர்கள் சாட்சியமளிக்க விரும்பினால் சொல்ல முடியும். அவ்வாறு சாட்சி சொல்ல விரும்புபவர்கள் நேரடியாக நீதிமன்றுக்கு வந்து சாட்சி சொல்ல முடியும். நீதிமன்றில் அதற்கேற்ற தனிப்பட்ட இடத்தில் வைத்துச் சாட்சியத்தை பதிவு செய்ய முடியும்.

அதுமட்டுமன்றிப் பொலிஸ் நிலையத்துக்கும் சென்று சாட்சி சொல்லமுடியும். இரகசியம் பாதுகாக்கப்படும். அவ்வாறு சாட்சி சொல்பவர்கள் யாருக்காவது பாதுகாப்புத் தேவை எனின் அதற்கான பாதுகாப்பு ஒழுங்கும் செய்து தரப்படும்” என்று நீதிவான் மன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கில் 4 ஆவது சந்தேகநபர், தனக்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படுவதாகக் கோரினார். தேவையேற்படின் அவருக்குச் சிகிச்சை வழங்குமாறு நீதிவான் சிறைச்சாலை அத்தியட்சகருக்குப் பணித்தார். வழக்கு எதிர்வரும் 29 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 12 பேரில் முதல் 9 பேரினதும் விளக்கமறியல் யாழ்.மேல் நீதிமன்றினால் எதிர்வரும் ஒகஸ்ட்10 ஆம் திகதி வரை ஏற்கனவே நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் மே 13 ஆம் திகதி புங்குடுதீவு மாணவி வித்தியா பாடசாலைக்குச் சென்றபோது கடத்தப்பட்டுக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்யப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து குறித்த சந்தேக நபர்கள் வெவ்வேறு நாள்களில் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்துக்கும் மேலாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (த-வ-4)

## சிமெந்து

வதற்கான ஏற்பாடுகள் தொடர்பில் ஆராயும் கூட்டம், பலாலி கட்டளைத் தலைமையகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

மீள்குடியேற்ற அமைச்சர் சுவாமிநாதன் முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்தில், வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இன்னமும் 14 ஆயிரம் குடும்பங்கள் மீளக் குடியமர்த்தப்படவேண்டியுள்ளன என்று தெரிவித்திருந்தார்.

இந்தக் குடும்பங்களில் 11 ஆயிரம் குடும்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்திலேயே வாழ்கின்றன. ஆயிரத்து 109 குடும்பங்கள் தெல்லிப்பழை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 31நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றன. இந்த ஆயிரத்து 109 குடும்பங்களில் 641 குடும்பங்கள் சொந்தக் காணி இல்லாத குடும்பங்களாக அறிக்கையிடப்பட்டுள்ளன.

இந்தக் குடும்பங்களை மீளக் குடியமர்த்துவதற்கு காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான 65 ஹெக்டேயர் காணி அடையாளம் காணப்பட்டுள்ளது. அதில் 400 குடும்பங்களை உடனடியாக மீளக் குடியமர்த்த முடியும். மேற்படி காணியை விடுவித்து அதனை அரச உடைமையாக்கி உடனடியாக மக்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பலாலியில் இடம்பெற்ற கலந்துரையாடலில், யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன், மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், தெல்லிப்பழை பிரதேச செயலர் க.சிறிமோகனன், வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், மின்சார சபையினர், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனக் காணியில் குடியமர்த்தப்படவுள்ள மக்களுக்கு, மீள்குடியேற்ற அமைச்சினால் வீடுகள் வழங்கப்படும். அந்த வீடுகளை இராணுவத்தினர் கட்டிக் கொடுப்பார்கள். மேலும் ஏனைய அடிப்படை வசதிகள் உடனடியாகவே செய்து கொடுக்கப்படும் என்று மேற்படி கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (த-வ-5)

## இம்முறையும்

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவை நாம் மிகவும் இலகுவாக எதிர்கொள்வோம். அனைத்த நாடுகளும் எம் மீது நம்பிக்கை கொண்டுள்ளன. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனநாயகத்தின் சம்பியன், கப்டன் என்று கொலம்பிய நாட்டு ஜனாதிபதி புகழ்ந்துள்ளார்.

அதுமட்டுமன்றி, மனித உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவது தொடர்பில் ஏனைய உலக நாடுகள் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கற்றுக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் குறிப்பிட்டார்.

இவ்வாறான சூழ்நிலையில், எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. சர்வதேச நாடுகள் ஆரம்பத்தில் பார்த்ததைப் போன்று இப்போது எம்மைப் பார்க்கவில்லை. புதிய கண் கொண்டு பார்க்கின்றன. எமது செயற்பாடுகளுக்குச் சர்வதேசத்தின் மத்தியில் வரவேற்பு உள்ளது. நல்ல புரிந்துணர்வும் உள்ளது. இந்த முறையும் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் எமக்குப் போதுமான கால அவகாசம் கிடைக்கும். எந்தப் பிரச்சினையும் இல்லை - என்றார். (த-வ-5)

## கொழும்பு

கலனில் திடீர்த் தீ ஏற்பட்டது. எனினும் அது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகக் கொழும்பு துறைமுகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீ விபத்துக்கான காரணம் நேற்றிரவுவரை கண்டறியப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

இந்தியா நோக்கிப் புறப்படுவதற்காக, கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த கப்பல் ஒன்றில் கொள்கலனில் நேற்றுக்காலை திடீரெனத் தீ பரவியுள்ளது. இதனையடுத்து கொழும்புத் தீயணைப்புப் பிரிவு மற்றும் துறைமுகத் தீயணைப்புப் பிரிவு என்பன இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதில் சுமார் 50 இற்கும் அதிகமான தீயணைப்புப் படையினர் தீயணைப்புப் பணியில் ஈடுபடுத் தப்பட்டனர்.

இந்த நிலையில் கப்பலில் ஏற்பட்ட தீ நேற்றுமாலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகக் கொழும்புத் துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர். எனினும் தீ விபத்துக்கான காரணம் நேற்றிரவு கண்டறியப்படவில்லை எனக் குறிப்பிட்ட பொலிஸார், விசாரணைகள் தொடர் வதாகவும் கூறினர்.

குறித்த கப்பலில் பற்றிகள் ஏற்றப்பட்டதாகத் தெரிவித்துள்ள துறைமுக அதிகாரியொருவர், தீ விபத்துக் சம்பவத்தால் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லையெனக் குறிப்பிட்டுள்ளார். (த-வ-5)


## கண்ணீர் அஞ்சலி

எமது அமைச்சில் சாரதியாகக் கடமையாற்றும்

**திரு. பி.நவாஸ்கன்** அவர்களுடைய பாசமிகு தந்தையார்

**மாணிக்கம் பிறைசூடி**

அவர்கள் 11.06.2016 அன்று இறைபதம் அடைந்தார். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**செயலாளரும் உத்தியோகத்தர்களும், மீன்பிடி போக்குவரத்து அமைச்சு - வடமாகாணம்.**

## மரண அறிவித்தல்கள்



**வீரகத்திப்பிள்ளை கணபதிப்பிள்ளை**

புற்றளை, புலோலியைப் பிறப்பிடமாகவும், மாவடி வளவு, நவிண்டிலை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை கணபதிப்பிள்ளை நேற்று(15.06.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், வீரகத்திப்பிள்ளை-இலட்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், இளங்கோ (ஆசிரியர், யா/மணற்காடு றோ.க.த.க. பாடசாலை) கலையரசி ஆகியோரின் அன்புத் தந்தையும், செந்துமதி (ஆசிரியை / யா/தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை), கமல்ராஜ் (இ.போ.ச. பருத்தித்துறைச்சாலை) ஆகியோரின் அன்பு மாமனும், ரதுஷன், பவித்ரா, சபிரா, கோபிசன், மிருத்திகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2016) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மாவடி வளவு, கரணவாய் வடக்கு, நவிண்டில்.
021 226 2069 / 0773451725

தகவல்: குடும்பத்தினர்.

(C/22017(0.17)

**திருமதி சிவலோகநாயகி வைத்தீஸ்வரன்**



ஆசிரியர் வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வண்ணார்பண்ணை மற்றும் பிரான்ஸ் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவலோகநாயகி வைத்தீஸ்வரன் 09.06.2016 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர் களான கந்தையா - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், வைத்தீஸ்வரனின் அன்பு மனைவியும், கௌசிகன், பிரதீசன் ஆகியோரின் பாசமிகு தாயும், சுப்பிரமணியம் (கனடா), சிவபாதம் (பிரான்ஸ்),தேவயோகினி, செல்வேந்திரன் (அவுஸ்திரேலியா), பரிமளகாந்தி (அவுஸ்திரேலியா), சுகிர்தா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.06.2016) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு பிரான்ஸில் நடைபெற்று பூதவுடல் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

தொடர்பு:


| | |
|---|---|
| சிவபாதம் - பிரான்ஸ் | - + 3363 55 75585 |
| கணேசமூர்த்தி - பிரான்ஸ் | - + 3363 44 30173 |
| குகதாஸ் - பிரான்ஸ் | - + 3362 1735 796 |
| குமாரதாஸ் - பிரான்ஸ் | - + 3365 2742407 |
| சிவதாஸ் - பிரான்ஸ் | - + 3366 151 8891 |

(சி.66) (13.18.17)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரசிகர்கள் மோதல் எதிரொலி; ரஷ்ய நாட்டவர் வெளியேற்றம்

ரஷ்ய ரசிகர்களைப் பிரான்ஸில் இருந்து வெளியேற்ற ஐரோப்பிய கால்பந்து சம்மேளனம் திட்டமிட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



யூரோ கிண்ணத் தொடர் பிரான்ஸில் நடைபெற்று வருகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் ரஷ்யா, இங்கிலாந்து அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டம் முடிந்த பிற்பாடு இரு நாட்டு ரசிகர்களுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. மைதானத்துக்கு வெளியிலும் மோதல் தொடர்ந்தது. இதில் 31பேர் படுகாயமடைந்ததாகவும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் சம்பவத்துடன் நேரடித் தொடர்பு உடையதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் மோதலுக்கு காரணமாக இருந்த ரஷ்ய ரசிகர்களைப் பிரான்ஸைவிட்டுவெளியேற்ற ஐரோப்பியக் கால்பந்து சம்மேளனம் திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது. அவ்வாறாக வெளியேற்றப்பட்டால் கிட்டத்தட்ட 50 பேர் வெளியேறுவார்கள்.

தமது ரசிகர்களைக் கட்டுப்படுத்தத் தவறியமைக்காக ரஷ்ய அணிக்கு ஒரு இலட்சத்து 69 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளது. யூரோ கிண்ணத் தொடரில் நடைபெறும் ரசிகர்கள் மோதலில் பெரும்பாலானவற்றில் ரஷ்ய ரசிகர்கள் தொடர்புடையவர்களாக உள்ளார்கள். இறுதியாக நடைபெற்ற யூரோ கிண்ணத் தொடரில் ரஷ்யா, ஐஸ்லாந்து ரசிகர்களிடையே மோதல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இலங்கை - அயர்லாந்து ஒருநாள் ஆட்டம் இன்று

இலங்கை - அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான இரு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் இன்று நடைபெறவுள்ளது.

மத்தியூஸின் தலைமையில் திரிமன்னே, சந்திமல், குசல் பெரேரா, குணதிலக, தரங்க, தனஞ்சய டி சில்வா, எரங்க், நுவான் பிரதீப், சுரங்க லக்மல், குசல் மெண்டிஸ், தசுன் சானக, மஹரூப், ரண்டிவ், சீக்குகே பிரசன்ன ஆகியோர் இலங்கை அணியில் இடம் பிடித்துள்ளனர்.

மஹரூவ், தரங்க இரு அனுபவ வீரர்களும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளதால் இலங்கை பலமான அணியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதே நேரம் சகலதுறை வீரரான சிறிவர்தனவின் நீக்கம் சமூக வலைத்தளங்களில் சில விவாதங்களைத் தோற்றுவித்துள்ளது. உடற்தகுதி இல்லாத காரணத்தால் சிறி வர்தன நீக்கப்பட்டாலும் அவரை விட மோசமான பெறுபேற்றை வெளிப்படுத்தி வரும் திரிமன்னே அணியில் தொடர்கின்றமையே இந்த விவாதங்களுக்கான காரணமாகச் சொல்லப்படுகிறது. (ம)

## மழையால் வந்தது வினை புலம்புகிறார் பரிஸ்ரெளவ்



இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டத்தில் மழை குறுக்கிடாமல் விட்டிருந்தால் இங்கிலாந்து வெற்றிபெற்றிருக்கும் என பரிஸ்ரெளவ் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மூன்று ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதல் இரு ஆட்டங்களிலும் இங்கிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இந்த நிலையில் லோட்ஸில் நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் 115 பந்துப் பரிமாற்றங்கள் வீசக் கூடிய நிலையில் இலங்கைக்கு இலக்காக 362 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. ஆனால் இலங்கை 78-1 என்ற நிலையில் இருந்த போது மழை குறுக்கிட்டமையால் ஆட்டம் சமநிலையானது. இந்த நிலையிலேயே மழை குறுக்கிடா விட்டால் இங்கிலாந்து வெற்றி பெற்றிருக்கும் என்று பரிஸ்ரெளவ் தெரிவித்தார்.

முதல் இரு ஆட்டங்களிலும் இலங்கை வெளிப்படுத்திய பெறுபேற்றுக்களின் அடிப்படையில் பரிஸ்ரெளவ்வின் கருத்துச் சரியாக அமைந்தபோதிலும், மூன்றாவது டெஸ்ட்டில் இலங்கை மிகச் சிறந்த போராட்ட குணத்தை வெளிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

**யங்ஹென்றிஸ் வி.க. தொடர்**

யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் கால்பந்தாட்டத் தொடர், சென்.ஹென்றிஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் சென். லூசியஸ் அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணி மோதவுள்ளது. இரவு 8.15 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து மன்னார் சென்.ஜோசப் அணி மோதவுள்ளது.

**எவரெஸ்ட் வி.க. தொடர்**

எவரெஸ்ட் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகிறது. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பாசையூர் சென்.அன்ரனிஸ் அணியை எதிர்த்து நெடியகாடு இளைஞர் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளவாலை சென்.லூட்ஸ் அணியை எதிர்த்து கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி மோதவுள்ளது.

**கழுகுகளின் தொடர்**

கழுகுகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சக்கோட்டை சென். சேவியர் அணியை எதிர்த்து அல்வாய் மனோகரா அணி மோதவுள்ளது.

**அண்ணா வி.க. தொடர்**

இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து உடுவில் ஆலடி சிந்து அணி மோதவுள்ளது.

**யாழ். லீக்கின் கால்பந்தாட்டம்**

யாழ். கால்பந்தாட்ட லீக்கால் நடத்தப்பட்டுவரும் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்டப் பயிற்சிநிலைய மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் விக்னேஸ்வரா அணியை எதிர்த்து சென். மைக்கல் அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புத்தூர் எவரெஸ்ட் அணியை எதிர்த்து பாரதி அணி மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் அணி மோதவுள்ளது. (ம-108-23)

## வென்றது பல்கலை

யாழ்ப்பாணம் ஜூன்16

எவரெஸ்ட் வி.கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் பல்கலைக்கழக அணி வெற்றிபெற்றுள்ளது.

எவரெஸ்ட் வி.கழக மைதானத்தில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் கொலின்ஸ் அணியை எதிர்த்து யாழ். பல்கலைக் கழக அணி மோதியது. இதில் பல்கலைக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## கரப்பந்தாட்ட முடிவுகள்



யாழ்ப்பாணம், ஜூன் 16

குமுழமுனைசென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் அண்ணா, சிறிகாமாட்சிஅம்பாள், குறிஞ்சிஅணிகள் வெற்றிபெற்றுள்ளன.

தொடர், அன்ரனிஸ் கழகத்தின் கரப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் முதலாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி அண்ணா அணியை எதிர்த்து கிளிநொச்சி ஆதவன் அணி மோதியது. இதில் அண்ணா அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். சிறிகாமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதியது. இதில் சிறி காமாட்சி அம்பாள் அணி 2:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றது. மூன்றாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் வட்டக்கச்சி குறிஞ்சி அணியை எதிர்த்து கிளிநொச்சி ஆதவன் அணி மோதியது. இதில் வட்டக்கச்சி குறிஞ்சி அணி 2:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## அண்ணா வி.கழகத்தின் மரதன், சைக்கிளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 16

இணுவில் அண்ணா சனசமூக நிலையத்தின் 64ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் மரதன், சைக்கிளோட்டம் ஆகிய போட்டிகளை நடத்தவுள்ளது.


வடமாகாண ரீதியாக நடத்தப்படவுள்ள இந்தப் போட்டிகளில் ஆண்களுக்கான மரதன் ஓட்டம் எதிர்வரும் சனிக்கிழமையும், சைக்கிள் ஓட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையும் நடை பெறவுள்ளன. மரதன் ஓட்டம் 15 மைல் தூரம் கொண்டதாகவும், சைக்கிள் ஓட்டம் 70 மைல் தூரம் உடையதாகவும் நடைபெறவுள்ளன. குறித்த போட்டிகளில் கலந்துகொள்ள விருப்பமுடையவர்கள் இணுவில் அண்ணா சனசமூக நிலையத் தலைவர் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-23)

## மாகாணமட்ட கரம் தொடர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 16

பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்டக் கரம் போட்டிகள் யாழ். மத்திய கல்லூரியில் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன. 15வயது, 19வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் இன்றும், 15வயது, 19வயது பிரிவு பெண்களுக்கான போட்டிகள் நாளையும் நடைபெறவுள்ளன. (ம-108-23)

## ஐ.பி.எல். வருமானம் 2ஆயிரத்து 500 கோடி



நடப்பு வருட ஐ.பி.எல். தொடரின் மூலம் 2ஆயிரத்து 500கோடி வருமானம் கிடைத்துள்ளதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது. தொலைக்காட்சி ஒளிபரப்பு உரிமங்கள், விளம்பரங்கள், நுழைவுச்சீட்டு விற்பனை, பொருள்கள் விற்பனை மூலம் இந்த வருமானம் பெறப்பட்டுள்ளது. இந்த வருமானம் கடந்த ஐ.பி.எல். தொடர்களை விட மிகவும் அதிகமாகும். கடந்த தொடரை விடவும் 12 சதவீதம் அதிகம். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வென்றது நீக்கிலஸ்

யாழ்ப்பாணம், ஜூன் 16
யாழ். லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் சென். நீக்கிலஸ் அணி வெற்றி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணியை எதிர்த்து ஒலிம்பியா அணி மோதியது. இதில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை 5 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். ஐக்கிய அணியை எதிர்த்து ஞானகலா அணி மோதியது. இரு அணிகளும் கோல்கள் எதனையும் பதிவுசெய்யாத நிலையில் ஆட்டம் சமநிலை கண்டது. (ம-23)

# சென்.மேரிஸ் முன்னேற்றம்

கரணவாய், ஜூன் 16
இமையாணன் வி.கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சென். மேரிஸ் வி.கழகம்.

யாழ். மாவட்ட ரீதியாக நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு ரோயல் அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் அணி பலப்பரீட்சை நடத்தியது. கோல்கள் எவையும் பதிவாகாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் எவையும் பதிவாகவில்லை. இதனால் சமநிலைத் தவிர்ப்பு உதைக்கு ஆட்டம் செல்ல 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது சென். மேரிஸ். (ம-108)



# மாகாண மட்ட கரப்பந்தாட்டம்; வயாவிளான் மத்தி. சம்பியன்

கரணவாய் ஜூன் 16
மாகாண மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 19 வயதுப் பெண்கள் பிரிவில் வயாவிளான் மத்திய கல்லூரி சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத் திடலில் நேற்று நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் வயாவிளான் மத்திய கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் பலப்பரீட்சை நடத்தின. மூன்று செற்களைக்கொண்ட இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றிய வயாவிளான் மத்திய கல்லூரி இரண்டாவது செற்றையும் 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முடிவில் 2:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை தனதாக்கியது. (ம-108-422)

# யாழ்ப்பாணக் கல்லூரி –சென். ஜோன்ஸ் இறுதியில்

யாழ்ப்பாணம், ஜூன் 16
பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட ரென்னிஸ் தொடரில் 19 வயதுக்கு உட்பட்ட ஆண்கள் பிரிவின் இறுதியாட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியும் இன்று மோதவுள்ளன.

சென். பற்றிக்ஸ் ரென்னிஸ் திடலில் நேற்று இடம்பெற்ற அரையிறுதிகளில், முதலாவதில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து இணுவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. இரண்டு ஒற்றையர் ஆட்டங்களையும் ஒரு இரட்டையர் ஆட்டத்தையும் கொண்ட இந்த அரையிறுதி ஆட்டத்தில் 2:1 என்ற செற் கணக்கில் சென். ஜோன்ஸ் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவது அரையிறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் அணி மோதியது. இதில் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இறுதிக்குத் தகுதி பெற்றது யாழ்ப்பாணக் கல்லூரி அணி. இந்த இரு அணிகளுக்கு இடையிலான இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. (ம-23)

# உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் வென்றது கிண்ணம்

கரணவாய், ஜூன் 16
மாகாண மட்ட கரப்பந்தாட்டத் தொடரில் 15 வயது பெண்கள் பிரிவில் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயமும் கோப்பாய் மகா வித்தியாலயமும் பலப்பரீட்சை நடத்தின. ஆட்டத்தின் முதல் செற்றை 25:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம் தொடர்ந்து தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி இரண்டாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது. இதனால் அந்த அணி மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. மூன்றாமிடத்தை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி தனதாக்கியது.(ம-108-422)

# அன்ரனிஸ் வி.கழக முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 16
குமுழமுனை சென்.அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றிபெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

முதலாவதாக இடம்பெற்ற இளந்தளிர் அணிக்கும் பள்ளிக்குடா ஜொலி போய்ஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் ஆட்ட நேர முடிவில் தலா ஓர் கோலைப் பெற்றதால் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. இதில் இளந்தளிர் அணி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இரண்டாவதாக இடம்பெற்ற இரணைமாதா நகர் சென்.மேரிஸ் அணிக்கும் திருநகர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் சென். மேரிஸ் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மூன்றாவதாக இடம்பெற்ற பூநகரி ஐயனார்புரம் அணிக்கும் வலைப்பாடு ஜெகமீட்பர் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜெகமீட்பர் அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

நான்காவதாக இடம்பெற்ற கிளிநொச்சி உதயதாரகை அணிக்கும் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் தலா ஓர் கோலைப் பதிவு செய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதில் கிளிநொச்சி உதயதாரகை அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஐந்தாவதாக இடம்பெற்ற கிளிநொச்சி ஸ்கந்தா அணிக்கும் கிளிநொச்சி உதயதாரகை அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரு அணியினரும் கோல் எதனையும் பெறாதமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகள் வரை ஆட்டம் நீடித்துச் சென்றது. இதில் உதயதாரகை அணி 7:6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)



# வயாவிளான் மத்தி. சம்பியன்

கரணவாய், ஜூன் 16
மாகாண மட்ட கரப்பந்தாட்டத்தில் 17 வயதுப் பெண்கள் பிரிவிலும் வயாவிளான் மத்திய கல்லூரி சம்பியனாகியது.

நெல்லியடி மத்திய கல்லூரி கரப்பந்தாட்டத் திடலில் நேற்று இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு கலைமகள் வித்தியாலயமும் வயாவிளான் மத்திய கல்லூரியும் மோதின. மூன்று செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தின் முதலிரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் சம்பியனாகியது வயாவிளான் மத்திய கல்லூரி. மூன்றா மிடத்தை பருத்தித்துறை சென்.தோமஸ் வித்தியாலயம் தனதாக்கியது. (ம-108-422)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிம்பாப்வேயை வெள்ளையடித்தது இந்திய இளம் படை

**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பம் ஒன்றிற்கு சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை. யாழ் புகையிரத வீதி மற்றும் யாழ் புனித மரியன்னை (O.L.R)தேவாலயத்தை அண்டிய பகுதி விரும்பத்தக்கது.

077 9672613, 077 0083491

மூன்றாவது ஒருநாள் ஆட்டத்திலும் சிம்பாப்வேயை வீழ்த்தி வெள்ளையடிப்புச் செய்தது இந்திய இளம் படை.





இந்தியா – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் சிம்பாப்வேயின் ஹராரே மைதானத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மசகட்சாவை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் குல்கர்னி. சிப்கபா, சிபன்டா இணை பிறிதொரு இலக்கை கொடுக்காமல் 50 ஓட்டங்கள் வரை தாக்குப் பிடித்தது. இருவரையும் வெளியேற்றினார் சாஹல். மத்திய வரிசை வீரர்களிடத்தில் வித்தையைக் காட்டினார் பும்ரா. அவர் மருமா, சிக்கும்புரா, முதும்பானி, முபரிவா நால்வரையும் வீழ்த்த 123 ஓட்டங்களில் சுருண்டது சிம்பாப்வே.

பந்துவீச்சில் இந்தியாவின் சார்பாக பும்ரா 4 இலக்குகளையும், சாஹல் 2 இலக்குகளையும், குல்கர்னி, அக்சர் பட்டேல் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்தியாவுக்கு ஆரம்பமே அம்சமாய் அமைந்தது. ராகுல், பசல் இணையை சிம்பாப்வேயின் பந்துவீச்சாளர்களால் வீழ்த்தி விட முடியவில்லை. இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்று இருவரும் ஆளுக்கொரு அரைச்சதமும் கடந்த பிற்பாடும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. முடிவில் இலக்குகள் இழப்பின்றி சிம்பாப்வேயை வீழ்த்தியது இந்தியா. லோகேஸ் ராகுல் 63 ஓட்டங்களுடனும், பசல் 55 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காதிருந்தனர். ஆட்டநாயகனாக பும்ராவும், தொடராட்ட நாயகனாக ராகுலும் தெரிவானார்கள்.

**இந்தியா 3, சிம்பாப்வே 30**

இந்தத் தொடரின் மூன்று ஆட்டங்களையும் சேர்த்து இந்தியா மூன்று இலக்குகளை மட்டுமே இழந்துள்ளது. சிம்பாப்வே மூன்று ஆட்டங்களிலும் சகல இலக்குகளையும் (30 இலக்குகள்) இழந்துள்ளது. இத்தனைக்கும் சிம்பாப்வேயின் பயிற்சியாளரான நிட்னி ஓர் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர். (ம)

Galaxy Star
வெற்றி வாரம் 066 திகதி 15.06.2016
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
09 14 17 26 53
அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 58,73,140/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2774 திகதி 15.06.2016
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
06 14 21 38 I
போனஸ் இல. 37
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 1,05,93,550/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
2016.06.18 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அருந்துங்கள் விருந்து சைவம் - அசைவம்
தினமும் மதியம்- இரவு போசனம்
மதி மறவா இல்லற உணவு சுவை.
(காலை உணவு முற்பதிவுடன்)
இன்சுவை ஒடியல் கூழ்
புதன் - சனி - ஞாயிறு
(J 1972)(12.18)
விருந்து @யாழ்பாடி
49 - 51, அம்மன் வீதி, நல்லூர்.யாழ்ப்பாணம்.
021 222 6868/ 075 9875 800/
077 7360 353

## கூறுவிலை கோரல்

யாழ். மாநகரசபை நவீன சந்தை கட்டடத் தொகுதிகளுக்கு இலவசமாக வர்ணம் பூசுவதற்கு விருப்பமுடைய வழங்குநரைத் தெரிவு செய்வதற்காக கூறுவிலைகள் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களிடம் இருந்து பின்வரும் நிபந்தனையின் அடிப்படையில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* ஒரே நிறத்தினாலான மென்வர்ணம் பூசுதல் வேண்டும். மென்வர்ணம் தொடர்பில் சபையின் தீர்மானமே இறுதியானதாகும்.
* கட்டடத்தின் வெளிப்புற சுவர்களுக்கு வானிலை கவச (Weather Shield) தரமுடைய தீந்தையே பூசுதல் வேண்டும்.
* தீந்தை பூசும் வேலையானது மாநகரசபையின் மேற்பார்வையின் கீழ் செய்யப்படுதல் வேண்டும்.
* சபையினால் அடையாளப்படுத்தப்பட்ட நான்கு இடங்களில் 10'X 5'அளவுடைய விளம்பரங்களை காட்சிப்படுத்தலாம்.
* ஒரு வருடகாலத்திற்கு மேற்படி காட்சிப்படுத்துவதற்கான ஒப்பந்தம் செல்லுபடியாகும்.
* விளம்பரங்கள் பொதுமக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாதவாறு தயாரிக்கப்படல் வேண்டும். நிறுவப்பட்ட பின் அசௌகரியங்கள் ஏற்படுவதாக காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தம் இரத்து செய்யப்படுவதோடு விளம்பரங்கள் அகற்றப்படும்.
* ஆணையாளரால் தீர்மானிக்கப்படும் குழுவின் சிபார்சின் அடிப்படையில் தெரிவு செய்யப்படும் விண்ணப்பித்த நிறுவனங்களிலிருந்து ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர். குழுவின் முடிவு இறுதியானதாகும்.

சுயமாக தயாரிக்கப்பட்ட கோரிக்கையை 04.07.2016 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். தேர்வுக்கான குலுக்கல் 05.07.2016 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு நடைபெறும்.

வழங்குநரை ஏற்றுக் கொள்ளும் அல்லது காரணம் காட்டாது நிராகரிக்கும் உரிமை சபைக்கு உண்டு.

பொ. வாகீசன்
ஆணையாளர்,
யாழ்.மாநகரசபை.

**விற்பனைக்கு**
வவுனியாவில் FZS மோட்டார் சைக்கிள் 19000Km ஓடிய நிலையில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 7585920

**விற்பனைக்கு**
கொப்பறா அரைக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
077 389 3559

**பாலன் மில்/ வேலையாள்கள் தேவை**
தேங்காய் எண்ணெய், நல்லெண்ணெய் ஆலை. கொப்பறா, எள், இலுப்பைப் பருப்பு (விதை கோது உடைத்து). சூரியகாந்தி விதை போன்றவற்றை 3 கிலோ முதல் 3000 கிலோ வரை தனித்தனி இயந்திரத்தில் அரைத்து எண்ணெய்யாக உடன் ஊற்றித்தரப்படும்.
பாலன் மில்லினால் தயாரிக்கப்பட்ட சுத்தமான கலப்படமற்ற தேங்காய் எண்ணெய், பைகளில் அடைக்கப்பட்ட தரமான அரிசி வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம். (c 22013)(17.19)
பாலன் மில்
மாவடிச்சந்தி, வட்டுக்கோட்டை.
021 321 2624
(மில்லில் வேலை செய்யக்கூடிய வேலையாள்களும் தேவை)

PART TIME JOBS
நீங்கள் பகுதி நேரமாக வேலை செய்ய விரும்பும் பெண்ணா?
உங்களுக்குரிய சிறந்த பகுதிநேர வேலைவாய்ப்பினைப் பெற இன்றே நாடுங்கள்
WINSTAR JOB BANK
(முன்னணி வேலைவாய்ப்பு ஆலோசனை நிலையம்)
தகைமைகள்:- ❖கணினி அறிவு, ஆங்கில அறிவுடையவர்கள்.
❖அதிவேக இன்ரநெற் இணைப்புடன் கூடிய கணினி வைத்திருப்பவர்கள்.
❖Facebook, twitter உபயோகப்படுத்த தெரிந்தவர்கள்.
❖ 25 வெற்றிடங்கள் மாத்திரமே உள்ளன
புதிய வேலைவாய்ப்பினில் இணைந்து வீட்டிலிருந்தவாறே மேலதிக வருமானத்தினை பெற இன்றே பதிவு செய்யுங்கள். (பதிவுக்கட்டணம் உண்டு)
(C/22015)(10.17)
WINSTAR JOB BANK
#106, தபாற்பெட்டிச் சந்தி, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 320 2789
070 236 3676
fb: winstarjaffna
Web:www.winstarjaffna.com

## ஆட்டம் சமநிலையில்

யூரோ கிண்ணத் தொடரில் நேற்று நடைபெற்ற போர்த்துக்கல்–ஐஸ்லாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது.

ஐஸ்லாந்தை விட போர்த்துக்கல் பலமான அணியென்பதால் ஆட்டத்தின் முடிவு போர்த்துக்கலுக்கு சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதற்கேற்ப போர்த்துக்கலின் ஆரம்பமும் அந்த நாட்டு ரசிகர்கள் மார் தட்டிக் கொள்ளும் படியாகவே அமைந்தது. ஐஸ்லாந்தின் முயற்சிகளை ரொனால்டோ தகர்த்தெறிந்தார். 40 ஆவது நிமிடத்தில் ஆந்திரேயின் கோலால் போர்த்துக்கலின் கோல் கணக்கு ஆரம்பமானது. ஆனால் இரண்டாவது பாதியில் பெரும் போராட்டம் காட்டியது ஐஸ்லாந்து. 50ஆவது நிமிடத்தின் போது ஐஸ்லாந்து வீரர் ஜொஹான் பெர்க்பதில் கோலை விளாசி அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தார். அதன் பின்பு அயர்லாந்து வீரர்கள் ரொனால்டோவிடம் பந்து செல்லக் கூடாது என்பதில் தெளிவாய் இருந்தனர். வெற்றியும் கண்டனர். முடிவில் 1:1 என்று ஆட்டம் சமநிலையானது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.06.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.